DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1422 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 7, 2023

## வடக்கு கிழக்கில் எமது மக்கள் கௌரவமாக வாழ்ந்த இடங்களை நாமே ஆட்சி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்



“வடக்கு கிழக்கில் எமது மக்கள் கௌரவமாக வாழ்ந்த இடங்களை நாமே ஆட்சி செய்ய வேண்டும் என்பதில் . உறுதியாக உள்ளோம்ன. அத்துடன்
எமது மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை பெற வேண்டும் என்றால் பேச்சுவார்த்தைக்கு போவதை தவிர எங்களுடைய கைகளில் வேறு ஆயுதங்கள் இல்லை. எனவே பேச்சுவார்த்தைகளும் நாங்கள் பாராளுமன்றத்தில் செய்யும் வாதங்களுமே எம்மிடம் உள்ள ஆயுதங்கள். இதை அனைவரும் உணர வேண்டும்““
இவ்வாறு தெரிவித்தார் இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.
(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

## இலங்கையில் கடுமையான குற்றவாளிகள் அரசியல் அதிகாரத்தின் காரணமாக விடுதலையாகிவிடுகின்றனர் என்கிறார் ஜேவிபி தலைவர் அநுரகுமார



இலங்கையில் கடுமையான குற்றவாளிகள் அரசியல் அதிகாரத்தின் காரணமாக விடுதலையாகிவிட. சிறிய குற்றங்களில் ஈடுபடும் சாதாரண குடிமக்கள் நீதித்துறையால் வலைவீசப்படுகின்றனர்.
அத்துடன் பொருளாதாரக் குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தற்போதுள்ள சட்டங்களே போதுமானது என மீண்டும் வலியுறுத்தியுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, நாட்டில் நிலவும் மோசமான அரசியல் கலாசாரத்தினால் பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் நேற்று வியாழக்கிழமை இலங்கைப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் உரையர்றறிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.
(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2023



## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

**230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7**

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள் பொற்பூண்.
பைங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்.
பொங்கிய ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

Email: bramptonbhuvaneswari@gmail.com

www.Bhuvaneswariamman.ca

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிரம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஸ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம் தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 11ம் தேதி (25-06- 2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதி உத்திர நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.00 மணிக்குள் துவங்கி அடியார்கள், தொண்டர்கள், உற்சவ உபயதாரர்கள் அனைவரும் சடங்குகளாக கீழே உள்ள பட்டியலில் உள்ள நிகழ்வுகளை அறிந்து, ஸ்ரீ புனேஸ்வரியின் பூரண அருள் பெற்று, சகல செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**24-06-2023 சனிக்கிழமை மாலை: அனுக்ஞை கணபதி பூஜை கணபதிஹோம் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி. அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்கிரஹணம். யாகசாலை நிர்மாணம் நடைபெறும்.**

| 25-06-2023 | 30-06-2023 | 07-07-2023 | 08-07-2023 | 09-07-2023 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | வெள்ளி | வெள்ளி | சனி | ஞாயிறு |
| கொடியேற்றம் | மஞ்சம் | சப்பறம் | தேர்த்திருவிழா | தீர்த்தம் |

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்



### காலை திருவிழா

காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நாபன கும்ப பூஜை. மூலவர். அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை. கொடிஸ்தம்பபூஜை
யாகபூஜை
மதியம் 11.30 மணி
வசந்தம்டப பூஜை. யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

### மாலை திருவிழா

5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை. ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.

### சர்வபோதகம்

சிவமரத்னா: சிவஸ்ரீ.வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
மஹோற்சவ குருமார்கள்: சிவஸ்ரீ. மகேஸ்வர குருக்கள்
சிவஸ்ரீ. இராதாகிருஷ்ண குருக்கள்
சிவஸ்ரீ. கௌசிக் குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு :
தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம்
அங்கபிரதக்ஷணம் காவடி கற்பூர சட்டி எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

தேவஸ்தான மங்கள இசை:
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:
திரு. அருந்தவராசா (Harini Foods)
திரு. பாலா (ஐஸ்வரியம் ஸ்டோர்ஸ்)
ஆலய நிர்மான ஸ்தபதி: விஸ்வபிரம்ம திரு. குணாளன்

என்றும் ஸ்ரீபுவனேஷ்வரி ஸம்ருதியில்
சிவமரத்தினம்: சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

**உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அணுகவும்**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கிழக்கு மாகாண ஆளுனர் விழாக்களைத் தவிர்த்து விழுந்து கிடக்கும் மக்களின் நலன்களைக் கவனிக்க வேண்டும்

இலங்கையின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்கவென ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் குழும்ப வாரிசான செந்தில் தொண்டமானை கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக ரணில் விக்கிரமசிங்க நியமனம் செய்தமை தமிழ் மக்கள் வரவேற்ற ஒரு விடயமாக இருந்தது.

மலையக மக்களின் பிரதிநிதி ஒருவர் கிழக்கு மாகாணத்தின் மக்களின் நலன்களைக் கவனிக்க வந்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் புட்டும் தேங்காய்ப் பூவும் போல வாழ்ந்து வருகையில் செந்தில் தொண்டமான் அந்த மக்களின் தேவைகளைக் கவனிக்கும் ஒரு கவனராக பணியாற்றுவார் என்ற நம்பிக்கை துளிர்த்து நின்றது.

ஆனால் பதவியேற்று சில மாதங்களிலேயே அவர் தான் கல்வி கற்ற தமிழ்நாட்டிற்குச் சென்று அங்குள்ள சில அரசியல்வாதிகளைச் சந்தித்து பின்னர் கருணாநிதியின் பேரன் உதயநிதியைச் சந்தித்து வந்தார்.

அவர் ஆளுனராகப் பதவி வகிக்கும் கிழக்கு மாகாணத்தில் எவ்வளவோ பணிகள் காத்துக்கிடக்க தன் அலுவலகத்திற்கு வந்த உடனேயே கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவை கிழக்கு மாகாணத்தில் கொண்டாட உள்ளதாக அறவிப்பு ஒன்றை விடுத்தார். அதற்காகத்தான் அவருக்கு ஆளுனர் பதவியை ரணில் வழங்கினாரா என்று மக்கள் கிழக்கில் கேள்விகளை தொடுத்த வண்ணம் உள்ளார்.

செந்தில் தொண்டமான் தான் சார்ந்த மலையகத்தில் சில அரசியல் பதவிகளை வகித்தவர். என்பது அனைவருக்கும் தெரியும். மலையக தோட்டத் தொழிலாளர்களில் முக்கால்வாசிப் பேர் தங்கள் வாழ்க்கையை நடத்தும் அளவிற்கு ஊதியம் அற்றவர்களாக உள்ளார்கள் என்பது அவருக்குத் தெரியும். தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் தங்களை வளர்த்துக் கொண்டு மந்திரிப் பதவிகளையும் பெற்றுக் கொண்டு கொழும்பு வாசிகள் வாழ்ந்து வருகின்ற அவர்களுக்கு தங்கள் சொந்த மலையக மக்களின் துயர் துடைக்கும் வழிகள் தெரியவில்லை. தற்போது மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் காற்று மற்றும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தோட்டப் புற மக்கள் வசித்த வீடுகள் அழிக்கப்பட்ட நிலையில் திண்டாடுகின்றார்கள்.

கிழக்கில் பல்வேறு பிரச்சனைகளை அனுபவித்து துன்பத்தில் நிழலிலேயே வாழ்ந்து வரும் மக்களின் துயர் செந்தில் தொண்டமானுக்கு புரியவில்லை.

தனக்கு முன்னாள் காத்துக்கிடக்கும் மக்கள் பணிகளை மறந்து விட்டு தமிழகத்தின் கருணாநிதி குடும்பத்தின் நட்பைப் பெற்றுக்கொள்வதற்காக அவரது நூற்றாண்டு விழாவை கொண்டாடும் எண்ணம் அவரிடத்தில் உதித்துள்ளது.

ஆனால் செந்தில் தொண்டமான். கருணாநிதிக்கு கிழக்கு மாகாணத்தில் நூற்றாண்டு விழா எடுக்க விருப்பம் தெரிவித்தமைக்கு கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது.

கருணாநிதிக்கு நூற்றாண்டுவிழா நடத்த கிழக்கு மாகாணத்திற்கு எந்தவிதமான தேவையும் இல்லை என மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகத் அறிக்கைகள் வெளியிட்டுள்ளார்கள் இது தொடர்பில் அவர்கள் உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் உரையாடும் போது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அத்தகைய விழாவை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

அத்துடன். வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் கடந்த பல சகாப்தங்களாக இனப்படுகொலைகளுக்கு உள்ளான போதெல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுக்காமல் இருந்ததோடு மட்டுமல்ல இறுதி யுத்தத்தின் பின்னர் கருணாநிதியின் புதல்வி கனிமொழி இலங்கைக்குச் சென்று மகிந்த ராஜபக்சாவைச் சந்தித்து பரிசுகளையும் பெற்றுச் சென்றவர் என்பதையும் கிழக்கு மாகாண மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள்

2009, மே,18 அன்று முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற அதுவரையிலும் வடக்கு கிழக்கு தமிழர்கள் பல இலட்சம் மக்கள் மாண்டபோதும் முதலமைச்சர் கருணாநிதிக்கு போரை நிறுத்தவோ, தமிழ்மக்களை காப்பாற்றவோ எண்ணம் எழவில்லை என்ற ஒரு கோபம் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு" என்றும் மேற்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் கருணாநிதிக்கு விழா எடுப்பதைத் தவிர்த்து விழுந்து கிடக்கும் கிழக்கின் மக்களின் நலன்களைக் கவனிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இவ்வாரக் கதிரோட்டத்தில் நாம் பதிவு செய்கின்றோம்.

முன் பக்கத் தொடர்ச்சி..

## இலங்கையில் கடுமையான குற்றவாளிகள் அரசியல் அதிகாரத்தின்...

பாராளுமன்றத்தில் ஊழல் தடுப்பு சட்டமூலம் மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் பேசிய அவர், தற்போதுள்ள சட்டங்களான பொதுச் சொத்துச் சட்டம், பணமோசடி தடுப்புச் சட்டம், இலஞ்சம் அல்லது ஊழல் தடுப்புச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் போன்ற சட்டங்களே பொருளாதார குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை தடுக்க
போதுமானவை எனவும் தெரிவித்துள்ளார்.

சிறிய குற்றங்களில் ஈடுபடும் சாதாரண குடிமக்கள் மட்டுமே நீதித்துறையால் வலைவீசப்படுகின்றனர் என்றும், அதேசமயம் கடுமையான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அரசியல் அதிகாரத்தின் காரணமாக விடுதலையாகி விடுவதாகவும் தெரிவித்தார்.

"தேங்காய் திருடியதற்காக ஒருவர் பிடிபட்டார், பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் இலஞ்சம் வாங்கிய கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் அது எப்படி வரும்? நாட்டில் நிலவும் மோசமான அரசியல் கலாசாரமே தவிர, சட்டத்தில் பிரச்சினை இல்லை. இது பெரும்பான்மையான அரசியல் அதிகாரம், ஒரு சில உயர் அதிகாரிகள், பல பொலிஸ் அதிகாரிகள், பல தொழில் அதிபர்கள் மற்றும் ஊடக அதிபர்களை உள்ளடக்கிய ஒரு தீய வட்டம். இது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தீய வட்டம். வலுவான அரசியல் அமைப்பினால் மட்டுமே இதற்கு தீர்வு காண முடியும், சட்டங்களால் மட்டும் அல்ல," என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன் பக்கத் தொடர்ச்சி..

## வடக்கு கிழக்கில் எமது மக்கள் கௌரவமாக வாழ்ந்த இடங்களை நாமே ஆட்சி செய்ய வேண்டும்...

இணைய ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில்,அரசியல் தீர்வுக்காக ஏங்கி கொண்டிருக்கும் எமக்கு இரண்டு வழிகள் தான் உள்ளன.முதலாவது இந்த நாட்டில் எமது மக்களுக்கு எந்த உரிமையும் தேவை இல்லை. சிங்கள மக்கள் சொல்வதையே நாங்கள் கேட்டுக்கொண்டு வாழ வேண்டும் என்று வாதம் செய்கின்றவர்களோடு நாமும் வாதம் செய்ய வேண்டும். மேலும் பெரும்பான்மை இனத்தவர்கள் நீங்கள் நினைத்தபடி விகாரை அமையுங்கள். தமிழர்களின் காணிகளை அபகரித்து, யாரை வேண்டுமானாலும் குடியேற்றுங்கள். நாங்கள் தெற்கில் வாழும் தமிழர்கள் போன்று சிறுபான்மையாக வாழ்கின்றோம் என்று எது நடந்தாலும் ஏற்றுக்கொள்வது.முடியாது

தொடர்ச்சியாக எமது பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் நாம் பேசிக்கொணடே இருப்போம் என்றார் சாணக்கியன் எம்.பி.

**TELEMARKETERS WANTED**

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாக உரையாடக் கூடிய TELEMARKETERS உடனடியாகத் தேவை.
தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
416 754 9492

**தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன.
ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி.
மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி.
பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது.
இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன.
மின்னினைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி -
கனடா- 905 554 3435

**Basement for Rent**

Pickering நகரத்தில் Dixie/Glenanna சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 3 அறைகள் கொண்ட Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. ஒரு Parking வழங்கப்படும். Brand New Basement for Rent with 3 bedrooms and 2 full washrooms. Separate walk-up entrance. Separate Laundry in basement. Close to schools, 5 mins drive to Pickering Town Centre, grocery stores, go transit, and shopping
விபரங்களுக்கு: 647 648 4598

**கொழும்பில் வீடு விற்பனைக்கு**

கொழும்பு-13 கொட்டாஞ்சேனையில் புளுமெண்டால் வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியில் 2ம் மாடியில் அமைந்துள்ள. ஒரு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.
தொடர்புகளுக்கு 647 779 1712 என்னும் கனடா இலக்கத்தை அழைக்கவும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மக்களும் ஊடகங்களும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



(01-07-2023)

கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் முறையான ஆய்வுகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகின்றனவே தவிர, தான்தோன்றித்தனமாக எவையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுயநல சந்தர்ப்பவாதிகளின் கூக்குரல் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் விழிப்புணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் 01.07.2023 அன்று நடைபெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு விடயம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "வடக்கு மாகாணத்திலே எமது மக்களின் வாழ்வாதாரங்கள் கருதி, ஏற்கனவே ஒரு சிலர் மாத்திரம் பயன்பெற்று வந்திருந்த கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலை நாம் பரவலாக்கி இதுவரையில் பல நூற்றுக் கணக்கான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கியிருக்கின்றோம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற அடிப்படையில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை சார்ந்து நாம் பல்வேறு புதிய திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம். "கறுப்புத் தங்கம்" எனப்படுகின்ற கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலானது எமது மக்களின் பொருளாதாரத்தில் அதீத செல்வாக்கு செலுத்த ஆரம்பித்ததும், சில தமிழ் அரசியல்வாதிகள் முதற்கொண்டு, சில சுரண்டல்வாதிகள் அதற்கெதிரான கருத்தாடல்களை முன்வைத்து வருகின்றனர்.

மக்களின் அவலங்களுக்கு தூபமிடுபவர்கள், ஆசை காட்டி தமது எவலாளர்களை தூண்டி விடுகிறார்கள். அதன் மூலம் உயர்ந்த இலட்சிய கோபுரங்களை உடைத்து வீழ்த்தி குட்டிசுவர்களாக்கி விடலாம் என கனவு காண்கிறார்கள். தம்மால் முடியாததை அடுத்தவன் செய்தால் அதைத்தடுக்க தகிடு தித்தி தாளம் போடுவது தமிழ் தேசியம் அல்ல.

நாங்கள் தமிழ் தேசத்தின் விடியலுக்காக நீதியான வழியில் இரத்தமே சிந்தியவர்கள். தமிழ் தேசியத்தை வெறும் தேர்தல் கோசமாக ஒரு போதும் உச்சரித்தவர்கள் அல்ல.

நாங்கள் அரசியல் யதார்த்த சூழலை உணர்ந்து தேசிய நல்லிணக்க பாதையில் வெளிப்படையாகவே அணிவகுப்பவர்கள், எக்காலத்திலும் அரசுடன் பின் கதவு தட்டி பேசியவர்கள் அல்ல. அல்லது தென்னிலங்கையை தூண்டி விட்டு அதில் குளிர் காய, தமிழர் தேசத்தில் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்களும் அல்ல. மாகாணசபை முறைமையில் இருந்து முன்னோக்கி செல்வதே நடைமுறை சாத்தியம் என்ற எமது தீர்க்கதரிசனத்தை ஏற்றுக்கொண்டது போல், அல்லது - அதை ஏற்க மாட்டோம் ஆனாலும் அதில் பங்கெடுப்போம் என்ற மறைமுக ஆதரவு கொடுப்பது போல். எல்லா விடயங்களிலும் இதய சுத்தியோடு செயலாற்ற முன் வாருங்கள்.

விளக்கங்களை கோரும் மக்களுக்கு குழப்பங்களை உருவாக்குவதை நிறுத்துங்கள்.

சில தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும், விளக்கமில்லாதலும் - விளக்கமிருந்தும் விளங்காதது போன்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல், மக்களது வாழ்வாதாரங்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்களுக்கு நன்மைகள் கிட்டும் போது அதைத் தடுத்து நிறுத்தி, எமது மக்களை தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொண்டு, அரசியல் செய்வதும், தமது பிழைப்புகளை முன்னெடுப்பதும் இவர்களது நோக்கமாக இருக்கின்றது.

நாங்கள் முறையான ஆய்வுகளுக்கூடாகவே திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அன்றி, தான்தோன்றித் தனமாக எதையும் முன்னெடுப்பதில்லை. வெளிப்படையான தன்மை கொண்டவையாகவே இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடலட்டை, இறால், நண்டு, கடல் பாசி, சிப்பி போன்ற நீர் வேளாண்மைக் கைத்தொழில்களை ஒருவர் மேற்கொள்ள வேண்டுமெனில் முதலில் அவர், அத் தொழிலினை மேற்கொள்கின்ற பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடம் அது சார்ந்த கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை(நெக்டா), கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அடங்கலாக கள ஆய்வு நடத்தப்பட்டு, கடற்றொழில் அமைச்சு அதன் சாதக, பாதகங்களை ஆய்வு செய்த பின்னரே குறித்த நபருக்கு நீர் வேளாண்மைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

இதனை விளங்கிக் கொள்ளாமல் சுயலாப அரசியலுக்காக சிலர் கூக்குரல் இடுவது தொடர்பில் எமது மக்களும் தமிழ் ஊடகங்களும் விழிப்புடனும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்" குறித்த நாடாளுமன்ற உரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது-

# யுத்தத்தில் ஒன்றரை இலட்சம் அப்பாவி பொதுமக்களை கொலை செய்தார்கள் – கஜேந்திரன் எம்.பி மீண்டும் குற்றச்சாட்டு



போரில் நடைபெற்ற சரியான விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டுமாக இருந்தால் முழுமையான ஒரு சர்வதேச விசாரணை நடைபெற வேண்டும். இவ்வாறு ஒரு விசாரணை நடைபெற்றால் தான் நாங்கள் இடம்பெற்ற முழு சம்பவங்களையும் வெளி கொண்டுவர முடியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

இன்றையதினம் அவர் தையிட்டி போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவேளை ஊடகவியலாளர் ஒருவர், "இன்று யாழில் மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில், விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் உயிரிழந்தாரோ அல்லது உயிருடன் உள்ளாரோ என எனக்கு தெரியாது. இதன் போது நான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். இருப்பினும் குறித்த விடயம் தொடர்பாக மேல்மட்டங்களுக்கே அறிவிக்கப்பட்டது என்ன கூறியிருந்தார். இதுகுறித்து தங்களது கருத்து எவ்வாறு அமைகிறது" என செல்வராஜா கஜேந்திரனை வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேன பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், மஹிந்த ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சராக இருந்த போதும் அவர்களுடைய படைகள் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்திருக்கின்றார்கள். சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட இரசாயனக் கொண்டுகள் மற்றும் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தி அந்தப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இவை அனைத்திற்கும் சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே நாங்கள் விடைகளை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார்.

# புத்த பகவானுடைய அருமையான கோட்பாடுகள் மீறப்படுகிறன – சட்டத்தரணி சுகாஷ் ஆதங்கம்



தையிட்டியில் அமைந்துள்ள சட்ட விரோதமான திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. எமது உணர்வுகளுக்கு மேலும் சுமையும் துன்பங்களும் ஏற்படுத்துகின்ற வகையில் இந்த சிங்கள பௌத்த பேரினவாதம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டவேளை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கவில்லையே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய தொடர் போராட்டத்திற்கு சாதகமான பதில் இற்றைவரை பொறுப்பு வாய்ந்த எவரிடம் இருந்தும் எமக்கு கிடைக்கவில்லை. எனவே நமக்கு வேறு மாற்றங்களோ வேறு உபாயங்களோ கிடையாது.

எமது மக்களுடைய எதிர்கால இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், சட்டவிரோத சிங்கள ஆக்கிரமிப்புகளை தடுப்பதற்காகவும் மீண்டும் தையிட்டியிலே எங்களது போராட்டத்தை தொடர வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்ற விடயம், சிங்கள மக்களையோ பௌத்த மதத்தையோ நாங்கள் வெறுக்கவில்லை. பௌத்தத்தை நாங்கள் நேசிக்கின்றோம் சிங்கள மக்களை நாங்கள் விரும்புகின்றோம். அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்கின்றோம். நாங்கள் தாழ்மையாக கேட்பது, நாங்கள் எவ்வாறு உங்களை மதிக்கின்றோமோ, உங்களது உணர்வுகளை புண்படுத்தாது செயற்படுகின்றோமோ அதேபோல் நீங்களும் நடந்து கொள்ளுங்கள்.

சிங்கள மக்களே நீங்கள், சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு அரசுக்கு அழுத்தத்தை கொடுங்கள். ஏனென்றால் தமிழ் மக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் சிங்கள சகோதரர்களுடைய, பௌத்த மதத்தவர்களுடைய வாழிடத்தை அழித்து அங்கே நாங்கள் எங்களது அடையாளங்களை பதிக்கவில்லை. பதிக்கப் போவதும் இல்லை. ஏனென்றால் நாங்கள் சிங்கள மக்களையும் விரும்புகின்றோம், பௌத்த மத போதனைகளையும் விரும்புகின்றோம்.

ஆனால் இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது புத்த பகவானுடைய அருமையான பௌத்த கோட்பாடுகளும் மீறப்பட்டு, அகிம்சைக்கு முரணாக இராணுவமும், சிங்கள பௌத்த பேரினவாதமும் தமிழ் மக்களுடைய காணிகளை ஆக்கிரமித்து ஒரு சட்ட விரோதமான கட்டடத்தை இங்கே கட்டி இருக்கின்றார்கள். அதற்கு எதிராகத்தான் நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். இந்த சட்டவிரோத கட்டடம் அகற்றப்படும் வரை எங்களது போராட்டம் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் பளுதூக்கல் போட்டியில் தேசிய ரீதியில் சாதனை!









கேகாலை பிலிமத்தலாவை மத்திய கல்லூரியில், கடந்த 01-07-2023 அன்று, இலங்கை பாடசாலை பளுத்தூக்கல் சங்கம் தேசிய பளுதூக்கல் போட்டியை நடத்தியது.

இந்த தேசிய மட்ட பளுத்தூக்கல் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை தங்கப்பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கத்தை தட்டிச் சென்றது.

அந்தவகையில் செல்வி வி. ஜெஸ்மினா 18 வயதுப்பிரிவு 71 கிலோ எடைப்பிரிவில் 92 கிலோகிராம் இனை தூக்கி தங்கப்பதக்கமும், செல்வி இ.ரம்மியா 20 வயதுப்பிரிவு 55 கிலோ எடைப்பிரிவில் 65 கிலோகிராம் இனை தூக்கி வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார்கள்.

யாழ். மண்ணிற்கும், பெற்றோருக்கும், கற்ற பாடசாலைக்கும் பெருமையை தேடித்தந்த இந்த மாணவிகளை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்தாரா என எனக்கு அறிவிக்கப்படவில்லை – முன்னாள்பதில் பாதுகாப்பு அமைச்சர் மைத்திரி

இலங்கை செய்திகள்
Sri Lanka News



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்தாரா? எனக்கு அறிவிக்கப்படவில்லை - முன்னாள்பதில் பாதுகாப்பு அமைச்சர் மைத்திரி.

பிரபாகரனின் மரணம் தொடர்பில் எனக்கு எவ்விதமான தகவல்களும் வழங்கப்படாமல் மேல்மட்டங்களுக்கு அது தொடர்பில் தகவல்கள் வழங்கப்பட்டதாக அக்கால பகுதியில் பதில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நான்கு நாட்கள் சுற்றுப்பயணமாக கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த முன்னாள் ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்தார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணு அறிக்கையை பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிட முடியாது என செய்திகள் வெளிவந்தன.

அக் காலப்பகுதியில் பதில் பாதுகாப்பு அமைச்சராக நீங்களே செயற்பட்டதால் யுத்தத்தில் பிரபாகரன் உயிரிழந்தாரா? அல்லது சுட்டுக் கொல்லப்பட்டாரா? ஏன் அவரது மரபணு அறிக்கையை வெளியிட முடியாது என கூறுகிறார்கள் என கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதில் அளித்த மைத்திரிபால சிறிசேன பிரபாகரனின் மரணம் தொடர்பில் எனக்கு அறிவிக்கப்படவில்லை உயர் மட்டங்களில் இருந்தவர்களுக்கே தெரியும் என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த மற்றொரு ஊடகவியலாளர் நீங்கள் ஜனாதிபதியாக இருந்த போது இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் இறுதி யுத்தத்தை வெற்றி கொண்ட பங்கு என்னையே சாருமென கூறினீர்கள் அவ்வாறு கூறிய உங்களுக்கு பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பில் தெரியாதா? என கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதிலளித்த மைத்திரிபால சிறிசேன நான் பதில் பாதுகாப்பு அமைச்சராக சிறிது நாட்களே கடமை ஆற்றினேன் அவரது இறப்பு விடயம் தொடர்பில் எனக்குத் தெரியாது என பதிலளித்தார்.

# நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் முத்தேர் இரதோற்சவம் சிறப்பாக இடம்பெற்றது





வரலாற்று சிறப்புமிக்க பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் பதின்நான்காவது திருவிழா ஆகிய முத்தேர் இரதோற்சவம் இன்று வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இவ் ஆலய கொடியேற்றம் 19.06.2023 அன்று இடம்பெற்று, பதினாறு தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் ஜுலை 03ம் திகதியன்று தீர்த்தோற்சவமும், ஜுலை 04ஆம் திகதியன்று தெப்போற்சவமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் இனிதே மஹோற்சவம் நிறைவடையும்.

இதில் நயினாதீவு நாகபூசணி அம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை உள்ளிட்ட தெய்வங்கள் இரதத்தில் வீற்று பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

இதில் பல பாகங்களில் வருகைதந்து பக்தர்களின் பக்திபூர்வமாக அருள்கடாச்சத்தினை பெற்றுச்சென்றனர். அத்துடன் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தனி ஒருவருக்காக யாழ்ப்பாணத்தில் கண்ணீர் மழை பொழிந்த ஆயிரக்கணக்கான நெஞ்சங்கள்






கடந்த 29.06.2023 அன்று அராலி, கல்லூண்டாய் வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற விபத்தில், யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவரும், அராலி பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரும் உயிரிழந்தனர்.

அந்தவகையில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியரின் இறுதிச் சடங்குகள் கடந்த 30.06.2023 அன்று இடம்பெற்றன.

இந்நிலையில் அராலி மத்தி பகுதியைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சறோஜன் (சுதா - வயது 29) அவர்களது இறுதிக் கிரியைகள் 02-07-2023 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் வேலங்காடு இந்து மயானத்தில் நடைபெற்றது.

அவரது இறுதிச் சடங்கில், சமூகமட்ட பொது அமைப்பினர், உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு கண்ணீரின் மத்தியில் அவரை வழியனுப்பி வைத்தனர்.

அவர் அராலி மத்தி ஸ்ரீ பேச்சி அம்பாள் ஆலயத்தின் நிர்வாக சபை தலைவராக செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் உள்நாட்டு கடன் அதிகரிக்கிறது ; கடன்களை தள்ளுபடி செய்யவே கடன் மறு சீரமைப்பு — ஜேவிபி குற்றச்சாட்டு

இலங்கையின் உள்நாட்டு கடன் 41 வீதமாகக் காணப்படுகின்ற நிலையில் அதனை கட்ட முடியாத அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் அரச வங்கிகளை தனியார் வங்கிகளாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலே ஏற்பட்ட சகல பிரச்சனைகளுக்கும் ரணில் மற்றும் ராஜபக்சக்களே பொறுப்பு கூற வேண்டும்.

நாட்டின் மொத்த கடன் 2010 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 594 டொலர் மில்லியனாகவும் 2019 ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 431 டொலர் மில்லியனாகவும் 2022 ஆம் ஆண்டு 23 ஆயிரத்து 491 டொலர் மில்லியனாகவும் நாட்டின் கடன் காணப்படுகிறது.

நாட்டில் வெளிநாட்டு கடன் வாங்கும் வேகம் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டில் பெற்ற கடனை கூட அரசாங்கத்தினால் கட்ட முடியாத அவல நிலை காணப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டில் பெற்ற கடன் தொகை 42.4 டொலர் மில்லியனாக காணப்படுகிற நிலையில் ஐஎம்எவ் இடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக கடன் மறு சீரமைப்பை செய்யவுள்ளது.

கடன்களை தள்ளுபடி செய்தல் வங்கிகளுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்த உள்ள நிலையில் நாடு அதல பாதாளத்துக்குள் செல்லும் நிலை உருவாகும்.

2010 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி கையிருப்பு 7 ஆயிரத்து 196 டொலர் மில்லியனாக காணப்பட்ட நிலையில் 2022 ஆம் ஆண்டு 1879 டொலர் மில்லியனாக காணப்பட்டது.

நாடு வெளிநாட்டு வருமானத்தை இழந்துள்ள நிலையில் எட்டு மாத துறைகளான ஆடைத்துறை தேயிலை ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துள்ள நிலையில் மொத்த தேசிய உற்பத்தி 77 ஆயிரத்து 60 டொலர் மில்லியனாக காணப்படுகிறது.

தற்போதைய நாட்டின் டொலர் கையிருப்பு 1800 மில்லியன்களாகக் காணப்படுகிறது நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 5.2 டொலர் மில்லியனை திருப்திப் செலுத்த வேண்டும்.

இவ்வறான நிலையில் 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 400 கோடி பிணைமுறை மோசடி, கோட்டபாஜ ராஜபக்ச ஆட்சியில் 1560 கோடி ரூபாய் சீனி மோசடி, தாமரைக் கோபுர மோசடி மற்றும் பனாமா ஆவணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இலங்கையின் பிரபல அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகள் இடம் பெற்றது.

எனினும் குறித்த மோசடிகள் மூலம் சூறையாடப்பட்ட மக்களின் பணம் இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரப்படவில்லை.

ஆகவே பங்களாதேஷிடம் பெற்றுக்கொண்ட கடனை கூட செலுத்த முடியாத அரசாங்கத்தின் நிலை இவ்வாறு தொடருமானால் இலங்கையின் எஞ்சிய பாகங்களையும் பங்களாதேஷ்க்கு தாரை பார்க்க வேண்டிய சூழல் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 45 வது ஆண்டு பகிரங்கப் பொதுக்கூட்டம்





இலங்கை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 45வது ஆண்டு பகிரங்கப் பொதுக்கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் திங்கட்கிழமை (3) மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றது.

1978 யூலை மாதம் 3 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் 45வது ஆண்டு விழாவில் கட்சியின் கடந்த கால மக்கள் சார் போராட்டங்கள் மற்றும் பொதுப் பணிகள் தொடர்பான புகைப்படங்கள், புத்தகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

இவற்றுடன் நடைபெற்ற ஆண்டு விழாவின் போது பல்வேறு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்பாளர்கள் உரையாற்றினர். இந் நிகழ்வில் கட்சி அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பாதிக்கப்பட்ட ஆசிரியரின் முறைப்பாட்டால் இருமாத சம்பள நிலுவையை வழங்கிய முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம்

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தால் தனது இரு மாத கால சம்பளம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த ஆசிரியருக்கான சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து சம்பளத்தை பெற்றுத் தருமாறு கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஆசிரியர் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

அவரது முறைப்பாட்டில், மாகாணக் கல்விப்பணிப்பாளரின் NP/20/ET/F/Co.Tr இலக்க கடிதத்திற்கு அமைவாக முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலயத்தை நிரந்தரப் பாடசாலையாகவும், யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியை தர்காலிக பாடசாலையாகவும் கொண்டு நான் ஏப்ரல் மாதம் 28ம் திகதி முதல் யா/ மகாஜனக் கல்லூரியில் பணிபுரிந்து வருகின்றேன்.

எனக்கு முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளரால் வைகாசி மற்றும் ஆனி மாத கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இப்பொருளாதார கஷ்டமான நிலமையில் வலயக்கல்விப் பணிப்பாளரின் மேற்குறித்த செயற்பாடானது எனக்கெதிரான திட்டமிட்ட பழிவாங்குதலாகவே கருதுகின்றேன்.

கடந்த 2022ஆம் ஆண்டு 22ஆம் நான் ஐப்பசி மாதம் அளவில் சிறப்பிக்கப்பட்ட முன்னாள் அதிபரின் மணிவிழா தொடர்பாக எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் முறையாக விதத்தில் நிதி திரட்டி விடயம் ஊடகங்களில் வெளி வந்தன.

குறித்த முறைகேடு தொடர்பில் தகவல் அறியும் சட்டமூலத்தின் ஊடாகக் கேள்விகளை தொடுத்திருந்த நிலையில் எனக்கு எதிரான செயற்பாடுகளை வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டு வந்தார்.

ED/01/12/09/05401 இன் சரத்து 01 இன் படிக்கு ஆசிரியர்கள் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது தவறு எனவும் பரந்து 02 இன் படிக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நான் தற்காலிக பணியிடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வந்த நிலையில் எனது இரு மாதக் கொடுப்பனவுகளை திட்டமிட்ட முறையில் இழுத்தடிப்பு செய்கிறார்.

ஆகவே எனது உழைப்புக்கான ஊதியத்தை வழங்காது நொண்டிச்சாட்டுகளை கூறிவரும் வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து எனது சம்பளத்தை பெறுவதற்கு ஆவணை செய்யுமாறு கோரி எழுத்து மூலம் முறைப்பாடு வழங்கி இருந்தார்.

இந்நிலையில் குறித்த முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் சம்பந்தப்பட்ட தரப்பினரை தொலைபேசி மூலமான விளக்கத்தை கேட்டது.

இந்நிலையில் குறித்த ஆசிரியரின் சம்பள நிலுவையை முல்லைத்தீவு வலையக்கல்வி அலுவலகம் முறைப்பாடு வழங்கி இரு நாட்களில் விடுவித்தது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட இடத்திற்கு, சிரேஷ்ட சட்டத்தரணி இரத்தினவேல் விஜயம்

(5-07-2023)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட குறித்த இடத்திற்கு சிரேஸ்ட சட்டத்தரணி இரத்தினவேல் திங்கட்கிழமை (04) விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 29.06.2023 அன்று கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் மனித எச்சங்கள் சில இனங்காணப்பட்டன.

இந்நிலையில் கடந்த 30.06.2023 அன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இந் நிலையில் குறித்த மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில், எதிர்வரும் 06.07.2023 அன்று மேலதிக அகழ்வுகளை மேற்கொள்வதற்கு நீதிபதியால் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறான சூழலில் குறித்த இடத்திற்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் விஜயமொன்றை மேற்கொண்டு உள்ளார்.

மேலும் குறித்த விஜயத்தின் போது சட்டத்தரணி இரத்தினவேல் அவர்களுடன் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நாகதீப விகாரையின் தேரர் நயினாதீவுக்கு வருகை தந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையிட்டு விழா

யாழ்ப்பாணம் - நயினாதீவில் அமைந்துள்ள நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நயினாதீவுக்கு வந்து 50வது ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு சர்வமதங்களின் பங்கேற்புடன் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

நயினாதீவு மேகலை அரங்கத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையின் நான்கு பிரதான பௌத்த பீடங்களின் தேரர்கள் மற்றும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு உள்ளிட்ட சர்வமத தலைவர்களின் பங்கேற்புடன் நாகதீப ரஜ மகா விகாரை விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

விகாரையில் இடம்பெற்ற பூஜைகளுடன், விழா நாயகனான விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ தவில் நாதஸ்வர இசையுடனும், கண்டிய நடனத்துடனும் மண்டபத்திற்கு செங்காவி விரிப்பில் அழைத்து செல்லப்பட்டார்.

அதன் போது வீதியில் இரு மருங்கிலும் மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கூடி, விகாரதிபதிக்கு மலர் தூபி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள், நயினாதீவு மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



நயினாதீவு மண்ணில் சேவை புரிய தனது 11வது வயதில் தடம் பதித்த நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர் 50 வருடங்களாக நயினை மண்ணிற்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் பெரும் சேவையை கௌரவிக்கும் வகையில் நயினாதீவு மக்களால் குறித்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

கனடிய செய்திகள் Canadian News

# நடனக் கலைஞர் "கலைமாமணி" சாகிர் உசைனை தனது அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டிய கனடிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட்

தமிழ்நாடு அரசின் கலைக் கல்லூரிகளின் கௌரவ மேற்பார்வையாளராக அண்மையில் பதவியேற்ற பின்னர் கனடாவிற்கு வருகை தந்துள்ள நடனக் கலைஞர் "கலைமாமணி" சாகிர் உசைன் அவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டிய கனடிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்கள் தான் மாகாண அரசியலில் காலடி எடுத்து வைத்த காலத்திலேயே கனடாவிற்கு வந்து அற்புதமான தமிழர் கலையாம் பரத நாட்டியத்தை கற்பித்தும் மேடைகளில் நிகழ்ச்சிகளை வழங்கியும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கின்ற தங்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று புகழாரம் சூட்டினார்.

புதன்கிழமை (05) மாலை கனடா ஸ்காபுறோவில் அமைந்துள்ள சல்மா சாகிட் அவர்களது தொகுதி அலுவலகத்தில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் உடனிருந்தார்.

அங்கு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட சல்மா சாகிட் எம். பி அவர்கள் "நான் தங்கள் நடன நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியவற்றை பல வருடங்களாக உதயன் பத்திரிகையின் மேடைகளில் பார்த்துள்ளேன். அவற்றை மக்கள் எவ்வாறு ரசித்து பாராட்டினார்கள் என்பதையும் நான் நேரில் ரசித்தேன். அவ்வாறன தங்களை மீண்டும் கனடிய மண்ணில் சந் திப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்" என்றும் கனடாவின் எம். பி சல்மா சாகிட் அவர்கள் தெரிவித்தார்.

**படங்களும் செய்தியும்: சத்தியன் - கனடா**



# அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் "அகதியின் பேர்ளின் வாசல்" நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று நடைபெறுகின்றது






அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளரும் தனது படைப்புக்களுக்காக பல விருதுகளைப் பெற்றவருமான எழுத்தாளர் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் "அகதியின் பேர்ளின் வாசல்" நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களுக்கு இத்துடன் உள்ள அழைப்பைப் பார்வையிடவும்.











# கனடா — பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் மஞ்சத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது

சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்களை பிரதம குருவாகக் கொண்டு இயங்கிவரும் கனடா-பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை 8ம் திகதி இரதோற்சவம் நடைபெறவுள்ளது என ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்கள் அறியத் தந்துள்ளார்கள்.

ஆலயத்திதன் மஞ்சத் திருவிழா கடந்த 30ம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி மஞ்சத்திருவிழாவின் பிரதான உபயகாரராக பிரம்ரன் வாழ் தொழிலதிபர் கணேஸ்வரன் குடும்பத்தினர் விளங்கினார்கள்.

அன்றைய தினம் அடியார்கள் பலர் ஆலயத்திற்கு வந்து மஞ்சத்திருவிழாவை கண்டு களிக்கும் ஆர்வத்தோடு காத்திருந்தனர். விசேட பூசைகள் மற்றும் அபிசேகங்கள் இடம்பெற்ற பின்னர் வசந்த மண்டபப் பூசைகளும் இடம்பெற்று அம்பாள் மஞ்சத்தின் மீதேறி வீதி வலம் வருவதற்கு தயாரானார்.

லயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் மற்றும் ஜேர்மனியிலிருந்து சிறப்பு அழைப்பின் நிமித்தம் வருகை தந்திருந்த மகேஸ்வரக் குருக்கள் அவர்களும் இணைந்து அனைத்து அபிசேகங்கள் மற்றும் பூசைகள் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மங்கள வாத்தியம் ஒலிக்க அம்பாள் மஞ்சத்தின் மீதேறி வீதி வலம் வந்த காட்சி அற்புதமாக விளங்கியது.

அங்கு கலந்து கொண்ட உதயன் லோகேந்திரலிங்கம் மற்றும் கணக்காய்வாளர் இலங்கேஸ் ஆகியோருக்கும் பிரதான உபயகாரராக தொழிலதிபர் கணேஸ்வரன் குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் சிறப்பு கௌரவம் வழங்கப்பெற்றது.





இந்தியா செய்திகள் India News

# ராஜினாமா கடிதத்தை கிழித்தெறிந்த ஆதரவாளர்கள் — முடிவை மாற்றிய மணிப்பூர் முதல்வர்

மணிப்பூரில் கடந்த 2 மாதத்திற்கும் மேலாக வன்முறை வெடித்து வருகிறது. இதில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுள்ளனர். இந்நிலையில், மணிப்பூர் மாநில கலவரத்திற்கு பொறுப்பேற்று ராஜினாமா செய்ய அம்மாநில முதல்வர் பிரேன் சிங் ஆளுநரை சந்திக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. இதனால், முதல்வர் பிரேன் சிங் வீட்டிற்கு முன்பு திரண்ட ஆதரவாளர்கள் மற்றும் பெண்கள் ராஜினாமா செய்ய வேண்டாம் என முதல்வர் பிரேன் சிங்கிற்கு கோரிக்கை விடுத்தனர்.

மேலும், ராஜினாமா கடிதத்தை அவரது ஆதரவாளர்கள் கிழித்தெறிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங் ஆதரவாளர்களின் கோரிக்கையை ஏற்று ராஜினாமா செய்யும் முடிவை அவர் திரும்பிப் பெற்றுக் கொண்டார். இதுதொடர்பாக தனது பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.



# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# மகோற்சவ காலத்தில் துர்க்கேஸ்வரத்தில் சிறப்பு வழிபாடுகள்

## யூன் 27 செவ்வாய் முதல் யூலை 21 வெள்ளி வரை 25 தினங்கள்

துர்க்கேஸ்வரம் திருக்கோவில் மகோற்சவம் ஆடிப்பூரத்தை பூர்த்தியாகக் கொண்டு 25 தினங்கள் நிகழ்வது என்பதை யாவரும் அறிவீர்கள். மகோற்சவம் என்றாலே துர்க்கேஸ்வரம் களைகட்டும். ஏற்பாடுகள் அனைத்தும் மிகச் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். இந்தக் காலத்தை எதிர்பார்த்திருக்கும் பக்தர்கள் ஏராளம். விரதம் அனுஷ்டிப்பவர் பலர். தினமும் அம்பாள் தரிசனத்துக்கு வருபவர் பலர்.

இந்த ஆண்டு யூலை 21ம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் அமைவதால், இருபத்தைந்து தினங்களுக்கு முன்னரான யூன் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை மகோற்சவகாலம் ஆரம்பிக்கிறது.

அதே நேரம் துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகத்தினைத் தொடந்து நிகழும் மண்டலாபிஷேகம் யூன் மாதம் 19ம் திகதி ஆரம்பித்து ஆகஸ்டு 5ம் திகதி வரை நாற்பத்தெட்டு தினங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, கொடியேற்றம் போன்ற விஷேட திருவிழாக்கள் நீங்கலாக, வழிபாடுகள் விஷேடமாக இடம்பெறும்.

மகோற்சவகாலத்தில் அடியார்கள் பக்தி சிரத்தையுடன் ஆலயம் வந்து, அனைத்து வழிபாடுகளையும் தரிசித்து, மண்டலாபிஷேக அருள்மேன்மைகளையும் பெற்று நீடுழி வாழ்வீர்களாகுக.

**துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்துக்கு பின்னர் அமைந்த முதல் திருவிளக்கு பூஜை 25-8-2023 வெள்ளிக்கிழமை**

### பகல் வழிபாடு

**காலை 9:30 மணி முதல் பகல் 1:00 மணி வரை**

| | |
|---|---|
| காலை 9:30 மணி | காலை பூஜை |
| காலை 10:00 மணி | கும்பபூஜை ஆரம்பம் |
| காலை 10:30 மணி | திரவ்வியாபிஷேகம் |
| பகல் 11:00 மணி | ஸ்நபனாபிஷேகம் |
| பகல் 11:30 மணி | உச்சிக்கால பூஜை |
| பகல் 12:00 மணி | வசந்தமண்டப பூஜை, தொடர்ந்து அம்பாள் திருவீதி வலம் |
| பகல் 12:45 மணி | அருட்பிரசாத விநியோகம் அன்னதானம் பகல் வழிபாடு நிறைவு |

### இரவு வழிபாடு

**மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை**

| | |
|---|---|
| மாலை 6:00 மணி | சாயரட்சை பூஜை |
| மாலை 6:30 மணி | விஷேட புண்யாகவாசனம் |
| இரவு 7:30 மணி | இரண்டாங்கால பூஜை |
| இரவு 8:00 மணி | வசந்தமண்டப பூஜை, |
| இரவு 8:30 மணி | அம்பாள் திருவீதி வலம் அருட்பிரசாத விநியோகம் அன்னதானம் |
| பகல் 9:00 மணி | இரவு வழிபாடு நிறைவு |

# துர்க்கேஸ்வரத்தில் மண்டலாபிஷேக பூர்த்தி 5-8-2023 சனிக்கிழமை

துர்க்கேஸ்வரத்தில் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவினைத் தொடர்ந்து, 19-6-2023 முதல் தற்போது மண்டலாபிஷேக வழிபாடுகள் காலையும் மாலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 48 தினங்கள் மண்டலாபிஷேக வழிபாடுகளின் பின்னர் மண்டலாபிஷேக பூர்த்தி விழா 5-8-2023 சனிக்கிழமை நடைபெற உள்ளது.

இப்பூர்த்தி விழாவானது 4-8-2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விக்னேஸ்வரபூஜையுடன் ஆரம்பமாகி, மறுநாள் 5-8-2023 சனிக்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தி இடம் பெறும்.

4-8-2023 வெள்ளி

| | |
|---|---|
| காலை 10 மணி: | விக்னேஸ்வரபூஜை, புண்யாகவாசனம், அனுக்ஜை |
| மாலை 6 மணி: | 1ம்கால யாகபூஜை, வேத பாராயணம் |

5-8-2023 சனி

| | |
|---|---|
| காலை 10 மணி: | 2ம்கால யாகபூஜை, வேத பாராயணம், ஹோமம் பூர்ணாகுதி, தீபாராதனை மண்டலபூர்த்தி அபிஷேகம் அலங்காரம், தீபாராதனை |

**முழுமையான மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம் அடுத்தவார இதழில் காண்க**

# YUKON TERRITORY'S 125TH ANNIVERSARY



On June 13, 2023, Yukon, Canada's westernmost territory, celebrated its 125th anniversary of becoming its own separate territory in Canada. To celebrate this milestone, Yukon is providing funding for applicants to businesses, societies, municipalities, and First Nations governments living in the Yukon territory for up to $7500. This monumental milestone was greatly celebrated by reflecting on historical achievements and the promising future ahead of Yukon.

Yukon, which is one of Canada's most beautiful terrains, filled with wilderness, lakes, mountains, and nature's beauty, offers a variety of outdoor activities for its 125th anniversary. On this day, Kayaking on the magnificent lakes and hiking through the national park were offered. Yukon overall celebrated this day by reiterating why its one of Canada's most beautiful territories by giving a sensory experience to citizens.

One of Yukon's most significant legacy, the Klondike Gold Rush in 1898 was one of the most promising, life-changing moments for Yukon itself. The discovery of vast amounts of Gold had changed Yukon from being isolated to being economically developed. This historical achievement has changed the entirety of the region for present and future landmarks such as this one.

From preserving Indigenous Heritage, the Klondike Gold Rush, and being one of the most beautiful territories of Canada; Yukon celebrates its 125th anniversary and looks onwards to the opportunities ahead for the territory. With advanced development and dedication, Yukon will continue to celebrate many more milestones with an increase in tourism and an even brighter future!

கனடிய செய்திகள் Canadian News

# TORONTO'S NEWLY ELECTED MAYOR OLIVIA CHOW




Olivia Chow, Toronto's third female mayor has won votes 37% of Torontonians votes on June 26, 2023; crushing the mayoral race with Ana Bailao in just second place!. Chow, who served as the New Democratic Party member of parliament for Trinity-Spadina from 2006 to 2014 as well the Metro Toronto's city councillor from 1992 to 1998 has won her way into becoming Toronto's new mayor.

Chow's main priorities as Mayor lies on affordable housing and Toronto's housing crisis for the community. Chow hopes to help enable the City of Toronto to build twenty-five thousand new rental homes in the next decade. Olivia Chow, who immigrated to Toronto at just 13 years old, describes her sorrows of seeing Toronto being unaffordable in this day and age, after her mother tirelessly worked as a hotel maid but still could barely manage to pay rent on a single income.

She expresses her understanding as she mentioned her family would not have survived today in the housing system, traffic, childcare, and recreation programs today. Her connection to the struggles of not being able to have money for food or just barely get by on rent is what influenced her to empower communities and dedicate her work to focus on the crisis of the city. As the new mayor, Chow resonates with the challenges the citizens of Toronto face, and pledges a better and sustainable future ahead. We as Torontonians hope that Olivia Chow's promises and commitment will bring Toronto back to the affordable city it once was again!






Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

Dr. Pushpa.V & Associates
Dentist

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# இரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் 200 வது திறன் வகுப்பறை சின்னப்பூவரசன்குளம் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் திறந்து வைப்பு 28 06 2023

இலங்கை செய்திகள் Sri Lanka News




இரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் ஸ்தாபகர் கலாநிதி இரட்ணம் நித்தியானந்தன் அவர்களினால் முல்லைதீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் அப்போதைய அதிபர் திரு. நல்லையா அமிர்தநாதர் மூலம் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திறன்பலகையுடனான திறன் வகுப்பறை ஆரம்பம் இன்று 200ஐ கடந்து சாதனை படைத்துள்ளது. மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளும் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடனான கற்றல் வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற உயரிய சிந்தனையின் பேறாக IMHO-USA, VANNI HOPE, AUS மற்றும் அவ்வப்பாடசாலைகளினது நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

115 பாடசாலைகளில் IMHO-USA அமைப்புடனும் 30 இல் VANNI HOPE, AUS அமைப்புடனும் ஏனையவற்றில் இரட்ணம் பவுண்டேசன் தனியாகவும் நலன் விரும்பிகளுடனும் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்போந்த அனுசரணைகளினூடு மலையகத்தில் 23 பாடசாலைகளிலும் மேல்மாகாணத்தில் 3 இலும், வடமேல்மாகாணத்தில் 14 இலும், கிழக்குமாகாணத்தில் 37 இலும், வடக்கு மாகாணத்தில் 129 இலும், தொண்டர் நிறுவனங்களில் 5 மாக மொத்த எண்ணிக்கை 200 ஐக் கடந்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வரிசையில் 200 வது திறன் வகுப்பறை வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் போக்குவரத்து வசதி குன்றிய சின்னப்பூவரசன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆனந்தர் புளியங்குளத்தைச் சேர்ந்த திரு. மயில்வாகனம் சிறீதரன், IMHO-USA அமைப்புடன் RATNAM FOUNDATION UK அமைப்பு இணைந்து திறன் வகுப்பறையை இப்பாடசாலைக்கு வழங்கியுள்ளன. இதற்கான கையளிப்பு வைபவம் யூன் 28 இல் இப்பாடசாலையியில் சிறப்பாக நடைபெற்றது. வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திரு. லெனின் அறிவழகன் முதன்மை விருந்தினராகவும் திருமதி. மயில்வாகனம் மற்றும் IMHO-USA அமைப்பின் வதிவிட பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்த இவ்விழாவில் வலய மட்டத்திலான உத்தியோகத்தர்களும் ஓய்வு பெற்ற மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் மட்டுமல்லாது பெருமளவிலான பாடசாலை சமூகத்தினரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

வலயக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அவ்வப்பிரதேச கல்விசார் பொது அமைப்புக்களுக்கூடான கோரிக்கைகள் யாவும் அனுசரணையாளர்களின் அனுமதியுடன் IMHO-USA அமைப்பின் வதிவிட பணிப்பாளரும் ஓய்வுபெற்ற வலயக்கல்வி பணிப்பாளருமாகிய திரு. சு.கிருஷ்ணகுமார் அவர்களினது பாடசாலைகளுக்கான நேரடி தரிசிப்பின் மூலம் திறன் பலகை பொருத்தப்படவுள்ள வகுப்பறைகளின் தரம் உறுதி செய்யப்படுகின்றமையும், ஆசிரியர்களுக்கான தொடருறு பயிற்சிகளும் இத்திட்டத்திற்கு வலு சேர்க்கின்றது. அதுமட்டுமல்லாது வலயக்கல்வி அலுவலக கண்காணிப்பு நடைமுறைகளும் வாட்ஸ் அப் குழுமத்தில் பகிரப்படும் பதிவேற்றங்களும் திறன் பலகைக்கூடான கற்றல் கற்பித்தல்செயல்பாடுகளை செழுமைப் படுத்தி வருகின்றது.





# சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறிய வேண்டாம் – வவுனியா மக்கள் வேண்டாம் என்றால் திருப்பி அனுப்புறோம் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறிய வேண்டாம் - வவுனியா மக்கள் வேண்டாம் என்றால் திருப்பி அனுப்புறோம் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்.

சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறிய வேண்டாம். வவுனியா மக்கள் வேணாம் என்றால் திருப்பி அனுப்புறோம் என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் திங்கட்கிழமை (03.-07-2023) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் சீனித்தொழிற்சாலை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனித்தொழிற்சாலை தொடர்பில் 4 வது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களை சொல்லவில்லை. ஆனால் பலர் குத்திமுறிகிறார்கள். சிங்கள குடியேற்றம் வரும் எனவும், சீனா முதலீடு எனவும் கூறுகிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலை இயங்கம் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம். இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சீனா முதலீட்டை எதிர்போம். நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாக சிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்.

சீனித் தொழிற்சாலை முறையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் பல பேர் குத்தி முறிகிறார்கள். வவுனியா மக்களோ அல்லது வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கருத்து சொல்லவில்லை. வவுனியாவிற்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்களது மக்களின் கருத்துக்களையும், இங்குள்ள அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரது கருத்துக்களையும் பெற்ற பின் தான் இங்கு கொண்டு வருவதா இல்லையா என முடிவெடுப்போம்.



ஆகவே, தயவு செய்து யாரும் கத்தி முறியவேண்டாம். சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூப்பிக்க முடிந்தால் நிரூப்பிக்கவும். அதைவிடுத்து சும்மா குத்திமுறிவதால் அர்த்தமில்லை.

இந்த தொழிற்சாலை தாய்லாந்து நிறுவனத்தின் முதலீடு. இதில் தமிழீழ விடுதலை இயக்கம் எந்தப் பங்காளியும் இல்லை. இது தென்னிலங்கைக்கு செல்வதற்கான வாய்ப்பை தடுத்து நிறுத்தி வடக்கிற்கு கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியே. இதற்கான பங்காளிகளாக நாம் இருக்கப் போவதில்லை.

முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடே ஒழிய பங்காளர் இல்லை. மக்களின் நலன், விவசாயிகளின் நலன் என்பன பற்றி கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்ல இருகின்றோம். வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங்கள இடத்திற்கு போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்று தான் நாம் முடிவெடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை எமது தேசத்தில் முதலீடுகள் நடைபெற வேண்டும். ஆகவே இதில் முதலீட்டை பார்ப்பதை விட்டுவிட்டு கனவுகளோடு பார்க்க வேண்டாம். ஆதாரம் இல்லாத கருத்துக்களை கூற வேண்டாம்.

வவுனியா மக்கள் ஆதரவு தந்தால் கொண்டு வர முயற்சி செய்வோம். அவர்கள் வேணாம் என்றாம் திருப்பி அனுப்புவோம். தமிழீழ விடுதலை இயக்கம் முதலீட்டை கொண்டு வர முயற்சிக்கின்றது என்பதற்காக சிலர் இதை எதிர்க்கிறார்கள். இது எங்களது ஒரு முயற்சி அவ்வளவு தான். இதை பற்றி யாரும் குத்தி முறிய வேண்டாம். நாமும் குத்தி முறியப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

# அராலி இந்துக் கல்லூரியின் பிரதான நுழைவாயில் திறப்புவிழா

யாழ்ப்பாணம், அராலி இந்துக் கல்லூரியின் பிரதான நுழைவாயில் திறப்புவிழாவானது திங்கட்கிழமையன்று 3ம் திகதி, கல்லூரியின் அதிபர் பாலசுந்தரம் பாலகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மாலை அணிவித்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர். அதன் பின்னர் கல்லூரியின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு, நினைவுக்கல்வெட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. அதன்பின்னர் பிரதான நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.




இந்நிகழ்வில் கல்லூரியின் அதிபர், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் லாவண்யா சுகந்தன், கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் சதாசிவம் செல்வராசா, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நுழைவாயிலானது கல்லூரியின் 1993ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண மாணவர்களது நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த மயமாக்கல்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

22 ஆண்டுகளுக்கு முன்னர் தாய்லாந்து அரசாங்கத்தால் இலங்கைக்குப் பரிசாக வழங்கப்பட்ட முத்துராஜா என்ற பெயருடைய யானை மீண்டும் தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. 4,000 கிலோகிராம் எடையிலான அந்த யானையை விமானத்தில் அனுப்புவதற்கு 700,000 டொலர் செலவிடப்பட்டதாகத் தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். தாய்லாந்தினால் பரிசாக வழங்கப்பட்ட அந்த யானையை இலங்கை சரியாகப் பராமரிக்காத காரணத்தால் அது நோய்வாய்ப்பட்டுள்ளது என்றும் அதனாலேயே அதை தாய்லாந்து திரும்ப எடுத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

சிங்கள பௌத்த பண்பாட்டில் குறிப்பாக அதன் மதச் சடங்குகளில் யானைக்குப் புனிதமான ஒரு இடம் உண்டு. ஆனால், தானமாகக் கிடைத்த ஒரு யானையை பராமரிக்க முடியாத நாடு புதிது புதிதாக விகாரைகளை கட்டிக் கொண்டிருக்கிறது என்று முகநூலில் விமர்சிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும், ஐநா கூட்டத் தொடரின் மத்தியிலும், குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் பொறுப்பு கூறல் தொடர்பில் இலங்கைக்கு எதிரான கருத்துக்களை அழுத்தமாகத் தெரிவித்திருக்கும் ஒரு பின்னணியிலும், இலங்கை அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் புதிதாக விகாரைகளைக் கட்டுவதை நிறுத்தவில்லை. அதாவது, சிங்கள பௌத்த மயமாக்கலை நிறுத்தவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அப்படித்தான் நடந்து கொள்வார். ஏனென்றால் அவருக்குத் தெரியும் வெளி உலகில் தனது பேரபலம் அதிகமாக உள்ளது என்று. ராஜபக்சங்களுக்கு அப்படி அல்ல. அவர்கள் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உண்டு. கனடா மூத்த ராஜபக்சக்கள் இருவரும் கனடாவுக்குள் வருவதற்கோ அல்லது முதலீடுகளை செய்வதற்கோ தடை விதித்து இருக்கிறது. அமெரிக்கா கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் பிரகாரம் மூத்த இரண்டு ராஜபக்சங்களும் இனி அமெரிக்காவுக்கு போவதும் கடினம். இப்படிப் பார்த்தால் ராஜபக்சக்களின் பேரபலம் வெளி உலகில் மிகவும் பலவீனம் அடைந்துள்ளது. ஆனால் உள்நாட்டில் அவர்களுடைய கட்சிதான் நாடாளுமன்றத்தில் மிகப்பலமாக உள்ளது. அந்த கட்சியின் ஆதரவோடுதான் ரணில் ஆட்சி செய்கின்றார். இது ஒரு சுவாரசியமான முரண். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆபத்தான முரண்.

ராஜபக்சங்களுக்கு வெளி உலகில் ஆதரவு இல்லை, அபிமானமும் இல்லை. ஆனால் ரணில் விக்ரமசிங்கவுக்கு வெளி உலகில் ஆதரவும் அபிமானமும் அவரை நோக்கிய எதிர்பார்ப்பும் அதிகமாக உண்டு. எனவே ராஜபக்சக்கள் வெளிநாடுகளில் தாங்கள் இழந்த பெயரை மீட்டுக் கொள்வதற்கு ரணில் தேவை. நாமலை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகத் தயார்படுத்துவதற்கு இடைப்பட்ட காலகட்டத்திலும், கட்சியையும் குடும்பத்தையும் பலப்படுத்துவதற்கும் ரணில் தேவை. அதே சமயம் ரணிலோ நாடாளுமன்றத்தில் ஒற்றை யானையாக நிற்கிறார். அவருடைய கட்சி பெருமளவுக்கு சிதைந்து விட்டது. எனவே அவருக்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது என்றால், ராஜபக்சகளின் ஆதரவு தேவை. எனவே ராஜபக்சங்களுக்கும் ரணிலுக்கும் இடையிலான பரஸ்பர தங்கு நிலை தொடர்ந்து உண்டு. இந்த பரஸ்பர தங்கு நிலை காரணமாக தமிழ் மக்களுக்கு பாதிப்பு அதிகம்.

எப்படியென்றால், ரணில் வெளி உலக அபிமானத்தை பெற்றவர். அவர் மேற்கத்திய பாரம்பரியத்தில் வந்தவர். எனவே பன்னாட்டு நாணய நிதியமும் உலக வங்கியும் அவர் ஆட்சியில் இருப்பதைத்தான் விரும்பும். அதுபோலவே மேற்கு நாடுகளும் இடதுசாரிகளான ஜேவிபியினர் பலமடைவதை விடவும் ரணில் ஆட்சியில் இருப்பது பரவாயில்லை என்று கருதுவதாகத் தெரிகிறது. மேலும் ரணில் சீனாவை நோக்கி ஒரு கட்டதுக்கும் மேல் வளைய மாட்டார். இதனால் ரணிலுக்கு இப்பொழுது மேற்கு நாடுகளில் பேரம் அதிகம். அந்தத் துணிச்சலில்தான் அவர் சிங்கள பவுத்த மயமாக்கலை தீவிரமாக முன்னெடுக்கின்றார். சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுப்பதன் மூலம் அவர் ராஜபக்சக்களின் நிகழ்ச்சி நிரலை கொண்டு ஓடலாம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தனது வாக்கு வங்கியைப் பாதுகாக்கலாம்.

சிங்கள பௌத்த மயமாக்கலை ராஜபக்சக்கள் முன்னெடுத்து இருந்திருந்தால் வெளிஉலகம் அதனை ஒரு விவகாரமாக மாற்றி இருக்கும். ஆனால் இப்பொழுது பன்னாட்டு நாணய நிதியமோ அல்லது மேற்கு நாடுகளோ அதை ஒரு விவகாரமாக எடுக்கவில்லை. அது கிட்டத்தட்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு லைசென்ஸ் கொடுத்தது போல் ஆகிவிட்டது.

இந்த இடத்தில் ஒரு விளக்கம் கூறப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியமானது, நாட்டின் நிதி சார் நடவடிக்கைகளில்தான் தலையிடும். மாறாக அரசியல் நடவடிக்கைகளில் தலையிடாது என்று. ஆனால் அது அப்பாவித்தனமான ஒரு விளக்கம். ஏனெனில் அரசியலில் தூய நிதி சார் நடவடிக்கைகள் என்று எதுவும் கிடையாது. எல்லாமே அரசியல் தீர்மானத்துக்கு உட்பட்டவைதான். இன்னும் ஆழமான தத்துவார்த்த அர்த்தத்தில் சொன்னால், தூய பொருளாதாரம் என்று ஒன்று இல்லை. வேண்டுமானால் பாடப் புத்தகங்களில் அப்படி இருக்கலாம். ஆனால் அரசியலில் அரசியல் பொருளாதாரம்தான் உண்டு. எனவே பன்னாட்டு நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்கள் நேரடியாக அரசியலில் தலையீடு செய்ய முடியாவிட்டாலும் கூட, மறைமுகமாக அவை அரசியல் விளைவுகளையே ஏற்படுத்தும்.

உதாரணமாக பன்னாட்டு நாணய நிதியம் படையினரின் எண்ணிக்கையை குறைக்குமாறும் ராணுவ மய நீக்கத்தை செய்யுமாறும் அரசாங்கத்தை நேரடியாக கேட்காமல் விடலாம். ஆனால் வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு செலவினங்களுக்கு ஒதுக்கப்படும் அளவுக்கதிகமான நிதியைக் குறைக்குமாறு பன்னாட்டு நாணய நிதியம் கேட்கலாம். பாதுகாப்புச் செலவ-ினம் குறைக்கப்பட்டால் அது அதன் அடுத்த கட்டமாக படையினரைக் குறைக்க வேண்டி வரும். அது அதன் அடுத்த கட்டமாக படைமய நீக்கம் செய்ய வேண்டி வரும்.

எனவே பன்னாட்டு நாணய நிதியம் மறைமுகமாக அழுத்தங்களை கொடுக்க முடியும். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் ரணில் விக்கிரமசிங்க அப்படிப்பட்ட எந்த விதமான அழுத்தமும் இல்லாமல் இயங்குகிறாரா என்று கேட்கும் அளவிற்குத்தான் சிங்கள பௌத்த மயமாக்கல் நடக்கின்றது. இந்த விடயத்தில் அதையே ராஜபக்சக்கள் செய்திருந்தால் வெளியுலகம் அதை ஒரு விவகாரமாகக் காட்டியிருக்கும். ஆனால் ரணில் செய்கிறார். அதைத் தமிழ் மக்கள் மட்டும் தான் விவகாரமாகப் பார்க்கிறார்கள். ஐநாவின் மனித உரிமைச் செயலரின் வாய்மூல அறிக்கையில் காட்டமான விமர்சனங்கள் உண்டு. ஆனால் அது அரசாங்கத்துக்கு நோகாது. அரசாங்கம் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை நோக்கித்தான் திட்டங்களை வகுத்து வைத்திருக்கிறது. அந்த தேர்தலில் வெல்வது என்றால் தனி சிங்கள வாக்குகளை கவர வேண்டும் என்ற முடிவுக்கு ராஜபக்சக்களைப் போலவே ரணிலும் வந்து விட்டார் என்று தெரிகிறது.

ஏனென்றால் தமிழரசுக் கட்சி பெருமளவுக்கு எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதைவிடத் தீவிரமான எதிர்ப்பு அரசியல். ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் தீவிரமான எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் உண்டு. தமிழ்த் தேசிய அரங்கில் ஏனைய கட்சிகள் எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்தால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டும் அதைத்தான் தொடரும். இப்படிப்பார்த்தால் தமிழ்க் கட்சிகள் இந்த முறை ரணிலோடு நிக்காது என்றே தெரிகிறது. எனவே தமிழ் வாக்குகளைக் கவர்வதில் இருக்கும் நெருக்கடிகளைக் கவனத்தில் எடுத்து அவர் தனிச் சிங்கள வாக்குகளை இலக்கு வைக்கக் கூடும். அதற்கு சிங்கள பௌத்த மயமாக்கல் தேவை.

மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் உள்நாட்டில் கடனை மீளக் கட்டமைக்கும் பொழுது, அதன் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் கோபமும் கொந்தளிப்பும் ஏற்படலாம். அதை எதிர்கொள்வதற்கும் ரணிலுக்கு இனவாதம் தேவை. கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள மக்களின் கோபத்தையும் கொதிப்பையும் திசை திருப்புவதற்கு இனவாதத்தைத்தான் இதற்கு முன் இருந்த எல்லா அரசாங்கங்களும் பயன்படுத்தின. ரணிலும் விதிவிலக்கு அல்ல. எனவே தமிழ் மக்களும் சமரசத்துக்கு இடமின்றி விட்டுக் கொடுப்பின்றிப் போராடுவதுதான் ஒரே வழி.

## கனடாவில் கோடைகாலம்
## (நேரிசை ஆசிரியப்பா)

---

கோடையும் வந்திடக் கோலமும் மாறிடும்
வாடையும் தந்தது வசந்த காலம்
பேடையும் துணையும் பாடிக் களிக்கும்
தோடையில் காய்த்துத் தொங்கிடும் பழங்கள்
மொட்டை மரங்கள் முகையைக் காட்டும்
விட்ட இடத்தில் வேலைகள் தொடங்கும்
வெட்ட வெளிகள் விளைச்சல் காணும்
சிட்டுக் குருவிகள் சிறுகூடு கட்டும்
மந்தைகள் கூடியே மகிழ்வாய் மேயுமே!

பந்துக்கள் சேர்ந்து பகிர்ந்து உண்பர்
கந்தன் கோவிலிற் கார்த்திகைத் திருவிழா
சந்தைத் திடலில் சங்கீதப் பெருவிழா
திருமணச் சடங்கைச் சிறப்பாய் நடத்தினர்
வருமானக் கணக்கை விரைந்தே கேட்டனர்
வருண பகவான் வாரியே வழங்க
அருவிகள் எல்லாம் ஆட்டம் போட்டன
பூங்கா எல்லாம் பொலிவு பெற்றே!
ஆங்கே மரங்களில் அரும்புகள் தோன்றின
தாங்காக் காங்கை தகிர்த்த போதும்
பாங்காய்ப் பட்சணம் பகிர்ந்து உண்டோம்
ஊடகங்கள் கொண்டாட்டம் ஊர்மெச்ச நடந்திட
ஆடவரும் பெண்களும் ஆர்வமாய் கூடினர்
பாடகர் வந்தனர் பாரதம் இருந்தே
பாட சாலையில் பணிகளும் நின்றதே!
தப்பாது வந்தது தக்க சமயம்
எப்போ வருமென ஏங்கியே நின்றோம்
அப்போ கிடைத்த அரியவாய்ப்பு
இப்போ நினைக்கவும் இதயத்தில் இனிக்குதே!

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# தமிழ் மக்கள் மீது பௌத்த மேலாதிக்கம் பிரகடனப்படுத்தியுள்ள போர்!



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• மனித துயரத்திலிருந்து அரசியல் இலாபங்களைப் பார்க்கும் அரசியல்வாதிகள்.
• "பௌத்த மேலாதிக்கம்" மற்றும் "காணிக் கொள்ளை போரில்" இருந்து மக்களையும் மண்ணையும் காப்பாற்றப் போவது யார்?
• சிங்கள பௌத்தத்திற்குள் கரைந்து போன நிலையிலான மண்ணும் மக்களுமே மிஞ்சுவர்.

தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்த விடயத்தை "பேசு பொருளாக்கி" வழமை போன்று சிங்களத் தலைவர்களின் பாணியில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவும் இலங்கை அரசியலில் ஒரு இனப் பதற்றத்தை சூடாக்கியுள்ளார். சுதந்திர தினத்தின் 75வது வருட கொண்டாட்டத்திற்குள் தீர்வு என்று கூறிய ரணில்விக்ரமசிங்க பொருளாதார நெருக்கடிக்குள் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் அவசியமா என்ற பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் கொழும்பில் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலும் தமிழர் விவகாரத்தக்குத் தீர்வின்றியே சுதந்திர தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

இறுதியில் தான் மட்டும் தமிழர் விவகாரத்திற்கத் தீர்வு காண முடியாது. சகலரதும் ஒத்துழைப்பும் தேவை என்று தமிழர் விவகாரத் தீர்வுக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

இந்த அறிவிப்புடன் வெளிநாடு சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளி நாட்டுக் "களரிக்காக" தமிழர் விவகாரத்திற்குத் தீர்வு காணப்படும் என வாக்குறுதி அளித்தார். சிங்களத் தலைமைகளின் வழமையான பாணியிலேயே ரணில் விக்ரமசிங்க நடந்து கொண்டார். அதே வேளையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சு வார்த்தைக்கு வர வேண்டுமென்ற கோரிக்கையையும் சிங்களத் தலைமைகளின் பாணியிலேயே முன்வைத்தார். போர் மௌனிக்கப்பட்ட 2009க்குப் பிற்பட்ட காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாணியிலேயே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் தற்போதைய அணுகுமுறையும் அச்சொட்டாக அமைந்திருந்தது.

இதில் இன்னொரு ஒற்றுமையும் உள்ளது. மகிந்த ராஜபக்ச காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் கூட்டுக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பேச்சு வார்த்தைக்குச் சென்று பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தி இறுதியில் பேச்சு வார்த்தை ஒரு அங்குலம்தானும் நகரவில்லை என்று தமிழ் மக்களுக்கும் உலகத்திற்கும் கூறினர். பேச்சு வார்த்தை ஒரு அங்குலம்தானும் நகராத நிலையில் எவ்வாறு பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன என்பது புரியாத புதிராக இன்றுவரை உள்ளது.

ஆனால் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நடக்காத உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்காகக் காவு கொடுத்த தமிழரசுக் கட்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பை ஏற்று பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டது. இறுதியில் பேச்சு வார்த்தை வெற்றி அளிக்கவில்லை என்று பேச்சு வார்த்தையில் இருந்து தமிழரசுக் கட்சி விலகிக் கொண்ட போதும் தற்போது ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் ஜனாதிபதி ஜூலைவரை அவகாசம் கேட்டுள்ளார் அதற்கிணங்க ஜனாதிபதி கேட்டுள்ள கால அவகாசம் வரை பொறுத்திருப்பதாக கூறியுள்ளார்.

• தீர்வு இல்லை - புளட்

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகளில் ஒன்றான புளட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தமிழர் விவகாரத்துக்கான தீர்வினை வழங்க சிங்களத் தலைமைகள் முன்வராது என்று அறிவித்துள்ளார்.

புளட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் அவர்களுக்கு இந்த ஞானம் எவ்வாறு உதயமாகியது என்பது தெரியவில்லை. ஆனால் தமிழ் பேசும் சாதாரண மக்களுக்கு இந்த ஞானம் என்றோ உதயமாகிவிட்டது.

தமிழ்த் தலைமைகளில் புளட் போன்ற அமைப்புகள் ஆயுதமேந்த ஆரம்ப காலத்தில் இந்த நிலைப்பாடே காரணமாக இருந்தது என்பது பரமரகசியமல்ல. இவர்கள் காலப் போக்கில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு சிங்களத் தலைமைகள் தீர்வினைத் தரும் என்று நம்பி இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைய முயற்சித்ததின் தோல்வியின் எதிரொலியாக இந்த ஞானோதயம் பிறந்திருக்கலாம். அல்லது தமிழர் அரசியலில் தமது எதிர்கால இருப்புக்கான கவசமாக இந்த நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் சித்தார்த்தன் அவர்கள் உண்மையைப் போட்டு உடைத்துள்ளார். இந்த உண்மை சிங்களத் தலைமைகளுக்கு ஒன்றும் தெரியாத புரியாத விடயமல்ல.இந்த உண்மைகள் எல்லாம் சிங்களத் தலைமைகளுக்கு "எருமை மாட்டில் மழை பெய்வது" போன்றதுதான்.

• அடுத்து என்ன? - What Next?

ஆனால் அடுத்து என்ன என்பதுதான் இன்றைய கேள்வியாகும். தற்போதைய தமிழ்த் தலைமைகள் எவரிடமும் இதற்கான பதிலோ அல்லது அடுத்த கட்ட நகர்வுக்கான திட்டமிடலோ அல்லது திட்டமோ கை வசம் இல்லை என்பதுதான் உண்மை. 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்த் தலைமைகளின் நிலை இதுதான்.

• மைத்திரி ஏன் யாழ் வந்தார்?

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிரிசேன அவர்களிடம் 13வது திருத்தம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர். அதற்குப் பதிலளித் அவர் தாம் தற்போது ஆட்சி அதிகாரத்தில் இல்லை என்றும் அது குறித்து தற்போது ஆட்சியில் இருப்பவர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13வது திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து நாடாளுமன்றில் அறிவித்தபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிரிசேன ஆளும் தரப்பு இதுபற்றி முடிவு எடுக்க வேண்டுமென கூற முன்வரவில்லை. மாறாக அதிகாரப் பகிர்வுக்கு உள்ளூராட்சி சபை அமைப்பே போதுமானது என குறிப்பிட்டார்.

• சிங்களத் தலைமைகளிடையே தமிழர் விவகாரத்தில் வேறுபாடுகள் இல்லை

சிங்களத் தலைமைகள் தமிழர் விவகாரத்துக்கான தீர்வுகுறித்து கொழும்பில் ஒன்றும் தமிழர் பிரதேசங்களில் ஒன்றும் வெளி நாடுகளில் ஒன்றும் கூறுவது வழமையானது. அது ரணில் விக்ரமசிங்கவாகவோ அல்லது மகிந்த ராஜபக்சவோ அல்லது மைத்திரிபால சிரிசேனவாகவோ இருக்கலாம். சிங்களத் தலைமைகளிடையே தமிழர் விவகாரத்தில் வேறுபட்ட நிலைப்பாடுகள் இல்லை என்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் மீண்டும் ஒரு முறை சுட்டிக் காட்டி நிற்கின்றன.

அது மாத்திரமல்ல யாழில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு இறுதி யுத்தத்தின்போது நடந்த விடயம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு தமக்கு அது பற்றித் தெரியாது என்றவாறு பதில் அளித்துள்ளார். இறுதிக் கட்ட போரின்போது அவ்வேளையில் ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ச வெளிநாடு சென்றிருந்த நிலையில் பதில் பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றியவர் மைத்திரிபால சிரிசேன அவர்களாகும். இறுதிக்கட்ட போர் நிலவரங்களில் மிக முக்கிய விடயங்கள்குறித்து அறியாத நிலையில் பதில் பாதுகாப்பு அமைச்சர் இருந்துள்ளார் என்ற செய்தி மூலம் அவர் கூற முன் வருவது அனைத்தையும் அவ் வேளையில் பாதுகாப்பு செயலாளராகப் பதவி வகித்த கோத்தாபய ராஜபக்ச மேற் கொண்டார் என்பதை சுட்டுவதாக உள்ளது. இதே பாணியில்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதல்குறித்தும் பதில் அளித்து இறுதியில் நீதிமன்ற தண்டனையை எதிர் நோக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

• சிங்களத் தலைமைகளின் இரட்டை வேடம்.

இதில் விசித்திரம் என்னவெனில் இந்த இரட்டை வேடத்தை தமிழர் மண்ணில் கேள்வி கேட்க யாரும் இல்லாது போய்விட்டனரே என்பதுதான்.

அது மாத்திரமல்ல நாட்டின் பொருளாதார நெருக்கடிகளையும் மேவிய நிலையில் தமிழ் மக்கள் மீது மரபுரிமைப் போரினை பௌத்த மேலாதிக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழர் தாயகத்தை பௌத்த விகாரைகளும் சிங்களக் குடியேற்றங்களும் ஆக்கிரமித்து நிற்கின்ற வேளையில் முன்னாள் ஜனாதிபதியின் யாழ் வருகை மூலம் தமிழ் மக்களுக்கு தெற்கில் இருந்து கொண்டுவந்த செய்தி என்ன என்பதுதான் இன்றைய கேள்வியாகும்.

ஆதிகாரப் பகிர்வுக்கு மாகாண சபைகள் அல்ல உள்ளூராட்சி சபைகளே போதுமானது என நாடாளுமன்றில் பிரகடனப்படுத்தும் சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிரிசேன எவ்வித குற்ற உணர்வோ கூச்சமோ இல்லாமல் ஒன்றும் நடக்காதது போல் தமிழ் மக்கள் முன் தலைகாட்டி நிகழ்வுகளிலும் பங்கேற்று மாலை மரியாதைகளுடன் கொழும்பு திரும்பியுள்ளார்.

• "தேர்தலுக்கான" அரசியல் அரங்கம்.

இவை அனைத்தும் "தேர்தலுக்கான" அரசியல் அரங்கம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இவர்களுடன் இணைந்து இணக்க அரசியல் நடத்துபவர்களுக்கும் தென்னிலங்கைக் கட்சிகள் மூக்கனாங் கயிறு கட்டி வழி நடத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களின் சுதந்திரம் மூக்கனாங் கயிற்றின் நீள சுற்று வட்டத்துடன் மட்டுப்படுத்தப்பட்டது என்பது இணக்க அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தெரியும்.

உண்மையில் இணக்க அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளும் சரி மறைமுக இணக்க அரசியலை நடத்தும் தமிழ்த் தலைமைகளும் சரி அவர்களது பேச்சுக்கள் அறிக்கைகள் எல்லாம் தமிழ் மக்களை உசுப்பேற்றி தேர்தல் நோக்கி தமிழ் மக்களை தமிழ் ஊடகங்களுக்கூடாக வழி நடத்தும் உத்தி என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

இந்த ஊடகப் போரினால் பேரினவாதச் சக்திகளின் பயணம் தடுத்து நிறுத்தப்பட்டதாக 2009க்குப் பிற்பட்ட தமிழர் அரசியலில் பதிவுகள் ஏதும் இல்லை.

தற்போது தமிழ் மக்கள் பேரினவாத பேரலைக்குள் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பௌத்த விகாரைகளாகவும் சிங்களக் குடியேற்றங்களாகவும் தமிழர் பிரதேசங்கள் கரைந்து கொண்டு போகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி தமிழ்த் தலைமைகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தலைமைகள் தேர்தல்களை நோக்கி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

• இளைஞர்கள் அரசியல்வாதிகளாக வேண்டும்!
• தமிழ்த் தலைமைகள் ஈகோவுக்குள்ளும் சுயநலத்துக்குள்ளும் மூழ்கிக் கிடக்கின்றன. மாற்றீடாக இளைஞர்கள் அரசியல்வாதிகளாக வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.
• இதற்கும் அப்பால் தமிழர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது உண்மைதான். இவர்களில் யார் உண்மையான தலைவர்கள்? தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் இறுதிவரை போராடுபவர்கள் யார் என்று அடையாளம் காண முடியாதிருக்கின்றது. தமிழர்களிடம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று பின்னர் சுய நல பாதையில்பயணிக்கின்றனர். இதனால் மக்கள் எவரையும் நம்பத் தயாராக இல்லை. தமிழ் மக்களுக்காக மூச்சுமுட்ட கத்தி மக்களின் பிரதிநிதியாகி சிங்கள அரசாங்கம் குதிரை ஓட குனிந்து நிற்கின்றனர் என தமிழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
• மிக அப்பட்டமான தரகு அரசியல் மாத்திரமே நடைபெறுகின்றது என்று கூறும் தமிழ் மக்கள் இவர்கள் தமிழ் மக்களை உருப்பட விட மாட்டார்கள் என்றும் கூறுகின்றனர்.
• இலங்கை அரசியல்வாதிகள் மக்களின் துன்பங்களை ஆயுதமாக்குவதில் திறமையானவர்கள், கைதேர்ந்தவர்கள் என தென்னிலங்கை மக்கள் இன்று வெளிப்படையாகக் கூறத் தொடங்கிவிட்டனர். தமிழ் தலைமைகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்கில்லை என்பது தமிழ் மக்களுக்கும் தெரிந்த விடயமே.
• மனித துயரத்திலிருந்து ஏதேனும் அரசியல் இலாபங்களைப் பெற முடியுமா? என்பதுகுறித்தே சிந்தித்து தமிழ்த் தலைமைகள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.
• தங்களின் சலுகைகளையும் அரசியல் அந்தஸ்தத்தையும் உயர்த்திக் கொள்வது மட்டுமே அவர்களின் கண்களுக்குத் தெரிகின்றன என்றால் அது மிகையாகாது என்றும் தமிழ் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

(தொடர்ச்சி 23 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்தியர்களைப் போல் ஒன்றுபடுங்கள் – யாழ்ப்பாணத்தில் புத்தி ஜீவிகளிடம் மைத்திரி வேண்டுகோள்





இந்தியா பல இன, மொழி, மத மக்கள் வாழும் நாடாக உள்ள நிலையில் இந்தியர்கள் என்ற நீதியில் அனைவரும் ஒன்றுபடுவதைப் போல இலங்கையிலும் இலங்கையர் என்ற நீதியில் அனைவரும் ஒற்றுபட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த 1ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள புத்திஜீவிகள் பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மருத்துவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், 30 வருட யுத்தம் வடக்கையும் தெற்கையும் பிரித்த நிலையில் யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடக்கும் நிலையில் எமக்குள் ஒற்றுமைப்படுதல் இல்லாமல் காணப்படுகிறது.

இதற்கு இந்தியா நல்ல உதாரணம் இந்தியாவில் பல இன மொழி மத க்கள் பின்பற்றப்படும் நாடாக உள்ள நிலையில் அவர்கள் இந்தியர்கள் என்ற நீதியில் ஒற்றுமைப்படுவார்கள்.

எமது நாடும் பல இன மொழி மதங்களை கொண்ட நாடாக காணப்படுகின்ற நிலையில் எமக்குள் இலங்கையர் என்ற நீதியில் ஒற்றுமைப்பட முடியாமல் உள்ளது.

அதற்கு கடந்த கால கசப்பான அனுபவங்கள் ஆட்சியாளர்களின் கடும் போக்கு சிந்தனைகள் எம்மை ஒற்றுமைப்படுத்தலில் இருந்து விலக்கி வைத்துள்ளது.

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற காலத்தில் வட மாகாணத்துக்கு 21 தடவைகள் வருகை தந்த ஜனாதிபதி நான்தான்.

ஏன் நான் அதிக தடவை வந்தேன் என்பதற்கு காரணம் இருக்கிறது வடக்கையும் தெற்கையும் சமதளத்தில் கொண்டு செல்ல வேண்டும்.

வடக்கில் வாழும் மக்களின் அரசியல் அபிவிருத்தி அன்றாட பிரச்சனைகளைகளை தீர்வு கண்டு அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் சம அந்தசுள்ளவர்களாக பயணிக்க வேண்டும் என விரும்பினேன்.

அதற்காக வடக்கு அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பித்து அதனூடாக பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதிகளை ஒதுக்கினேன்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் மயிலிட்டித் துறைமுகம் போன்ற அபிவிருத்தி பணிகளை துரிதகதியில் செயல்படுத்தினோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு செல்ல முடியாமல் அகதி முகங்களில் தங்கி இருந்த நிலையில் எனது ஆட்சி காலத்திலேயே சுமார் 2500 ஏக்கர் காணிகளை விடுவித்தேன்.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காகன புதிய அரசியல் அமைப்பின் தேவை கருதி புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்தேன் துரதிஷ்டவசமாக ஆட்சி மாற்றம் காரணமாக முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை.

நான் வடக்கு மக்களை மறக்கவில்லை அவர்களில் 80 வீதமானவர்கள் என்னை ஜனாதிபதி ஆக்குவதற்கு அர்ப்பணித்தவர்கள் என்பதை புத்திஜீவிகளான உங்கள் மத்தியில் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புத்திஜீவிகள் ஆகிய உங்களிடம் நான் ஒன்றை கூற விரும்புகிறேன் எமது அயல் நாடான இந்திய நாட்டிலும் பல்வேறு பிரச்சனைகள் உள்ள நிலையில் இந்தியர்கள் என்ற நீதியில் அவர்கள் ஒற்றுமைப்படுவதைப் போல நாமும் இலங்கையர் என்ற நீதியில் ஒற்றுமைப்படுவோமாயின் பல்வேறு பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வரலாற்று சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு



யாழ். வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு எண்ணெய்காப்பு சாத்தும் முதல்நாள் நிகழ்வு இடம்பெற்றது.

கரும ஆரம்ப கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று இனிதே எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இனிதே ஆரம்பிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 07.07.2023 அன்று நடைபெறவுள்ளது.

எண்ணெய் சாத்தும் நிகழ்வு 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியில் இருந்து 06 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.00 மணி வரை இடம்பெறும். 07 ஆம் திகதி காலை 8.45 மணி முதல் 10.15 மணி வரை கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிசேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிசேகம் இடம்பெறும். ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களின் நன்மை கருதி யாழ். காரைநகர் இடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் எதிர்வரும் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆலயத்தினூடாக சேவையை மேற்கொள்ளும் எனவும் போக்குவரத்துயினர் தெரிவித்துள்ளனர்.





# வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் 2000 பேருக்கான ஆளணி பற்றாக்குறை – பணிப்பாளர் சத்தியமூர்த்தி



வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளிலே மொத்தமாக 8000 பேர் அனுமதிக்கப்பட்ட ஆளணியாக இருந்தாலும் சுமார் 2000 பேருக்கான ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆளணி பற்றாக் குறை காணப்படுகின்றது. அதில் குறிப்பாக ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுகாதார உதவியாளர்களாக காணப்படுகின்றார்கள்.

அதேபோல தாதியர்கள் மருத்துவமாதுக்கள் என பல்வேறு பட்ட நிலைகளிலும் ஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் புதிதாக உள்வாங்குவதில் தாமதம் காணப்படுகின்ற படியினால் எதிர்வரும் காலங்களில் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த நியமனங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# மன்னார் நகரில் புதிதாக திறக்கப்பட உள்ள மதுபான விற்பனை நிலையத்திற்கான அனுமதி யை உடன் நிறுத்துக – மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

- மன்னார் நிருபர் (04-07-2023)

மன்னார் நகரில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட உள்ளமை குறித்தும், அதற்கான அனுமதியை உடன் நிறுத்தக் கோரியும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் செவ்வாய்க்கிழமை (4) மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப்பிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் புனித செபஸ்தியார் ஆலய வீதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முன்பாக புதிதாக மது விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட உள்ளதாக அறிகிறோம்.



மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமான போதை பொருட்களால் சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்கிறோம்.

குறிப்பாக இளையோர் மத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்கள் பலரும் போதைக்கு அடிமையாகி உள்ளனர்.

அத்துடன் சாதாரண தொழிலாளர்களின் நாளாந்த வருமானத்தின் பெரும் பகுதி இவ்வாறான போதை வஸ்துக்கு பயன் படுத்தப்படுவதால் குடும்ப வாழ்வில் பெரும் பின்னடைவை சந்திப்பதோடு சிறுவர்கள் மத்தியில் பல்வேறு உளத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

மன்னார் நகரத்தில் எந்த பகுதியிலும் அனுமதி வழங்குவது சமூக நிலையியலுக்கு உகந்தது இல்லை.

எனவே மக்கள் செறிந்து வாழும் பிரதேசமும் மிக கிட்டிய தூரத்தில் மூன்று ஆலயங்கள் இருப்பதாலும் அவ்விடத்தில் மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவ்விதமான அரசியல் அழுத்தம் ஏற்பட்டாலும் அனுமதி வழங்கக் கூடாது என்பதை தங்களுக்கு சமூக நலனியல் நோக்கு நிலையிலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



பொது அமைப்புக்களின் ஒன்றியம்
மன்னார் மாவட்டம்
Federation Of Community Based Organizations
Mannar District
Main Street, Mannar.
Tel : 077-8355464

இலங்கைச் செய்திகள்
Sri Lanka News

# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கெடுக்க மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் நேசன் அடிகளார் சென்னை பயணம்



- மன்னார் நிருபர் (4-07-2023)

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் சென்னையில் நடைபெற இருக்கும் பதினொராவது (11) உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கெடுப்பதற்கு சென்னைக்கு பயணமாகிறார்.

யூலை மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை சென்னை செம்மஞ்சேரியில் அமைந்துள்ள ஆசியவியல் நிறுவன வளாகத்தில் இம்மாநாடு இடம்பெறுகின்றது.

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களின் தமிழியல் ஆய்வுகள் தொடர்பான இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை அடிகளார் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கின்றார்.

# தனியார் கல்வி நிறுவனங்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நன்றி தெரிவிப்பு



ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் தனியார் வகுப்புக்களை தடை செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றிய தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிரத்தியோக கல்வி நிறுவனங்களுக்கும் நன்றியை தெரிவிப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது, 2023.06.09 ஆந் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிரத்தியேக் கல்வி வகுப்புக்களிலும் வாரத்தில் ஏழு நாட்களும் கல்விச்செயற்பாட்டில் ஈடுபடுவதனால் பிள்ளைகளிற்கும் சமூகத்திற்கும் ஏற்படும் சாதக, பாதக நிலைமைகள் பற்றி கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

"ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமை மாலை நேரங்களிலும் தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியோ வகுப்புக்களும் தரம் 9 வரையான மாணவர்களிற்கு வகுப்புக்களை நடாத்துவதனை தவிரத்தல்" எனும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதனை ஏற்று யூலை மாதம் 02 ஆம் திகதியிலிருந்து அதனை நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தனியார் கல்வி நிறுவன நிரவாகத்திற்கும் பிரத்தியோ வகுப்புக்களை நடாத்துபவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறித்த விடயத்தில் தங்களது குழந்தைகளின் எதிர்காலம் கருதி ஒத்துழைத்த அனைத்து. பெற்றோர்களிற்கும் எனது நன்றியினை தெரிவித்து இதடைமுறையை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டுமென அனைத்து தரப்பினரையும் அன்போடு வேண்டுகின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா ஊடக அமையத்திற்கும் அமெரிக்க நிறுவனத்திற்கும் இடையில் வலுவூட்டல் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்து



வவுனியா ஊடக அமையத்திற்கும் அமெரிக்க நிறுவனத்திற்கும் (USAID) இடையில் வலுவூட்டல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டுள்ளது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் குறித்த ஒப்பந்தம் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி. சபர்ஜா முகுந்தன் மற்றும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அன்னமலர் சுரேந்திரன், அமெரிக்க நிறுவன திட்டப் பணிப்பாளர் ஜெ. கார்த்திகேயன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (04.07.2023) கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்காவைத் தலைமையகமாக கொண்டு இயங்கும் குறித்த நிறுவனம் (USAID) பொருளாதார ரீதியாக பாதிப்படைந்த மற்றும் போரால் பாதிப்படைந்த நாடுகளுக்கு தனது உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றனது. அதன் ஒரு கட்டமாக வவுனியா ஊடக அமையத்தின் கோரிக்கைக்கு அமைவாக வவுனியா ஊடகவியலாளர்களை வலுப்படுத்தல், ஊடக அமையத்தை மாவட்ட மட்டத்தில் வலுவூட்டல், மாவட்ட மக்களின் காணிப் பிரச்சனை உள்ளிட்டவற்றை தீர்வு நோக்கி நகர்த்துதல், தென்பகுதி ஊடகவியலாளர்களுடன் தொழில் சார் தொடர்புகளை பேணல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் ஊடகம் தொடர்பில் அறிவூட்டல் மற்றும் ஊடக பிரிவை ஆரம்பித்து வைத்தல் என்பவற்றை நோக்கமாக கொண்டு குறித்த ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது.






வவுனியா ஊடக அமையம் சார்பாக அதன் தலைவர் ப. கார்த்தீபன் அவர்களும், அமெரிக்க நிறுவனத்தின் சார்பாக அந் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஜெ.கார்த்திகேயன் அவர்களும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இதற்கு அமைவாக எதிர்வரும் 4 மாதங்களுக்கு குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதில் வவுனியா ஊடக அமையத்தின் உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை ஆடை தொழிற்துறையில் உற்பத்தி 25 சதவீதமாக குறைவடைந்தது

(05-07-2023)

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் மொத்த உற்பத்தியில் இருபத்தைந்து சதவீதத்திற்கும் குறைவான உற்பத்தியே இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

க்கு அதிகளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழிற்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான ஒன்றிணைந்த ஆடை உற்பத்தியாளர் ஒன்றியம் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்ததாக நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்த ஆடைத் துறையில் உள்ள பல தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலைகளை மூடிவிட்டு வெளிநாடுகளில் தமது கைத்தொழில்களை ஸ்தாபித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர காமினி வலேபொட தலைமையிலான குறித்த குழு முன்னிலையில் உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



மூலப்பொருளுக்கான வரிகள் மற்றும் மின்சாரக் கட்டணம் காரணமாக செலவுகள் அதிகரித்தல் காரணமாக சர்வதேச சந்தையில் அவர்களின் போட்டித்தன்மை வெகுவாகக் குறைந்துள்ளதுடன், புதிய கட்டளைகளை பெறுவதும் மிகக் கடுமையாகக் குறைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தொழில் சுமார் மூன்றரை இலட்சம் நேரடி வேலை வாய்ப்புகளையும், சுமார் மூன்று இலட்சம் மறைமுக வேலை வாய்ப்புகளையும் நாட்டுக்கு வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

மேலும் பல பில்லியன் பெறுமதியான பெறுமதி சேர் (VAT) வரியை திருப்பி செலுத்தாமையால் தாம் எதிர்கொண்டுள்ள சிரமங்கள் குறித்தும் ஆடை உற்பத்தியாளர்கள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

அந்நியச் செலாவணியை ரூபாவாக மாற்றுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிராந்தியத்தில் தற்போதுள்ள சட்டங்கள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.



# குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக களத்திற்கு சென்ற நீதவான்

(05-07-2023)

தொல்லியல் இடிபாடுகளுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவை மீறி குருந்தூர் மலையில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் முல்லைத்தீவு நீதிபதி ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

குறுந்தூர் மலையில் சட்டவிரோத பௌத்த கட்டுமானத்தை பார்வையிடுவதற்காக குருந்தூர் மலைக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் கள விஜயம் செய்தார்.

இதனை தொடர்ந்து தற்போது மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



# மரண அறிவித்தல்

பிறப்பு: 21-08-1968 இறப்பு: 01-07-2023



## திரு. சிவஞானம் சிவஞானச்சந்திரன் (Tony Siva)

கிளிநொச்சி வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, இந்தியா, பிரான்ஸ், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவஞானச்சந்திரன் அவர்கள் 01-07-2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சிவஞானம் காந்தபூபதி தம்பதிகளின் அன்பு மகனும், மோதிலால் Durpatti தம்பதிகளின் அன்பு மருமகனும்,
ஹேம்ராஜி அவர்களின் அன்புக் கணவரும்,
அலிஷா, மைக்கேல் அந்தோனி ஆகியோரின் அன்புத் தந்தையும்,
கமலவதனி, காலஞ்சென்ற தாமரவதனா, ஸ்ரீகிருஷ்ணானந்தசிங், ஸ்ரீநித்தியானந்தசிங், சிவயோகவதனா, ஸ்ரீவிவேகானந்தசிங், ஸ்ரீவிஜயானந்தசிங், சாந்தசற்குணவதனா, கமலானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பூரணசந்திரன், ஜானகி, சசிகலா, சண்முகதாசன், ஞானமலர், சாந்தி, மது, மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 08-07-2023 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை 384 Finley Ave., Ajax, ON L1S 2E3 இல் அமைந்துள்ள Ajax Crematorium and Visitation Centre இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் 09-07-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் பி.ப. 12:00 மணிவரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
அந்தோனி - மகன்: (647) 637-0763
ஸ்ரீ - சகோதரன்: (416) 655-7070

# முதலாமாண்டு நினைவஞ்சலி



## அமரர் ஐயாத்துரை சண்முகம்

(பிரபல புகையிலை வர்த்தகர் - கொக்குவில் கிழக்கு)

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும்,
றொறன்றோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட
பிரபல புகையிலை வர்த்தகருமாகிய ஐயாத்துரை சண்முகம் அவர்களின்
முதலாவது ஆண்டு நினைவுதினம். 11 யூலை 2023.

அம்மாவுக்கு அன்பான கணவனாகவும் பிள்ளைகளாகிய எங்களுக்கு அப்பாவாகவும்
அன்போடும் பாசத்தோடும் வாழவைத்த நீங்கள் தெய்வமாகி ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் அழியாது எங்களின் மனதில் நிலைத்து வாழ்கின்றீர்கள்.
அப்பா உங்களின் சீரான உடையும், சுறுசுறுப்பான நடையும்,
சிரித்த முகத்துடன் உறவுகளுடன் நட்பு பாராட்டி வாழ்ந்த வாழ்க்கை மீண்டும் வருமா?

அப்பா எங்கள் தாய்நாட்டில் ஊரார் போற்ற சமூகசேவைகள் செய்து வாழ்ந்தீர்கள்.
உங்கள் உயர்ந்த உள்ளத்தாலும் நல்ல குணத்தாலும்
ஆண்டவன் அழைத்து விட்டான்.நீங்கள் தெய்வம் ஆகிவிட்டீர்கள் அப்பா.



உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி
என்றும் உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்

அன்னை மடியில்: 19-07-1927
ஆண்டவன்அடியில்: 23-06-2022

தகவல்: மனைவி மற்றும் குடும்பத்தினர்
(416) 287-9720

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND




## Our Services

- 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit
- Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

# மன்னார் ஈச்சளவக்கை கிராமத்தின் அவல நிலை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## அபிவிருத்திப் பணிகளில் தொடர்ந்து ஓரங்கட்ட படுவதாக மக்கள் விசனம்







- மன்னார் நிருபர் (5-07-2023)

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் "காயா நகர்" கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஈச்சளவக்கை கிராமம் கடந்த 2002 யுத்த காலப் பகுதியில் இடம் பெயர்ந்து குடியிருப்பதற்கு காணிகளற்று நிர்க்கதியாக நின்ற பல இடத்து மக்களையும் ஒன்று சேர்த்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியில் இப்பகுதி ஒரு குடியேற்றப் பகுதியாக நிறுவப்பட்டது.

ஆனால் தற்போது சகல அபிவிருத்தி செயற்பாடுகளிலும் ஈச்சளவக்கை கிராமம் ஓரங்கட்ட படுவதாக அந்த கிராமத்து மக்கள் தெரிவிக்கிறார்கள்.

ஈச்சளவக்கை கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் திருச்செல்வம் கருத்து தெரிவிக்கையில், கடந்த 2002ம் ஆண்டு யுத்த காலப்பகுதியில் மக்கள் காணிகளற்று நிர்க்கதியாக நின்று கொண்டிருந்த அந்த காலப் பகுதியில் இன்று ஈச்சளவக்கை கிராமமாக காணப்படும் இடமானது அன்றைய காலகட்டத்தில் பெரும் வனப்பகுதியாக காணப்பட்டது. அந்த சமயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில் காணியற்ற மக்களுக்கு ஒரு ஏக்கர் காணி வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு சுமார் 98 குடும்பத்தினர் அப்போது குடியேற்றப் பட்டார்கள்.

இவை யாவும் அப்போது வன்னியில் ஊரக வளர்ச்சிப் பணி என்ற ஒரு கட்டமைப்பு இந்த ஈச்சளவக்கை கிராமத்தை தத்தெடுத்துக் கொண்டது.

அதன் முக்கிய நோக்கமாக அந்த கிராமத்தினுடைய சமூக பொருளாதார கல்வி மேம்பாடுகள் என்ற பல்வேறு வகையாக அந்த மக்களுடைய அடிப்படை பிரச்சனைகளையும் அந்த நேரத்தில் பல்வேறுபட்ட நெருக்கடியான நிலையிலும் மாணவர்களும் மக்களும் தங்களுடைய கல்வியிலும் வாழ்வாதாரத்தில் முன்னோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியில் 98 குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டது. அந்த நேரத்தில்தான் மக்கள் யுத்தத்தினால் இடப்பெயர்வை சந்திக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள் அப்போது அந்த மக்கள் அனைத்து உடமைகளையும் விட்டும் இடம்பெயர்ந்து இறுதி யுத்தம் வரை சென்றார்கள்.

இறுதி யுத்தத்தின் பின்னர் அந்த மக்கள் மீளக் குடியேறி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஈச்சளவக்கை கிராமத்தில் வசிக்கத் தொடங்கினார்கள்.

அதன் பின்னர் பல்வேறு பட்ட அரசியல் நெருக்கடிகளை அந்த மக்கள் சந்தித்தார்கள். மீள்குடியேற்றத்தின் பின் அந்த மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. குறிப்பாக ஈச்சளவக்கை கிராமத்தை அண்மித்த அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு கொண்டிருந்தது. ஆனால் ஈச்சளவக்கை கிராமத்து மக்களுக்கு மின்சாரம் வழங்காமல் குப்பி விளக்குடன் வாழ்ந்தார்கள். இந்த நிலைமைகளை போக்குவதற்கு பல சிரமங்களின் பின் மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது என்றார்.

வீதி பிரச்சனை

குறிப்பாக ஆறு கிலோ மீற்றர் நீளமான 11 வீதிகள் எதுவும் சீரமைக்கப்படவில்லை. 2002ல் குடியேற்றம் செய்யப்பட்ட போது அன்று போடப்பட்ட கிரவல் வீதிகளுடன் தான் அந்த மக்கள் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மழை காலங்களில் வீதிகளில் மக்கள், பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

2002ல் முதன் முதலாக குடியேற்றம் செய்யப்பட்ட போது அமைக்கப்பட்ட வீதிகள் இன்று வரை அதன் அடையாளமாக காணப்படுகிறதே தவிர எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை.

இது தொடர்பாக பல அரசியல்வாதிகள் அரச அதிகாரிகளிடம் தெரிவித்த போதும் எது வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. அயல் கிராமங்களுக்கு அனைத்து வீதிகளுக்கும் காபட் வீதிகளும் மின் விளக்குகளும் போடப்பட்டுள்ளது. ஈச்சளவக்கை கிராமத்திற்கு அவ்வாறான வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது.என அந்த கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள்.

குடிநீர் பிரச்சினை

அதை விட இந்த கிராமத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினை தூய்மையான குடிநீர் இன்றி சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் அதே ஈச்சளவக்கை கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் குழாய் மூலமாக பெரியமடு வட்டாரம், விடத்தல் தீவு வட்டாரத்தில், உள்ள பல கிராமங்களுக்கு நீர் செல்கிறது. ஆனால் நீர் எடுக்கும் கிராமத்து மக்கள் குடிப்பதற்கு தூய குடிநீர் இல்லை. அதே போல் ஒரே கிராம சேவையாளர் பிரிவில் உள்ள இரண்டு கிராமங்கள் காயா நகர் கிராமத்திற்கு குடிநீர் செல்கிறது. ஈச்சளவக்கை கிராமத்திற்கு குடிநீர் இல்லை. இவ்வாறு இந்த ஈச்சளவக்கை கிராமம் ஆனது தற்போது வரை புறக்கணிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார்கள்.

காட்டு யானைகளால் பாதிப்பு

ஒவ்வொரு நாளும் காட்டு யானைகள் அச்சுறுத்தல் உடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அண்மையில் ஒருவர் தனது வீட்டில் உறங்கிய போது யானை தாக்கி இறந்துள்ளனர். இவ்வாறு இது வரை இரண்டு பேர் இறந்துள்ளார்கள்.

அது மட்டுமல்லாது மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கும் தென்னை, வாழை, உள்ளிட்ட பலன் தரும் மரங்களையும் அழித் துச் செல்கிறது. இதற்காகவும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

போதை வஸ்து பிரச்சனை

வாழ்வாதாரத்திற்கு வயல்காணிகளோ, மேட்டு நிலக்காணிகளோ, இல்லாமலும் ஒழுங்கான தொழில் வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் இப்பகுதியில் கள்ளச்சாராயம் உட்பட போதை வஸ்து பாவனைகள் அதிகமாக காணப்படுகிறது. இவை இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்றால் இப்பகுதி மக்களுக்கு வாழ்வாதாரத்திற்காக வயல் காணிகள் வழங்கப்பட்டு தொழில்கள் மூலம் வருமானங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார்கள்.

மாணவர்களுக்கான கல்வி தரமுயர்த்த வேண்டும்

பாடசாலைக்குரிய பௌதீக கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் குறிப்பாக கணினி போன்ற புதிய தேடல்களுடன் ஏனைய கல்விச் சமூகம் பயணிக்கும் போது குறிப்பிட்ட வசதிகளுடன் எமது மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். எமது மாணவர்களுக்கு அவ்வாறான தரமுயர்த்த கல்விகள் வழங்கப்பட வேண்டும். இங்கு சாதாரண தரம் வரை உள்ளது. உயர்தரப் படிப்பிற்காக மாணவர்கள் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. எமது பாடசாலையில் தரமுயர்த்தப்படும் போது பாடசாலை வளர்ச்சி அடையும் அதே நேரம் மாணவர்களின் இடைவிலகல் தவிர்க்கப்படும் என்றார்கள்.

எனவே மக்களை துன்பப்படுத்தும் இவ்வாறான நிலைகளில் இருந்து மக்கள் விடுபட வேண்டுமானால் தூய குடிநீர் வழங்கப்பட வேண்டும். வீதிகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும், மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும், மற்றும் எமது மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஏனைய கட்டமைப்புகளையும் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து செய்து தர வேண்டும் என அப்பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.







# மன்னார் தோட்டவெளி பகுதியில் தீக்கிரையான வீடு மீள் புனரமைப்பு செய்வதற்கு நிதிஉதவி

- மன்னார் நிருபர் (05.07.2023)

மன்னார் தோட்டவெளி பகுதியில் கடந்த வாரம் குடிசை வீடு ஒன்றில் தீ பரவல் ஏற்பட்டதன் காரணமாக முழு வீடும் எரிந்து நாசமாகி இருந்தது.

குறித்த குடும்பம் மிகவும் வறுமை பட்ட நிலையில் வாழ்ந்து வந்ததுடன் 7 மற்றும் 9 ஆம் தரத்தில் கற்கும் இரு பிள்ளைகள் உட்பட அக் குடும்பத்தினர் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் எரிந்த வீட்டை கூட சரிபடுத்த முடியாத நிலையில் பலரிடம் உதவி கோரியிருந்தனர்.



இந்த நிலையில் குறித்த கோரிக்கையை ஏற்று மன்னார் தமிழரசு கட்சியின் கிளை தலைவரும் சட்டத்தரணியுமான S. டினேஸனின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த குடும்பத்தின் வீட்டின் கூரை அமைப்பதற்கு உதவிகள் வழங்கப்பட்டது.

மன்னார் தமிழரசு கட்சியின் கிளை உறுப்பினர்கள் இணைந்து மேற்கூரை அமைப்பதற்கான பொருட்களை அக் கு டு ம ் ப த ் த ி ற ் கு செவ்வாய்க்கிழமை (4) வழங்கி வைத்தனர்.



அதே நேரம் குறித்த குடும்பத்தினர் இவ் பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் வறுமையில் வாடுவதால் உதவ முடிந்தவர்கள் குறித்த குடும்பத்திற்கான மேலதிக உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அன்பின் தொனி - 696

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**
**ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை** - Praying is a Command
**ஜெபத்திற்கான வாக்குத்தத்தம்** - Promises for Prayer

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன், அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.
**- ஏசாயா 65: 24**

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப் பீர்கள். **- ஆமோஸ் 5: 4**

அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன், அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன், இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்.
**- சகரியா 13: 9**

நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பல னளிப்பார். **- மத்தேயு 6: 6**

மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.
**- லூக்கா 11: 9**

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். **- யோவான் 14: 13-14**

**ஜெபத்தில் தரித்திருக்கும் முறைகள்** - Posture for Prayer
அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனி தன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்றார்கள்.
**- எண்ணாகமம் 16: 22**

அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார், அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார், யோசுவா அப்படியே செய்தான்.
**- யோசுவா 5: 14-15**

பின்பு சாலொமோன்: கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன்னே இஸ்ரவேல் சபையாரெல்லாருக்கும் எதிராக நின்று, வானத திற்கு நேராய்த் தன் கைகளை விரித்து: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை, தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர். **- 1 இராஜாக்கள் 8: 22-23**

தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின் பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் கண்டான், அப்பொழுது தாவீதும் மூப்பர்களும் இரட்டுப் போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுந்தார்கள்.
**- 1 நாளாகமம் 21: 16**

சாலொமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான ஒரு வெண்கலப் பிரசங்கபீ த்தை உண்டாக்கி, அதை நடுப்பிராகாரத்திலே வைத்திருந்தான், அதின்மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து: **- 2 நாளாகமம் 6: 13**

நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில், என் விண்ணப்பங்க ளின் சத்தத்தைக் கேட்டருளும்.
**- சங்கீதம் 28: 2**

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். **- சங்கீதம் 95: 6**

**தொடரும்...**

# நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கடற் தெப்போற்சவம்


வரலாற்று சிறப்புமிக்க பெற்ற யாழ் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் பதினாறாவது நிறைவுநாள் உற்சவமாக தெப்போற்சவம் 04.07.2023 அன்று இரவு இடம்பெற்றது.

இதில் நயினாதீவு நாகபூசணி அம்பாள் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இதில் பல பாகங்களில் வருகைதந்து பக்தர்களின் பக்திபூர்வமாக அருள்கடாச்சத்தினை பெற்றுச்சென்றனர்.








# மண்டைதீவுக் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கையை எதிர்ப்போம் — சிறீதரன் எம்.பி அழைப்பு

யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் (J/07) உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், எதிர்வரும் 2023.07.12 ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் (12-07-2023) காலை 7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.



# வவுனியாவில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இயங்கியதாக கூறப்படும் விருந்தினர் விடுதி முற்றுகை — 20 வயதுடைய இளம் பெண் உட்பட நால்வர் கைது

(05-07-2023)

வவுனியா ஏ 9 வீதி மூன்று முறிப்பு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் பாலியல் தொழில் இடம் பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா தலைமை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையில் நீதி மன்ற அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 20 வயதுடைய இளம் பெண் உட்பட 4பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன் போது பாலியல் தொழிலில் ஈடுபட்டனர் எனும் குற்றச்சாட்டில் விடுதியில் தங்கியிருந்த 20, 34 வயதுடைய இரு பெண்களும், போதைப் பொருள் பாவித்திருந்தமையுடன் விபச்சாரத்திற்கு உடந்தையாக செயற்பட்டனர் எனும் குற்றச்சாட்டில் இரு ஆண்கள் என நால்வரை வவுனியா பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரின் மருத்துவ அறிக்கைகள் பெறப்படவுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நால்வரையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விருந்தினர் விடுதியில் பாலியல் தொழில் பின்னனியில் முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் பின்னணியில் இயங்குகின்றமையும் விசாரணைகளில் வெளியாகியுள்ளன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 28 ஆண்டுகளாக மகனது விடுதலைக்காய் போராடி, 77 வயதில் ஏமாற்றத்தோடு இறைபதம் எய்திய வாகீஸ்வரி அன்னையின் முதலாமாண்டு நினைவேந்தல்!

கலாசாலை வீதி, திருநெல்வேலி - யாழ்ப்பாணத்தை சேர்ந்த விக்கினேஸ்வரநாதன் பார்த்தீபன் என்ற தமிழ் அரசியல் கைதியின் தாயாரான விக்கினேஸ்வரநாதன் வாகீஸ்வரி, 27 ஆண்டுகளாக தொடர் சிறை வைக்கப்பட்டுள்ள தனது மகனது விடுதலைக்காக கடுமையாகப் போராடி வந்திருந்த நிலையில், பிள்ளையின் முகம் காணாமலே கடந்தாண்டு இவ்வுலகைவிட்டு பிரிந்திருந்தார்.

சமூக எண்ணங்கொண்டு இம்மண்ணை நேசித்த வாகீஸ்வரி அம்மாவின் ஆத்மா உண்மையிலேயே சாந்தியடைய வேண்டுமானால், 28 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை சிறைவைக்கப்பட்டுள்ள பார்த்தீபன் உட்பட சக தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும் என்கின்ற மெய்ப்பொருளின் அடிப்படையில், தாயாரது முதலாமாண்டு நினைவேந்தலை குரலற்றவர்களின் குரல் அமைப்பு, குடும்பத்தாருடன் இணைந்து அடையாளப்படுத்தி அனுஸ்டித்துள்ளது.





# சீன அட்டை இனத்தால் எமது அட்ட இனங்கள் அழிகின்றன — சுப்பிரமணியம் தெரிவிப்பு

இலங்கைக்கே உரித்தான அட்டைக் குஞ்சுகள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அட்டை இனங்களால் அழிவுக்குள்ளாவதாக அகில இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (5) அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கடற்பரப்பில் அட்டை பண்ணைகள் விஸ்தரிக்கப்பட்டு சீனா நிரந்தரமாக கால் ஊன்றுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகிறது.

பாரம்பரியமாக கடற் தொழிலை மேற்கொண்டு வந்த மீனவ மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள துறை சார்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அக்கறை இன்றி செயல்படுகிறார்.

மீனவர் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை அமைச்சர் நளினமாக பார்ப்பதுடன் சில வேளை கிண்டலடிக்கும் செயற்படுகளும் இடம்பெறுகிறது.

தீவக வடக்கு ஊர்காவற்துறை பகுதியில் தடை செய்யப்பட்ட மீன் பிடி நடவடிக்கையை தடை செய்யுமாறு அரச அதிபர் கோரிய நிலையிலும் கடற் தொழில் அமைச்சரின் ஆதரவுடன் மீன்பிடி நடவடிக்கை இடம் பெறுகிறது.

குறித்த செயற்பாட்டை நோக்கும்போது அமைச்சர் தனது வாக்கு வங்கிக்காகச் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுகின்றது.



அட்டைப் பண்ணைகளால் கடல் வளத்துக்கு பாதிப்பு என பல தடவைகள் அமைச்சருக்கு தெரியப்படுத்தவும் அதனை விரிவுபடுத்தும் செயற்பாட்டிலே ஈடுபட்டு வருகிறார்.

அட்டை பண்ணைகள் பத்து வருடங்களுக்குப் பின்னர் கைவிடப்படும் நிலை உருவாகும் போது மீனவர்கள் சோம்பேறிகளாகி கடல் தொழிலுக்கு செல்ல முடியாத சூழல் உருவாகும்.

ஆகவே எமது வளமான கடற் பிரதேசம் சீனாவின் நிரந்தரக் கடற் பிரதேசமாக மாறுவதற்கு முன்னர் அதனை தடுத்து நிறுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் முன்னாள் சமாசத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கரை நகர் அம்பாள் கடை தொழிலாளர் சங்கத்தின் தலைவர் இராஜசந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பதின் மூன்றாவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது



## சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநரும் அசியல் ஆய்வாளருமான சட்டத்தணி சி.அ. யோதிலிங்கம்

பதின்மூன்றாவது திருத்தத்தை திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது. அது இலங்கை இந்திய அரசுகள் பேசி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தம். இது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையாது. ஆகவே இது தொடர்பாக தமிழ் கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநரும் அசியல் ஆய்வாளருமான சட்டத்தணி சி.அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் தனது அலுவலகத்தில் நடத்திய ஊடக மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, 13-வது திருத்தம் தற்போது மீண்டும் பேசு பொருளாகி வந்திருக்கிறது.

இந்தியா எவ்வாறாயினும் பதினொன்றாவது திருத்தத்தினை அரசியல் தீர்வாக திணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது.

பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநில தலைவர் அண்ணாமலை அவர்கள் புலம்பெயர் நாடுகளுக்குச் குறிப்பாக லண்டனுக்கு சென்று புலம்பெயர் தரப்புகளோடு 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பேசியிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியம் இன்று எப்பாடுபட்டாவது இனப் பிரச்சினையை தீருங்கள் என்று ஒரு நிபந்தனையை வைத்ததாக கூறப்படுகிறது.

அதேபோல படையினர் உடைய எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்குமாறு நிபந்தனை வைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஆகவே இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஏதோ ஒரு வகையில் இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டிய ஒரு கட்டாயம் வந்திருக்கிறது.

இந்தியாவிற்கும் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பில் 13க்கு அப்பால் செல்வதற்க்கான விருப்பங்கள் எவையும் இல்லை. இந்த நிலையில் தமிழ் தரப்பை 13வது திருத்தச் சட்டத்தை எப்படியாவது ஏற்க வைக்க வேண்டும் என்கின்ற ஒரு வகையான அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

13-வது திருத்தம் ஏற்கனவே யாப்பில் உள்ள ஒரு விடயம். அதனை நடைமுறைப்படுத்தப்படுவது அரசினுடைய கடமை.

இதைவிட பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான பொறுப்பு தமிழ் மக்களுக்கு இல்லை. ஏனெனில் 13வது திருத்தம் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது.

அது இரண்டு அரசுகளில் தங்களுக்குள் பேசி கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம்.

தமிழ் மக்களுக்கு அது தொடர்பான எந்த விதமான பொறுப்பும் இல்லை.

அதே வேளையில் அரசியல் தீர்வாக திணிக்கின்ற ஒரு முயற்சி இடம்பெறுகிறது. ஆகவே இந்த முயற்சியை தமிழ் மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

13-வது திருத்தம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை தீர்த்துக் கொள்வதற்கு எந்த வகையிலும் போதுமானதாக இல்லை. அது ஒரு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு அரசியல் தீர்வு.

ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு திருத்தம் தான் 13 வது திருத்தம். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த அதிகார பகிர்வும், நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எந்வித பயனையும் தரப்போவதில்லை.

இதைவிட பல நெருக்கடிகள் 13 வது திருத்தத்தில் இருக்கின்றன.

ஒன்று ஆளுநருடைய அதிகாரம். நிர்வாக துறையை அதிகாரம் முழுமையாக ஆளுநரிடமே இருக்கிறது.

முதலமைச்சரும் அமைச்சரும் வெறுமனே அவர்கள் ஒரு ஆலோசனை கூறுபவர்களாக மட்டும் தான் இருக்கிறார்கள்.

மாகாண சபை சட்டம் இயற்றுவதில் பல்வேறு தடைகள் இருக்கிறது பாராளுமன்றம் ஒரு தடை, ஆளுநர் ஒரு தடை, ஜனாதிபதி ஒரு தடை சட்டமா அதிபர் ஒரு தடை, உயர் நீதிமன்றம் ஒரு தடை, ஒரு தடை என்று சொல்லி பல தடைகள் இருக்கின்றன.

இதைவிட தமிழ் மக்களினுடைய கூட்டிருப்பை, கூட்டுரிமையை, கூட்டு அடையாளத்தை, பேணக்கூடிய வகையிலே வடக்கு கிழக்கு இணைக்கப்படவில்லை. அது இப்போது பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இவ்வாறான ஒன்றை தமிழ் மக்கள் ஒருபோதும் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தொடர்பாக ஆதரிக்கின்ற தமிழ் கட்சிகள் இது தொடர்பாக முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது பதிமூன்றாவது திருத்தை நடைமுறை படுத்துவது என்பது வேறு. அதனை அரசியல் தீர்வாக திணிப்பது என்பது வேறு.

இங்கே நடைமுறைப்படுத்துவது என்று சொல்லிக் கொண்டு அரசியல் தீர்வாக திணிக்கின்ற முயற்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த திணிக்கின்ற முயற்சிகளுக்கு தமிழ் கட்சிகள் ஒருபோதும் துணை போகக்கூடாது.

அவ்வாறு துணை போனால் அது தமிழ் மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகத்தான் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

அவ்வாறு அவர்கள் போவார்களே ஆனால் அவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதை தவிர வேறு வழி இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

இந்தியாவிற்கு பதின்மூன்றாவது திருத்தம் தேவை என்று சொல்லிச் சொன்னால் 13-வது திருத்தத்தை சமஸ்டி முறமை ஆக்குங்கள்.

பதின் மூன்றாவது திருத்தத்தில் நான்கு வகையான திருத்தங்களை கொண்டு வந்தால் அதனை சமஸ்டியாக மாற்ற முடியும்.

இலங்கை இந்திய அரசியல் யாப்பில் உறுப்புரை இரண்டு சொல்கிறது இலங்கை ஒரு ஒற்றை ஆட்சி அரசு என்று.

இந்த ஒற்றை ஆட்சி அரசு என்பதை மாற்றி விடுங்கள். அதேவேளையில் பாராளுமன்றம் அதன் சட்ட வாக்கத்தை துறத்தலோ பாராயணப்படுத்தலோ ஆகாது என்று அதன் உறுப்புரிமை 76 சொல்கிறது.

ஆகவே அந்த 76 ஐ நீக்குங்கள். ஆளுநரிடம் உள்ள அதிகாரங்களை முதலமைசரை கொண்ட அமைச்சரவையில் ஒப்படையுங்கள். ஆளுநரை பேரளவில் நிர்வாகி ஆக்குங்கள் .மூன்று அதிகாரப் பட்டியல் இருக்கின்றன.

மூன்று அதிகார பட்டியல் இருக்கிறது. ஒத்தியங்கு பட்டியலை நீக்கிவிட்டு ஒத்தியங்கு பட்டியலில் உள்ள அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்குங்கள். மாகாண சபை அதிகாரங்களாக மாற்றுங்கள். வடக்கு கிழக்கை இணையுங்கள்.

இந்த திருத்தங்களை செய்தால் 13ஆவது திருத்தத்தை சமஸ்டியாக மாற்ற முடியும்.

அப்படி என்று சொன்னால் நாங்கள் அதனை ஆதரிக்க தயாராக இருக்கின்ற ஒரு சூழலை உருவாக்க முடியும்.

அது இன்றி இப்போது இருக்கின்ற 13 வது திருத்தத்தை ஒரு அரசியல் தீர்வாக திணிக்க முற்பட்டால் ஒருபோதுமே தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதான் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின்னுடைய எங்களுடைய நிலையான கருத்தாகும் என்றார் சட்டத்தணி சி.அ. யோதிலிங்கம்.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# முல்லைத்தீவு மனித புதை குழி அகழ்வு: "சர்வதேச வல்லுநர்களின் பிரசன்னம் தேவை"

- நடராசா லோகதயாளன்



**போ**ரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அச்சம் மற்றும் கவலையை அதிகரிக்கும் வகையில், முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழியின் முதல் நாள் அகழ்வில் மட்டும் 13 மனித எச்சங்கள் கண்டுடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மத்தியில் கொக்கிளாய் செல்லும் பாதையில் நீர் வழங்கலிற்கான குழாய்கள் பொருத்துவதற்காக நிலம் தோண்டப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதவான் சரவணராஜாவின் கட்டளைக்கு அமைய, ஜூலை 6ஆம் திகதி வியாழக்கிழமை அந்த அகழ்வு பணி ஆரம்பித்தது.

முன்னதாக இந்த விடயம் கொக்கிளாய் பொலிசார் ஊடாக முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து, வியாழன் (ஜூலை 6) முல்லைத்தீவு நீதவான் டி பிரதீபன் மேற்பார்வையில் சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் நிபுணர், சட்டத்தரணிகள், பொலிசார் மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் முன்னிலையில் மனித எச்சங்கள் இனம்காணப்பட்ட பகுதியில் ஆரம்பகட்ட அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

இதன்போதே இந்த 13 தனித எச்சங்களும் மீட்கப்பட்டன. "இவ்வாறு மீட்கப்பட்ட மனித எச்சங்களில் அதிகமானவை பெண் போராளிகளினதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது" என்று அகழ்வு பணி இடம்பெறும் போது அங்கிருந்த, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கனடா உதயனிடம் கூறினார்.



இதேநேரம் குறித்த அகழ்வுப் பணிகள் மாலை நிறுத்தப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதி இது தொடர்பான சகல திணைக்களங்களுடன் பேசி அதன் பின்னரே அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது எனவும் அவர் கூறுகிறார்.

குறித்த குழியில் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன என்று அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் தொல்லியல் திணைக்களமும் பங்குபற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொக்குத்தொடுவாயில் குறித்த அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்திற்கு சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், "இந்த அகழ்வு முறையான வகையில் செய்யப்படுவதாக தெரியவில்லை அவ்வப்போது கிடைப்பவை தடயப் பொருளாக எடுத்து வைக்கப்படுகிறது. ஒரு சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் இது செய்யப்படவில்லை. ஆகவே பல சான்றுகள் இல்லாமல் போகின்ற அபாயம்



இருக்கிறது" என்று ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

மேலும் அங்கு மிகவும் முக்கியமான ஒரு சாட்சியம் கிடைக்கின்றது என்ற அவர், "அது போர்க்காலத்திலே இடம்பெற்ற சம்பவமாக இருக்க வேண்டும். இராணுவ சீருடைப் போன்ற, தமிழீழ விதலைப் புலிகளுடைய சீருடைப் போன்றும் இங்கு தென்படுகின்றன. விசேடமாக பெண் போரா-ளிகளின் உடல்களாகத்தான் இருக்க வேண்டும். தற்போது ஆண் ஒருவரின் உடலும் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. ஆகவே ஐந்துக்கு மேற்பட்ட உடல்கள் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டிருப்பதை தோண்டி பார்க்கின்றபோது அது மிகவும் அவதா-னமாக அந்த விடயத்திலே நிபுணத்துவம் உள்ளவர்களுடன் இணைந்து செய்யப்பட வேண்டிய ஒரு விடயம். அப்படி செய்யாமல், இதனை அந்தந்த நேரத்திற்கு ஏற்ப செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல என்றார்".

இந்த அகழ்வுப் பணியின்போது மீட்கப்பட்ட சான்றுப் பொருட்கள் அனைத்தும் தடயவியல் நிபணர்களால் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது. அவை அங்கு பிரசன்னமாயிருந்த சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவாவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது எறு ரவிகரன் கூறுகிறார்.



இதேநேரம் இப்புதைகுழு அகழ்வு ஆரம்பமானது முதல் பல மனித எஞ்சங்கள் காணப்படுவதான தகவலை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் ஆரம்பத்தில் அனுமதிக்கப்படாதபோதும் பின்னர் அனுமதிக்கப்படனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித புதை குழியில் கண்டெடுக்கப்பட்ட உடல் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த எச்சங்களாக இருக்கலாம் என்ற தகவரின் அடிப்படையில் காணாமல் போனோரின் உறவுகள் மத்தியிலும் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

மனித புதை குழிகள் காணப்படும் இடங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும் போது பொதுவாக கனரக வாகனங்களும் இயந்திரங்களும் பயன்படுத்த கூடாது என்பது சர்வதேச வரையறையாகும். ஆனால், கொக்குத்தொடுவாய் பகுதியில் காணப்பட்ட மனித புதை குழி அகழ்வின் போது, அந்த நெறிமுறைகளிற்கு மாறாக, கனரக வாகனங்களும், இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டதை கானொளிகள் காட்டின.

கடந்த மாதம் நான்கு மனித உரிமை அமைப்புகள், இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித புதை குழிகள் தொடர்பில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், எதிர்காலத்தில் இடம்பெறும் அகழ்வில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் பரிந்துரைகளை வைத்திருந்தது. ஆனால் அவை எவையும் இங்கு பின்பற்றப்படவில்லை என்று உள்ளூர் மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.



# மேலும் ஒரு விகாரை–விசனத்தில் தமிழ் மக்கள்



**இ**லங்கையின் தமிழர் தாயகப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைப்பு என்கிற பெயரிலும், தொல்லியல் பூமி என்று அரசால் கூறப்படும் வரையறைகளின் கீழ் நிலங்கள் அபகரிக்கபடுவது அண்மை காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறதை காணக் கூடியதாக உள்ளது.

பன்னெடுங்காலமாக குருந்தூர்மலையிலுள்ள ஆதிசிவன் ஐயனார் கோவிலை அண்மித்த பகுதிகளை பௌத்த தொல்லியல் பிரதேசம் என்று கூறி நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த விகாரை ஒன்று அரசு மற்றும் இராணுவத்தின் ஆதரவுடன் கட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து யாழ்ப்பாணம் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. அதற்கு எதிராக தமிழ் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தாலும், பௌத்த பிக்குகள் தமது எண்ணங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அவ்வகையில் வவுனியா வடக்கு நெடுங்கேகேணி வெடிவைத்தகல்ப் பகுதியில் கச்சல்சமளங்குளம் தமிழர் பகுதியில் சப்புமல்கஸ்கட ரஜமகா விகாரை ஒன்று கட்டி முடிக்கப்பட்ட விகாரை சில நாட்களிற்கு முன்னர் திறக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டு வரை தமிழர்கள் வாழ்ந்து வந்த அந்த பகுதி போரின் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த சூழலில், சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு வலிந்த குடியேற்றம் இடம்பெயற்றது. இதையே காரணமாக வைத்து அந்த கிராமத்தை சிங்களமயமாக்கி தொல்லியல் அடையாளம் எனக் கூறப்பட்டு தமிழர்கள் அங்கு மீண்டும் செல்வதற்கு தடுக்கப்பட்டு வந்தனர். அவ்வாறான பகுதியிலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவுபெற்று திறப்புவிழா இடம்பெற்றுள்ளதோடு அநுராதபுரத்தில் இருந்தும் மெருமளவு பௌத்த துறவிகள் பாத யாத்திரையாக அங்கு வருகின்றனர்.



முல்லைத்தீவு மாவட்டம் குறுந்தூர்மலையில் உள்ள தொல்லியல் இடத்தில் நீதிமன்ற உத்தரவினையும் மீறி இராணுவத்தினரின் துணையுடன் விகாரை அமைத்த கல்கமுவ சந்தபோதி தேரரே தற்போது வெடிவைச்சகல்ப் பகுதியில் புதிய விகாரையினையும் அமைத்துள்ளார்.

இந்த விகாரை அமைக்கப்பட்ட பகுதி அருகே இருந்த இரு குளங்களை பாரிய அளவில் புனரமைத்து அப்பகுதியில் இரகசிய சிங்கள மயமாக்கலை மேற்கொண்ட சமயம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சரும் தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளருமான ப.சத்தியலிங்கம் அப்பகுதிக்குச் சென்று விடயத்தை வெளிக்கொணர்ந்த போது அநுராதபுரம் மாவட்ட உத்தியோகத்தர்கள் இரகசியமாக அந்த பகுதியில் பணியாற்றியமையும் கண்டுகொள்ளப்பட்டது.

இவ்வாறு சர்ச்சைக்குரிய இடத்திலேயே தற்போது 462 சிங்கள குடும்பங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அந்த சிங்கள குடும்பத்திலுள்ளவர்கள் வழிபாடு செய்வதற்காகவே இந்த விகாரை நிறுவப்பட்டுள்ளது என்றும் விளக்கமளிக்கப்படுகிறது.

# கலைஞர் கருணாநிதிக்கு கிழக்கு மாகாணத்தில் நூற்றாண்டு விழா நடத்த எதிர்ப்பு




தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு நூற்றாண்டுவிழா நடத்த கிழக்கு மாகாணம் பொருத்தமில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஊடக செயலாளருமான பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது இந்திய விஜயத்தின் போது அவருக்கு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அரச சார்பில் விழா எடுக்கப்படும் என்று தமிழக ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் உள்ளூர் ஊடகவியலாளர்களிடம் உரையாடும் போதே அரியநேத்திரன் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அத்தகைய விழாவை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்தை வெளியிட்டார்.

"தமிழ்நாட்டு முதல்வர் அமரர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டுவிழா தமிழ்நாடு முழுவதும் பல வகைகளில் தற்போது இடம்பெற்று வருகின்றன. அவர் பிறந்த நாட்டில் அவர் ஆட்சிசெய்த தமிழ்நாட்டில் கட்டாயம் அந்த மக்கள் அதை செய்வது நல்லது.

அவர் ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக இருந்தவர். 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு அனைத்து முறையும் வெற்றி பெற்றவர். தமிழ்நாடு முதலமைச்சர், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் என்று உயர் பொறுப்புகளை வகித்தவர். தமிழகத்தின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் கருணாநிதியின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழகத்தின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் அவரின் நூற்றாண்டு விழாவை மாநிலம் முழுவதும் ஜுன் 2023 திங்கள் முதல் ஜுன் 2024 திங்கள் வரை தமிழக அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது நல்ல விடயம்" என்று கருணாநிதிக்கு புகழ் மாலை சூட்டினார் அரியநேத்திரன்.

எனினும், இலங்கையில் கிழக்குமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் விரைவில் கிழக்கு மாகாணத்தில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா நடத்தப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஊடகங்களில் (05/07/2023) கருத்து வெளியிட்டிருந்தார்.

"உண்மையில் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் நடத்துவது பொருத்தமான ஒன்றாக தற்போது இல்லை. வடக்கு கிழக்கு மக்கள் கடந்த பல சகாப்தங்களாக இனப் படுகொலைகளை சந்தித்தபோதெல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுத்தாலும் ஆக்கபூர்வமாக அவர் எதையும் செய்யவில்லை என்ற ஒரு கருத்து வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.




2006 ஆம் ஆண்டு திருகோணமலை மாவிலையாற்றில் ஆரம்பித்த போர் 2009, மே,18 அன்று முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போது வடக்கு கிழக்கு தமிழர்கள் பல இலட்சம் மக்கள் மாண்டபோதும் முதலமைச்சர் கருணாநிதியால் போரை நிறுத்தவோ, தமிழ்மக்களை காப்பாற்றவோ இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் செய்யவில்லை என்ற ஒரு மனவேதனை தமிழ்மக்கள் மத்தியில் உண்டு" என்று கூறினார் அரியநேத்திரன்.

இவ்வாறான நிலையில் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றாலும் மக்கள் அதனை விரும்பி கலந்துகொள்ளும் நிலை ஏற்படாது என்பதே தனது தனிப்பட்ட கருத்தாகும் என்கிறார் தமிழரசு கட்சியின் ஊடகச் செயலர்.

"கலைஞர் கருணாநிதி அவர் போற்றுதற்குரியவர் பாராட்டுதற்க்குரியவர் என்பதெல்லாம் உண்மை ஆனால் அவர் தொடர்பாக விழா எடுக்ககூடிய இடமாக கிழக்கு மாகாணம் பொருத்தமானது இல்லை என்பதே எனது தாழ்மையான கருத்து எனக் குறிப்பிட்டள்ளார்".

இதேவேளை கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை இலங்கை அரச விழாவாக எவ்வாறு கொண்டாட முடியும் என்ற கேள்விகள் தமிழர் தாயகப் பகுதியின் பல இடங்களிலிருந்து எழுந்துள்ளன.

# "ஜனநாயகம்" வேண்டாம் என்று கூறிய 5 கட்சி தலைவர்கள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



"அரசியலிற்காக ஜனநாயகத்தையும் கைவிட தயாராகிவிட்டனர் எமது தமிழ் கட்சிகள்" என்ற வசனம் இப்போது வட மாகாணத்தில் பரவலாகப் பேசப்படுவதை காண முடிகிறது.

அதேவேளை கட்சி அல்லது அமைப்பின் பெயரை தக்கவைத்துக் கொண்டால் தேர்தல் அரசியலில் வெற்றி சுலபமாக தேடிவரும் என்பது பல சந்தர்ப்பங்களில் பொய்த்து போயுள்ளது. சின்னமும் பெயரும் மட்டுமே வாக்குகளை பெற்றுத்தராது என்பதை உணராத அரசியல் கட்சிகள் தோல்வியையே தழுவியுள்ளதை இந்திய இலங்கை தேர்தல் வரலாறுகள் உணர்த்தியுள்ளன.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்த புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகியவை இதர இரண்டு கட்சிகளுடன் இணைந்து புளட் அமைப்பைச் சேர்ந்த சிலரால் 2011 இல் பதிவு செய்யப்பட்ட ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி அதை மீண்டும் இயக்க செய்ய முடிவு செய்தனர்.

இவ்வாறு காணப்படும் கட்சியின் சுருக்கப்பெயராக DTNA என வருவதனால் அந்தப் பெயரை வுயேு என சட்டபூர்வமாக மாற்ற மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

ஆங்கிலத்தில் வுயேு என்பதை போன்று இந்த ஐந்து கட்சி கூட்டணி அதை dTNA என்று தமிழ் மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தியது. தமிழ் மக்கள் ரி என் ஏ என்பதை மனதில் வைத்து இவர்களை ஆதரிக்க கூடும் என்பதனாலேயே இப்படியான ஒரு முன்னெடுப்பு செய்யப்பட்டது என்று தமிழ் அரசியல் விடயங்களை கூர்ந்து அவதானித்து வருபவர்கள் கூறுகின்றனர். அந்த முன்னெடுப்பு வெற்றி பெறுமாயின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெயர் தமது வசம் வரும் என்று அவர்கள் எதிர்பார்த்தது பொய்த்து போயுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆர். ராகவனை செயலாளராக்கொண்டு பதிவு செய்யப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரில் உள்ள ஜனநாயகத்தை நீக்கி தமிழ்த் தேசியக் கூட்டணி என மட்டும் செயல்படவும் அதனை ஆங்கிலத்தில் வு.ேயு என உச்சரிக்கவும் ஐவர் அணி அல்லது "பாண்டவர்கள் அணி" என்று மக்களால் விமர்சிக்கப்படும் அணி சார்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு எழுத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்தை 2023 மே மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதே பெயரில் வேறு கட்சி/அமைப்பு நீண்ட காலமாக இயங்குவதனால் இந்த சொல்லாடல் இடம்பெறும் வகையிலான பெயரிற்கு அனுமதிக்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்து குறித்த கட்சிக்கு தற்போது எழுத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தற்போது 5 கட்சிகள் கூட்டாக இயங்குவதோடு 5 கட்சிகளின் தலைவர்களும் இணைத் தலைவர்களாக இயங்கும் நிலையில் ரி.என்.ஏ ஆரம்பிக்கும்போது இருந்த 5 கட்சிகளில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இரு கட்சிகளும் இந்த கூட்டணியில் இருப்பதனால் அந்தப் பெயர் தமக்கே சொந்தம் என கூறிவந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது.

இதேநேரம் தமிழ்த் மேசியக் கூட்டமைப்பு என அனைவரும் இணங்கி தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் செயல்படவே ஒப்புதல் வழங்கியதனால் அந்தக் கட்சியின் சின்னத்துற்கே இப்பெயரை பயன்படுத்த முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு பதிலளித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறி விட்டதாக ரெலோவும், புளட்டும் அறிவித்து தம்முடன் ஈ.பி.ஆர்எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டு தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அந்த ஐவர் அணி வாதிட்டது.

இதற்கமையே இக்கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறு அறிவித்துள்ளமை தொடர்பில் இக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும் புளட. அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, "தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த முடிவிற்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தினை நாடுவோம்" என்றார்.

## வீணாவின் கவிக்கணை

கண் கலங்கி நிற்கையில்
துடைக்கும் விரல்கள் வேண்டும்,
மடிசாய்த்து, தலைகோதி,
நான் இருக்கிறேன் என்று
கூறும் வார்த்தை வேண்டும்,
பசி தூக்கம் இல்லாத
போதும் கைகோர்த்து
நிற்கும் நிறைவு வேண்டும்,
நான் உதிர்கின்ற மலரான போதும்
என்னை மார்போடு கட்டி,
உச்சி முகர்ந்து வழி
அனுப்பும் உறவு வேண்டும்



# ஐஸ்லாந்தின் நிலவதிர்வால் எரிமலை வெடிக்குமா?

- குரு அரவிந்தன்

அத்திலாண்டிக் சமுத்திரத்தில், வடதுருவ எல்லையில் இந்தத்தீவான ஐஸ்லாந்து இருக்கின்றது. திமிங்கிலங்களை அருகே சென்று பார்க்கக்கூடிய இத்தீவில், சாமத்திலும் சூரியனைப் பார்க்க முடியும். சென்ற கிழமை 24 மணி நேரத்தில் இங்கு ஏற்பட்ட 2200 நிலவதிர்வுகள் காரணமாக மக்கள் பயந்து போய் இருக்கிறார்கள். எந்த நேரமும் எரிமலை வெடிக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்தச் சிறிய தீவில் சுமார் 30 மேற்பட்ட எரிமலைகள் இருக்கின்றன. பூமிக்கடியில் உள்ள தட்டுக்கள் முட்டிக் கொள்வதால், இந்த நிலநடுக்கம் ஏற்படுகின்றது. இங்கே உள்ள எரிமலை ஒன்று 2010 ஆம் ஆண்டு வெடித்த போது விமானப் போக்கு வரத்தே அப்பகுதியில் ஒருவாரகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. புகையும், சாம்பலும் பல மைல் தூரங்களுக்குக் காற்றோடு பரவி மாசடைய வைத்திருந்தன.

ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்க்குவிக் பகுதியிலேயே இந்த நில அதிர்வுகள் இப்போது பதிவாகி இருக்கின்றன. அதன் காரணமாக இப்பொழுதும் அங்குள்ள மக்கள் பயப்படுகின்றார்கள். பொருளாதார வசதிகளுக்காகச் சுற்றுலாப் பயணிகளையே அதிகம் நம்பியிருக்கிறார்கள். பொருட்களை இறக்குமதி செய்வதால் பொருட்களின் விலை இங்கு சற்று அதிகமானது. குற்றங்களே நடக்காத நாடு என்பதால் வீதிகளில் பொலிசாரைக் காணமுடியாது. நான் அங்கு நின்ற நாட்களில் ஒரே ஒரு பொலிஸ்காரரைக் கோப்பிக் கடையில் சந்தித்து உரையாட முடிந்தது. ஆங்கிலமும் பேசும் இங்குள்ள மக்கள் மிகவும் அன்பாகப் பழகக்கூடியவர்கள். வீடுகள் கூட்டமாக இல்லாமல், தனித்தனியாகவே அங்குமிங்குமாக இருக்கின்றன. மலைச்சரிவில் உள்ள சில வீடுகளின் கூரைகளைப் புற்கள் வளர்ந்து மூடியிருக்கின்றன. பபின் என்று சொல்லப்படுகின்ற அழகிய பறவைகளை இங்கு காணமுடிந்தது. செம்மறி ஆடுகளும், குதிரைகளும் நிறை இருக்கின்றன. சிக்காக்கோவில் "பான்பிட்ஸா" போல, இங்கே கிடைக்கும் "ஐஸ்லாண்டிக் கொட்டோக்" மிகவும் ருசியானது.







நோர்ஸ் இனத்தைச் சேர்ந்த வைக்கிங் காலப்பகுதியில்தான் இங்கு குடியேற்றங்கள் ஏற்பட்டன. சுமார் 3 லட்சம் மக்கள்தான் இங்கு வசிக்கிறார்கள். பெற்றோர் விரும்பியவாறு பிள்ளைகளுக்கு இங்கே பெயர் வைக்க முடியாது. தொடர்வண்டிகள் இங்கு இல்லை. இவர்களது முன்னோர்கள் ஒரு காலத்தில் பயங்கரமான கடற்கொள்ளையர்களாக இருந்தார்கள். கழுத்தைக் கோடாரியால் வெட்டுவது, மரத்திலே கட்டி உயிரோடு எரிப்பது போன்ற தண்டனைகளைக் கொடுத்தார்கள். இங்குள்ள காட்சியகத்தில் இது போன்ற தண்டனைக் காட்சிகளைப் பார்க்க முடிந்தது. இன்னுமொரு காட்சிப் பொருளாக 2 ஆம் உலகயுத்தத்தில் ஜெர்மனியால் சுட்டு விழுத்தப்பட்ட ரஸ்ய விமானத்தின் உடைந்த பாகங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் அமெரிக்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. தேடுதல் செய்தபோது அமெரிக்காவிடம் இருந்து ரஸ்யா அந்த விமானங்களை வாடகைக்கு எடுத்திருந்தது தெரியவந்தது.

நிலத்திற்கு அடியில் இருந்து திடீர் திடீரென ஒரு பனைமர உயரத்திற்கு நீர் ஊற்றுக்கள் சீறிப்பாய்கின்றன. நிறைய நீர்வீழ்ச்சிகளும் இருக்கின்றன. சுடுதண்ணிக் குளங்களும் இங்கு இருக்கின்றன. வீடுகளைச் சூடாக்க இந்த சூடான தண்ணீரையும், நிலவடிச் சூட்டுகற்றையும் பயன்படுத்துகின்றார்கள். தீவைச் சுற்றி வருவதற்கு நல்ல நிலையில் "றிங்ரோட்" என்ற நெடுஞ்சாலையை அமைத்திருக்கிறார்கள். வண்டியை வாடகைக்கு எடுத்து விடும்பிய இடங்களைச் சென்று பார்க்கக்கூடிய வசதிகள் உண்டு. பனிக்காலத்தில் சிறிய வீதிகளை மூடிவிடுகிறார்கள். இக்காலத்தில் "நொதேன் லைட்" என்று சொல்லப்படுகின்ற வானத்தைப் பல வர்ணங்களில் பார்க்க முடியும். நோர்வே நாட்டு மன்னனின் ஆட்சிக்காலத்தில் இந்தத் தீவுகளுக்குப் பெயர்சூட்டும் போது தவறு செய்து விட்டார்கள். மாலுமிகள் தகவல் தெரிவித்தபோது ஒரு தீவு பனியாலும், அருகே உள்ள இன்னும் ஒரு தீவு பச்சைப் பசேலென்று தாவரங்கள் சூழ்ந்திருப்பதாகவும் அறிவித்தபோது, நேரடியாகச் சென்று பார்க்காததால் அருகே இருந்த பனியால் சூழப்பட்ட கிறீன்லாந்திற்கு அந்தப் பெயரையும், தாவரங்கள் வளர்ந்திருந்த இந்தத் தீவுக்கு ஐஸ்லாந்து என்றும் வரலாற்றுத் தவறு காரணமாகப் பெயர் நிலைத்து விட்டது.

இதேபோன்ற எரிமலைகள் ஹவாய் தீவகளிலும் இருக்கின்றன. அமெரிக்காவின் ஒரு மாகாணமாகக் ஹவாய் தீவகள் இருப்பதால், தொழில் நுட்ப அறிவியல் சார்ந்த வசதிகள் அங்கே நிறைய இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் அருகே செல்வதைத் தடுப்பதற்காக வேலிகள் போட்டிருக்கிறார்கள். கெந்தகப்புகையைச் சுவாசித்தால், உடலுக்குக் கேடு தரும் என்பன போன்ற எச்சரிக்கை வாசகங்களையும் எரிமலைப் பகுதிகளில் அறிவிப்புப் பதாகை மூலம் தெரியப் படுத்தி இருக்கின்றார்கள். இதைவிட நில அதிர்வு, எரிமலை வெடிப்பு போன்றவற்றை முற்கூட்டியே கணித்து எச்சரிக்கும் அலாரங்களையும் பொருத்தி இருக்கின்றார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கு அவை எப்படி இயங்குகின்றன என்பது போன்ற செய்கை முறைகளையும் செய்து காட்டுகின்றார்கள். இப்படியான வசதிகளால் சமீபகாலங்களில் ஹவாயில் உடமைகள் அழிக்கப்பட்டாலும், உயிர்ச் சேதம் குறைந்திருப்பதை அறிய முடிகின்றது. இந்த வசதிகள் ஐஸ்லாந்தில் இருக்கவில்லை.





*(13 பக்கத் தொடர்ச்சி)*

## தமிழ் மக்கள் மீது பௌத்த மேலாதிக்கம் பிரகடனப்படுத்தியுள்ள போர்!

• தமிழ்த் தேசியக் கூட்டமைப்பம் சரி தமிழர்கள் சார்பாக உள்ள அரசியல் கட்சிகளும் சரி இதுவரைக்கும் எத்தனைமுறை இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமருடன் தமிழர் விவகாரம்குறித்து கலந்துரையாடியுள்ளார்கள். தமிழ்த் தலைவர்கள் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதுடன் சரி. அதற்கு மேல் எதுவும் இல்லை செய்யவும் மாட்டார்கள் என்ற தமிழ் மக்களின் கோபக் கனல் வார்த்தைகளுக்கு தமிழ்த் தலைமைகள் கூறப் போகும் பதில் என்ன?

• இதற்கும் அப்பால் தமிழ் மக்களின் இருப்புக்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ள இவ் வேளையில் வருந்தத்தக்க விடயம் என்னவெனில் தமிழர் விவகாரத்தில் தமிழ்த் தலைமைகள் கூட்டாகவோ அல்லது பொது வேலைத் திடத்தினை முன் வைத்தோ செயலில் இறங்கத் தயாராக இல்லை என்பதுதான்.

• அப்படியானால் தமிழ்த் தலைமைகள் யாருக்காக அரசியல் நடத்துகின்றனர் என்றகேள்விக்கு தமிழ்த் தலைமைகள் கூறப் போகும் பதில் என்ன?

• மொத்தத்தில் தமிழ் மக்கள் மீது பேரினவாதச் சக்திகள் பிரகடனப்படுத்தியுள்ள பௌத்த மேலாதிக்கம் மற்றும் காணிக் கொள்ளை போரில் இருந்து மக்களையும் மண்ணையும் காப்பாற்றப் போவது யார்?

சிங்கள இராஜதந்திரம் பொருளாதாரத்தில் தோற்றது என்னமோ உண்மைதான். ஆனால் தமிழர் விவகாரத்தில் தோல்வியை நோக்கிச் செல்வதாகத் தெரியவில்லை. நாட்டைக் கொண்டு நடத்த பணம் இல்லையென தென்னிலங்கைத் தலைவர்கள் வெளி நாடுகளிடம் கையேந்தி நிற்கின்றன. ஆனால் மறுபறம் தமிழர் தாயகத்தில் பௌத்த தூபிகள் அமைக்கவும் தமிழர் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை அமைக்கவும் நிதி தாராளமாகச் செலவிடப்படுகின்றன.

சிங்கள இராஜதந்திரம் மீண்டும் ஒரு வெற்றியை ஈட்ட சிதறிக் கிடக்கும் தமிழ்த் தலைமைகளே வழி சமைப்பவர்களாக இருப்பர் என்பது மட்டும் உண்மையாகும்.

தமிழ் மக்களை வெற்றிப் பாதை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பினை தமிழ்த் தலைமைகள் கொண்டுள்ளன என்பதை தமிழ் மக்களின் சார்பில் நினைவூட்ட விரும்புகின்றோம்.

தமிழர் நலன் நோக்கி தமிழ்த் தலைமைகள் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஓரணியில் திரள வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை தமிழத் தலைமைகள் உணர்ந்தாக வேண்டும். இல்லையேல் உங்களுக்கிடையிலான "குடும்பி பிடி அரசியல் சண்டைக்குள்" நீங்கள் அரசியல் நடத்தவதற்கும் மக்களும் மண்ணும் இருக்காது. சிங்கள பௌத்தத்திற்குள் கரைந்து போன நிலையிலான மண்ணும் மக்களுமே மிஞ்சுவர்.

Email : vathevaraj@gmail.com
5th July 2023

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
றொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரம்மோத்ஸவ விஞ்ஞாபனம்
## 16.07.2023 ஞாயிறு முதல் 30.07.2023 ஞாயிறு வரை

**14.07.2023 வெள்ளிக்கிழமை - சமயதீட்சை**
காலை 7:35 மணி முதல் அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.
**14.07.2023 வெள்ளிக்கிழமை - மாலை**
விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.
**15.07.2021 சனிக்கிழமை**
மாலை கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம் என்பன நடைபெறும்.

**16.07.2023 ஞாயிற்றுக்கிழமை - கொடியேற்றம்**
காலை 7:00 மணி முதல் அங்குரார்ப்பண பூஜைகள் நடைபெற்று
காலை 9:30 மணிக்கு வசந்தமண்டபபூஜையும்,
**11:00மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும்.**

**காலை**

| | |
|---|---|
| 7:00 மணிமுதல் | காலைப்பூஜை. |
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, ஸ்நபனாபிஷேகம் |
| 9:30 மணிக்கு | விசேடபூஜை |
| 10:00 மணிக்கு | யாகபூஜை, ஸ்தம்பபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டபபூஜை, சுவாமி வீதிவலம் வருதல் |
| 12:30 மணிக்கு | விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல். |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 5:30 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 6:00 மணிக்கு | யாகபூஜை, ஸ்தம்பபூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம் வருதல் |
| 9:45 மணிக்கு | விபூதி பிரசாதம் வழங்கல், அர்த்த ஜாமப் பூஜை |


கொடியேற்றம்


ஓங்கார வடிவக் காட்சி


மயூரகணபதி வடிவம்


சூரியப் பிரபைக் காட்சி


வித்யாகணபதி வடிவம்


நர்த்தன கணபதி வடிவம்

**16.07.2023 ஞாயிறு – 1ம் நாள்**
**ஓங்கார கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**17.07.2023 திங்கள் – 2ம் நாள்**
**மயூர கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**18.07.2023 செவ்வாய் – 3ம் நாள்**
**சூரியப்பிரபை வடிவக் காட்சி**
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**19.07.2023 புதன் – 4ம் நாள்**
**வித்யா கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் வீணை ஆராதனை

**20.07.2023 வியாழன் – 5ம் நாள்**
**அனந்தசயன வடிவக் காட்சி**
அந்தணர்களின் வேதபாராயணம்

**21.07.2023 வெள்ளி – 6ம் நாள்**
**சிவலிங்கபூஜை வடிவக் காட்சி**
கைலாச வாகனத்தில் வெளி வீதியுலா

**22.07.2023 சனி – 7ம் நாள்**
**நர்த்தன கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**23.07.2023 ஞாயிறு – 8ம் நாள்**
**கப்பல் திருவிழா**
கப்பல் வடிவ வாகனத்தில் வெளி வீதியுலா

**24.07.2023 திங்கள் – 9ம் நாள்**
**சங்கீத கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**25.07.2023 செவ்வாய் – 10ம் நாள்**
**மஞ்சத் திருவிழா**
அழகிய மஞ்சத்தில் வெளி வீதியுலா

**26.07.2023 புதன் – 11ம் நாள்**
**நம்பியாண்டார் நம்பி திருமுறை உற்சவம்**
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**27.07.2023 வியாழன் – 12ம் நாள்**
**மாம்பழத் திருவிழா**
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்

**28.07.2021 வெள்ளி – 13ம் நாள்**
**சப்பறத் திருவிழா**
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு வெளி வீதியுலா

**29.07.2023 சனி – 14ம் நாள்**
**தேர்த் திருவிழா** காலை: ரதாரோகணம்.
மதியம்: ரத அவரோகணம் (பச்சை சாத்துதல்)

**30.07.2023 ஞாயிறு – 15ம் நாள்**
**தீர்த்தத் திருவிழா**
காலை: தீர்த்தோற்சவம், யாககும்ப அபிஷேகம்
மாலை: திருவூஞ்சல், துவஜ அவரோகணம்,

**31.07.2023 திங்கள்**
**பூங்காவனம்**
சங்கீத இசை நிகழ்ச்சி

**01.08.2023 செவ்வாய்**
**வைரவர் மடை**
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை


கைலாச வாகனம்


அனந்தசயனக் காட்சி


மஞ்சத் திருவிழா


சங்கீத கணபதி வடிவம்


சப்பறத் திருவிழா


தேர்த் திருவிழா

திருவிழாக் காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் இம் மகோற்சவப் பெருவிழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா**
21.07.2023 வெள்ளிக்கிழமை

**ஆடி அமாவாசை விரதம்**
(பிதிர்தர்ப்பணம்)
15.08.2023 செவ்வாய்க்கிழமை

**வரலட்சுமி விரதம்**
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
25.08.2023 வெள்ளிக்கிழமை


நம்பியாண்டார் நம்பி உற்சவம்


கப்பல் திருவிழா

## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்


தீர்த்தத் திருவிழா


மாம்பழத் திருவிழா

1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# Sri Lanka Rejects Core Recommendations of UN Human Rights Council

- Siva Prameswaran



War-affected Tamils are deeply disappointed as Sri Lanka refuses to accept recommendations on accountability

Sri Lanka has rejected key recommendations made by the UN member states at the Universal Periodic Review (UPR) of the island nation placed before the 53rd session of the UN Human Rights Council (UNHRC).

The recommendations included credible transnational justice and reconciliation, accountability, implementing the Council's recommendations, and ending the culture of impunity. The reply of the Sri Lankan government is expected to be discussed on the 10th of July at the UNHRC. The UPR on Sri Lanka was led by the Troika of Algeria, the United Kingdom, and Qatar.

Sri Lanka has acknowledged the UPR as a helpful voluntary peer-review process that fosters the sharing of good practices by UN member states in the implementation of human rights commitments and obligations and also facilitates a cooperative approach for countries to domestically fulfill human rights obligations that have been voluntarily undertaken.

While most recommendations are just formal in nature, important ones pertaining to human rights and accountability have been outrightly rejected by the Ranil Wickremesinghe-led government.

The recommendation from its close neighbour India does not speak about accountability for alleged war crimes. Even though, its recommendation to "continue to take measures to ensure that the fundamental f reedoms and human rights of all its citizens, in particular all Tamil-speaking citizens, are fully protected" has only been partially accepted.

Most Western nations have called for tougher actions on the Human Rights front. The recommendations put forward by Australia, Netherlands, Germany, Norway, New Zealand, and the United States of America calling for such tougher actions were outrightly rejected by the Sri Lankan government in its response to the UNHRC.

The United States of America has put forward what is apparently the strongest of all the recommendations. It calls for ending the culture of impunity.

"End impunity for human rights violations, abuses, and harassment, especially against members of ethnic and religious minority communities, by holding those responsible to account, including security forces and government officials, and implementing commitments under Human Rights Council resolutions".

Australia, Norway, Netherlands, and New Zealand have called for the full implementation under the UNHRC resolution 51/1 which calls upon the Government of Sri Lanka in addressing the underlying causes of the crisis, including impunity for human rights violations and economic crimes.

"The United Nations High Commissioner for Human Rights urges the new Government to embark on a national dialogue that would advance human rights and reconciliation and to carry out the deeper institutional and security sector reforms needed to prevent the recurrence of violations of the past".




Australia in its recommendation has called to "Fully implement a credible transitional justice and reconciliation mechanism consistent with Human Rights Council resolution 51/1 and renew commitments made under Council resolution 30/1".

Apart from promoting reconciliation, accountability, and human rights in Sri Lanka the Kingdom of Netherlands has not only recommended implementing UNHRC resolution 51/1 but also 30/1 and 46/1.

Germany wants to ensure the independent work of the Office of Missing Persons (OMP) and the Office for Reparations (OR).

"Implement fully the recommendations in Human Rights Council resolution 51/1 and take steps to implement an inclusive transitional justice process in the country" Norway said in its recommendation.



New Zealand in its recommendation called upon Sri Lanka to act in "accordance with resolution 51/1, constructively promote post-conflict reconciliation, domestic accountability, and human rights".

Sri Lanka in its reply to the oral observations of the Deputy High Commissioner of the UNHRC Nada Al Nashid in ensuring accountability and in particular the role of the OMP said, it has provided responses to 159 cases in the last two years "brought to its attention by the UN Working Group on Enforced Disappearances (WGEID)". But the government has not responded to thousands of cases reported to the OMP, which has not even found a single person who surrendered, handed over, or went missing.

"Any allegation of disappearance reported to the Police is duly investigated and information on such cases was provided in the National Report of Sri Lanka. The Government has taken measures to investigate all reported cases of alleged disappearances including those related to the last phase of the conflict," had been the government response.

Victims of those who have disappeared or gone missing after being handed over to the state security forces during and after the war have found no tangible investigations over their complaints and none have either been found or the families given a convincing answer.

Four Human Rights organisations recently released a report on mass graves in Sri Lanka and the state's complicity in hampering investigations into those. War-affected Tamils fear for the life and safety of their near and dear who have gone missing at the end of the war 14 years back.

The government has now announced the establishment of a Truth and Reconciliation Commission (TRC), instead of setting up a transitional justice mechanism with international participation which had been the longstanding demand of Tamil war victims.

Sri Lanka's longest ongoing protest led by women, mostly elderly mothers in search of their kith and kin is continuing beyond 2300 days.

Human Rights activists point out, the Sri Lankan government lacks the political will into investigating allegations of war crimes as the state security forces are the prime accused.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)



சமயதீட்சை மந்திர உபதேசம்
14.07.2023 வெள்ளிக்கிழமை
காலை 8:00 முதல் 11:00 மணிவரை

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் நடைபெறும் சமயதீட்சை இவ்வருடம் 14.07.2023 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8:00 மணிமுதல் 11:00 மணிவரை நடைபெறவுள்ள இவ்விழாவை கலாநிதி சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்த சிவாச்சாரியார் குருவாக இருந்து நடாத்தி வைக்கவுள்ளார். இதுவரைகாலமும் சமயதீட்சையைப் பெற்றிராத 7 வயதிற்கு மேற்பட்ட சைவசமய சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெரியோர்கள், முதியவர்கள் அனைவரும் சமயதீட்சை மந்திர உபதேசத்தைப்பெற்றுக் கொள்ளலாம். உற்சவகாலங்களில் ஆசாரசீலர்களாக விரதம் அனுஷ்டித்து மந்திரங்கள், திருமுறைகள், இறைநாமங்களை பாடிப் பணிந்து இறைவனின் அருட்கடாட்சம் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழுமாறு வேண்டுகின்றோம்.

facebook.com/vinaayagar

சிவப்பணியில் நிற்கும் "சிவாச்சார்ய குலபூஷணம்". "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு. ஆலயஸ்தாபகர். முதல்வர் - அறங்காவலர் சபை.

416-291-8500

சினிமா

# விரைவில் திரைக்கு வரவுள்ள Finder திரைப்படத்தின் முதல்பார்வை பதாகை வெளியானதும் அதனைப் பாராட்டிய தமிழ்த் திரையுலகின் இரு முக்கிய நடிகர்கள்

மக்கள் செல்வன் விஜய் சேதுபதி மற்றும் நடிகர், இயக்குநர் எஸ் ஜே சூர்யா ஆகியோரின் வாழ்த்துக்களோடு வெளியிட்டப்பட்டுள்ள **Finder** "ஃபைண்டர்" திரைப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக்!! ஐ தொடர்ச்சியாக பல திரையுலகப் பிரமுகர்கள் பாராட்டிய வண்ணம் உள்ளார்கள்.

பிரபல நடிகர் சார்லி நடிப்பில், "ஃபைண்டர்" படத்தின் பரபரப்பான முதல்பார்வை பதாகை (ஃபர்ஸ்ட் லுக்) வெளியானது!!

உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாகும் பரபரப்பான திரில்லர் திரைப்படம் "ஃபைண்டர்" **Finder** திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது!!

Arabi production அதிபர் கனடா வாழ் தொழிலதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் இயக்குனர் வினோத் ராஜேந்திரன் ஆகியோர் இணைந்து தயாரிக்க, நடிகர் சார்லி முதன்மை பாத்திரத்தில் நடிக்க, உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாகும் பரபரப்பான திரில்லர் திரைப்படமான "ஃபைண்டர்" படத்தின் (முதல்பார்வை பதாகை (ஃபர்ஸ்ட்லுக்) வெளியானது.

தமிழ் திரைத்துறையின் முன்னணி நட்சத்திரங்களான மக்கள் செல்வன் விஜய் சேதுபதி மற்றும் நடிகர், இயக்குநர் எஸ் ஜே சூர்யா ஆகியோர் சமூக வலைதளம் வழியே "ஃபைண்டர்" படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சிறைபின்னணியில் சார்லி நிற்க, ஒரு திரில்லர் திரைப்படத்திற்கான அத்தனை அம்சங்களும், நிறைந்ததாக அட்டகாசமாக உள்ளது ஃபர்ஸ்ட் லுக்.

அமெரிக்காவில், செய்யாத குற்றத்திற்காக நீண்ட காலம் சிறையில் இருப்பவர்களை கண்டுபிடித்து அவர்களை நிரபராதிகள் என நிரூபித்து அதற்கு அவர்களுக்கு அரசாங்கம் தரும் இழப்பீட்டு தொகையை பாதிக்கப்பட்டவருக்கு பெற்றுத்தரும் நிறுவனத்தை பற்றிய உண்மை கதையின் அடிப்படையில், சென்னை பின்னணியில் இப்படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.


இருக்கை நுனியில் ரசிகர்களை இருத்தி வைக்கும் பரபரப்பான திரில்லராக உருவாகும் இப்படத்தை,



இயக்குநர் வினோத் ராஜேந்திரன் இயக்குவதோடு, இப்படத்தில் முக்கியமான வேடத்திலும் நடித்துள்ளார். நடிகர் சார்லி கதையின் திருப்புமுனை பாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் செண்ட்ராயன், அபிலாஷ், கோபிநாத், சங்கர், நடிகை பிரானா ஆகியோர் இணைந்து நடித்துள்ளனர்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இப்படத்தின் படப்பிடிப்பு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இப்படத்தின் போஸ்ட் புரடக்சன் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீடு குறித்த மற்ற தகவல்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.




Finder திரைப் படத்தின் தொழில்நுட்ப குழு விபரம்:

------------------------------------------------

தயாரிப்பு நிறுவனம் - Arabi production & Viyan ventures
தயாரிப்பாளர்கள் - ரஜீஃப் சுப்பிரமணியம் & வினோத் ராஜேந்திரன்
இயக்கம் - வினோத் ராஜேந்திரன்
ஒளிப்பதிவு - பிரசாந்த் வெள்ளிங்கிரி
எடிட்டர் - தமிழ்குமரன்
கலை இயக்கம் - அஜய் சம்பந்தம்
இசை - சூர்ய பிரசாத்
மக்கள் தொடர்பு - சுல்தான் ராஜா









# கடந்தவையும் கடப்பவையும் (61)

பல்கலைக்குப் போகும்வரை பட்டபாட்டை - அந்தந்த
எல்லைகளில் நின்றபடி சொன்னதுண்டு - ஆனாலும்

சொல்லவில்லை இன்னும், கோட்டை அடிபாடும்
வல்லைவெளி தாண்டிக் கொட்டிய குண்டுகளும்

ஆம்,

உயர்தரப் பரீட்சைக்காய் மாணவர்கள் மிக
அலைக்கழிந்தும் சீரழிந்தும் படித்த காலம்

போர்நிறுத்தம் ஒன்று வந்தபோது - அங்கு
போர்தடுக்க வந்தவர்கள் அன்றுவரை சேகரித்த

பாவச்சுமைகளை பெரும் மூட்டைகளில் கட்டிக்கொண்டு
ஏறிச்செல்கின்றனர் கனரக வண்டிகளில் - இனி

வசந்த காலம் என்பதுபோல் மக்களும்
சுதந்திரமாய் சிறிது காலம் இருந்தபோது - மறுபடியும்

குழம்பிய பேச்சுவார்த்தையொன்று கோபத்தில் போய்முடிய
தொடங்கியது கோட்டை அடிபாடு - யாழ்ப்பாணத்தில்

நூறுநாள் தாண்டிய கடும் போர்
தாறுமாறாய் ஓடித்திரிந்தன போர் விமானங்கள்

இடிமுழக்கம் போல் பெரும் வெடிகள் - அங்கிருந்து
ஓடிவரும் மக்கள் ஒருபுறம் - அதிரவைக்கும்

ஆகாயக் குண்டுகள் மறுபறம் - தினம் தினம்
காயப்படுவோரும் கண்ணெதிரில் இறப்போரும் என

அவலங்கள் அதிகரிக்க பரீட்சைக்காய் படித்த - மக்கள்
துயர் சகிக்கா மாணவரும் துணிந்தனர்

இயன்றவரை தாமும்பங்களிக்க வேண்டுமென - மிக
பயந்த பெற்றோர் மறுபடியும் அழைத்து வந்தார் - திரும்ப

வரோம் என உறுதியாய் இருந்தவர்கள்
நிரந்தரமாகவே உயர்ந்த வேலிப் பாசறைக்குள் - புதிதாய்

புகுந்தவரோடு தாமும் இணைந்து கொண்டனர் - இக்காலமும்
உயர்ந்த வேலிப்பாசறைகள் வளர்ந்துவர ஏதுவாயின - ஆனாலும்

'பாசறைகளை அழிக்கிறோம்' எனும் பெயரில்- வீட்டு
வாசலில் நின்றோரையும் குறிவைத்துச் சாய்த்தன உலங்கு வானூர்திகள் - இன்றும்

புலம் பெயர்ந்த நாட்டிலும் எங்கேனும்
உலங்கு வானூர்திச் சத்தம் கேட்டாற் போதும்

இயல்பாகவே உடல் பதறும் அளவிற்கு - அன்றைய
இயந்திரத் துப்பாக்கிகளோடு ஏவுகணை பூட்டிய உலங்கு வானூர்திகள்

கடும் பயத்தை அனுதினமும் தந்தன
உடல் நடுங்க வைத்தன - அத்தோடு

கறுப்புப் புள்ளிபோல் வானில் தென்பட்டு - பின்
'கிறீச்' எனும் அலறல் ஒலியோடு

ஒலியினும் கூடிய வேகத்தில் வந்து
திகிலடைய வைக்கும் அந்த குண்டு விமானம் - அது

செங்குத்தாய் குத்திவந்து சிறகுகளில் காவிவந்த
குண்டுகளைக் கழற்றிவிட்டு மின்னல் வேகத்தில் மேலெழும் - இது

'சுப்ப சொனிக்' எனும் பெயர் கொண்ட
எப்பவும் பயம் தருமொரு சாகசக் குண்டுவிமானம்

குலை நடுக்கம் கொள்ள வைக்கும் குண்டுகட்காய்
பதுங்கு குழிகள் எத்தனைக்குள் புகுந்திருப்போம் புத்தகங்களோடும்

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு மனித புதை குழியில் மேலும் பல மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன

06.07.2023



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்தவாரம் விடுதலைபுலிகளின் சீருடையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற விதமாக கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் தொடர்பிலான மேலதிக அகழ்வு பணிகள் வியாழக்கிழமை (6) இடம் பெற்ற நிலையில் மேலும் பல எழும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.





முல்லைத்தீவு நீதவான் முன்னிலையில் இன்றைய தினம் ஆரம்பமான அகழ்வு பணியின் போது முன்னதாக அடையாளம் காணப்பட்ட எழும்புக்கூடுகளுக்கு அருகில் காணப்பட்ட பகுதிகள் தோண்டப்பட்ட நிலையில் மேலும் பல எழும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதே நேரம் பிளாஸ்ரிக் பொருள், வையர் உட்பட சில சான்று பொருட்களும் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

முதல் நாள் அகழ்வில் 13 எழும்பு கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் மேலதிக அகழ்வு பணிக்காக தற்காலிக அணைத்து பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

வருகின்ற வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் அனைத்து திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணி களுடன் இடம் பெற உள்ள கலந்துரையாடலின் பின்னர் புதைகுழி தொடர்பான மேலதிக அகழ்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

# மது போதையில் இருந்த இருவர் வட்டுக்கோட்டை மின்சார நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

வியாழக்கிழமை (06) மதுபோதையில், வட்டுக்கோட்டை மின்சார நிலையத்திற்கு வந்த இருவர் அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், பொன்னாலை பகுதியில் இருந்து மது போதையில் வந்த இருவர், தமது வீட்டிற்கு சிவப்பு மின்சார பட்டியல் வந்தது என்றும் அதன்பின்னர் மின் துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கூறினர். அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு உத்தியோகத்தர், குறித்த சிவப்பு மின்சார பட்டியலை உள்ளே காண்பிக்குமாறு கூறினார்.

அதனைத் தொடர்ந்து உள்ளே சென்ற இருவரும் அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டனர். இதன்போது அவ்விடத்திற்கு சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை வெளிறேற்ற முயன்றபோது அவர்மீது சரமாரியாக தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.





மலேசிய மடல்

# டான்ஸ்ரீ சுப்ரா–டத்தோஸ்ரீ சரவணன் தலைமையில் இலக்கியவாணி உசாராணியின் இரு நூல்கள் வெளியிடப்படுகின்றன



நக்கீரன்

**கோ**லாலம்பூற், ஜூலை 2:




தஞ்சோங் மாலிம் உப்சி கல்வியியல் பல்கலைக்கழக மேநாள் மாணவியும் கவிவாணியுமான உசாராணி சாமிநாதனின் இரு கவிதை நூல்கள் ஜூலை 02, ஞாயிறு பிற்பகல் 3:30 மணியளவில் தலைநகரத்து டான்ஸ்ரீ கே.ஆர். சோமா அரங்கில் வெளியீடு காண்கின்றன.

மனித வளத்துறை மேநாள் அமைச்சர்களான டான்ஸ்ரீ டாக்டர் ச. சுப்பிரமணி-யன், டத்தோஸ்ரீ மு. சரவணன் ஆகியோர் தலைமையேற்று சிறப்புரை ஆற்றியபின் வெளியீடு காணவிருக்கும் சந்தனத் தோணி, “நானாகிய நான்” நூல்களுக்கு மெல்லிய இலக்கிய பின்புலம் உண்டு.

தொடக்கத்தில் புதுக் கவிதையின்பால் நாட்டம் கொண்டிருந்த உசாராணி, தன் சிந்தனைக் குதிரையை கடிவாளமில்லாமல் ஓடவிட்ட காலத்தில் புனைந்த உரைவீச்சுப் படைப்புகளைத் தொகுத்து, “நானாகிய நான்” என்னும் பெயரில் புதுக்கவிதை நூலாக்கி இருக்கிறார்.

இதில் பெரும்பாலும் உசாராணியின் தொடக்கக்கால படைப்புகள் இடம்பெற்றுள்ளன் தனிமனித உணர்வை வெளிப்படுத்தும் இப்புதுக் கவிதைகள்வழி, தன் வாழ்க்கைச் சூழல் கற்றுக் கொடுத்தவற்றைக் கொஞ்சம் வன்மையாகவும் திண்மையாகவும் கடத்தியுள்ளதாக சா. உசாராணி குறிப்பிடுகிறார்.

டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி - இலக்கிய அறவாரியம் நடத்தும் இலக்கியப் போட்டியில் கலந்து கொண்டு புதுக்கவிதைப் பிரிவில் பரிசும் வென்றிருக்கிறார், இவர்.

கவிதை என்றால் கவிதைதான் அதென்ன புதுக் கவிதை?

எவ்வித ஒழுங்குமுறையும் இன்றி, கரை காணாமல் ஓடும் காட்டாற்று வெள்ளம்போன்றது புதுக் கவிதைத் இத்தகைய புதுப்பாங்கை தமிழ் மொழிக்கு அறிமுகம் செய்தவன், மாகவி பாரதி எனத் தெரிகிறது் இது தமிழ் மொழிக்கு நன்மைபயக்க வல்லதா அல்லது தீதானதா என்பதை நாளைய உலகம் வகைப்படுத்தும்.





மரபுக் கவிதை என்பது, மண்ணும் மனிதனும் பயனுறும் வகையில் இருமருங்கிற்கும் அடங்கி, தண்மையாகப் பயணிக்கும் ஆற்றைப் போன்றது.

புதுக்கவிதையில் பெருவிருப்பு கொண்டிருந்த உசாராணி, முனைவர் மனோண்மணி அண்ணாமலை போன்ற மரபுக்கவிவாணியர் மற்றும் அவர்தம் வட்டத்தைச் சேர்ந்தவர்களின் தாக்கத்தால், உரைவீச்சு தாக்கத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மரபுக் கவிதைப் பூங்காவில் உலா வரத் தொடங்கினார்.

யாப்பிலக்கணத்தில் தேர்ந்தபின், சூட்டோடு சூடாக இயற்றிய கவிதைகளை, “சந்தனத் தோணி” என்னும் பெயரில் தொகுத்து இன்னொரு நூலாக்கி இருக்கிறார். இத்தோணியில் பயணிக்கும் பாத்திரங்களாக இறை சிந்தனை, இயற்கை, மொழி, இலக்கியம், கலை, பெண்மை, தாய்மை, நாடு, இனம், குமுகாயம் உள்ளிட்ட கருப்பொருட்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விரு நூல் வெளியீட்டு விழாவில், சுப்பிரமணியன், சரவணன் இருவரும் ஆற்ற இருக்கும் உரைப்பொழிவு சிந்தைக்கு விருந்தாக அமையும் என்பது திண்ணம் இவ்விழாவில், தமிழ் ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய-வாதிகள் என அனைவரும் திரளாகக் கலந்து சிறப்பித்து ஆதரவு வழங்க வேண்டுமென்பது உசாராணியின் எண்ணம்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# 600 ஆண்டுகளுக்கு முன்பே பெண் தெய்வ வழிபாட்டை உணர்த்தும் மகிஷாசுர மர்த்தினி நடுகல்: செய்யூர் அடுத்த அகரம் கிராமத்தில் கண்டெடுப்பு

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், அகரம் கிராமத்தில், தர்மபுரி அரசு கலைக் கல்லூரி பேராசிரியரும் தொன்மம் வரலாற்று ஆய்வு அறக்கட்டளையின் தலைவரும், தொல்லியல் ஆய்வாளருமான சி.சந்திரசேகர் மற்றும் இந்து மேல்நிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் ரமேஷ் ஆகியோர் தொடர்ச்சியான கள ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு நடந்த ஆய்வு ஒன்றில் 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிஷாசுர மர்த்தினி நடுகல்லை கண்டுபிடித்துள்ளனர்.இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் சந்திரசேகர் கூறியதாவது:

தமிழகத்தில் அதிக அளவில் கிடைத்துள்ள பலகைகல் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் உருவம் துர்க்கை அம்மன் ஆகும். இது சங்க காலத்தில் இருந்து, பல்லவர் காலம் தொடங்கி, சோழர் காலம் முதல் விஜயநகரம் மன்னர்கள் காலம் வரை காணப்படுகின்றன. பெண் தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் கொற்றவை, மகிஷாசுர மர்த்தினி, துர்கை அம்மன், நிரம்பசுதனி என பல்வேறு பெயர்களில் காளி வழிபடப்படுகிறாள்.இந்நிலையில் அகரம் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ள பலகை போன்ற பாறையில் காணப்படும் காளியானது, மகிஷாசுர மர்த்தினி வகையைச் சார்ந்ததாகும்.

கி.பி.13 அல்லது 14ம் நூற்றாண்டு விஜயநகர் காலத்தை சேர்ந்ததாக கருதுகிறேன். சுமார் 8 அடி உயரமுள்ள இந்த நடுக்கல் எட்டு கரங்களுடன், மகிஷாசுரன் எனப்படும் எருமை தலை சூரனின் தலையின் மீது நின்றவாறு காளி காட்சியளிக்கிறாள். தலையில் கொண்டையுடன் நீண்ட சடை முடியோடும், மார்பு கட்சையோடு இக்காளி காணப்படுகிறாள். பொதுவாக, மகிஷாசுர மர்த்தினி சிறிய இடை அமைப்போடு நிமிர்ந்த மார்போடும் மார்பில் பாம்பு அல்லது துணியை கட்சையை கட்டியவாறும் அமைக்கப்பட்டிருப்பது இதனுடைய சிறப்பாகும்.



இதன், இடதுபுறம் உள்ள நான்கு கரங்களில் முதன்மை கரமானது இடுப்பில் கையை வைத்து ஊன்றியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கரத்தில் சங்கும், மூன்றாவது கரத்தில் வில் அம்பும், நான்காவது கரத்தில் கேடயம் உள்ளவாறு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.காளியின் வலதுபுறம் உள்ள கரங்களில், முதன்மை கரத்தில் எச்சரிக்கை செய்யும் விதமாகமணி வைத்துள்ளது போலவும், இரண்டாவது கையில் நாக சர்ப்பத்தை சாட்டையாகவும், மூன்றாவது கையில் மிகப்பெரிய வாள் ஒன்றையும், நான்காவது கரத்தில் மான் கொம்பை ஆயுதமாக தரித்தபடியும் அமைக்கப்பட்டுள்ளது. கழுத்தில் ஒரே ஒரு நகைக் காட்டப்பட்டுள்ளது.இடுப்பில் முழங்காலுக்கு மேல் ஆண்கள் அணியும் அரைக்கால் சட்டை போன்று அமைப்போடும், இடுப்பில் பாம்பினால் கட்டப்பட்ட கயிற்றோடும் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். கால்களில் வீரத்தண்டைகள் காணப்படுகின்றன. எருமையின் இருகொம்புகள் இருபுறமும் வளைந்தும், அதன் காதுகள் அதற்கு கீழ்நோக்கியும் எருமை தலையின் மேல் இரு கால்களும் ஊன்றி நின்றுவாறு சிலை வடிக்கப்பட்டுள்ளது.

இந்த சிற்பம் மகிஷாசுரமர்தினிதான் என்பதை உணர்த்தும் வகையில் இடதுபுறம் காக்கையும், வலதுபுறம் நீண்ட கொம்புகள் உடைய மானும் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.அதுமட்டுமல்லாமல் மகி ஷாசுர மர்த்தினி போர் புரியும்போது பூதகணங்களும், பிற பெண் தெய் வங்களும் அவருக்கு உதவுவது போன்று, அவரை வழிபட்டுக் கொண்டே இந்நிகழ்ச்சியில் ஈடுபடுவது போன்று, இதன் இருபுறமும் இரண்டு பெண் உருவங்கள் காணப்படுகின்றன.பொதுவாக, பெண் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக இந்த பலகை கல் வழிபாடு காணப்படுகின்றது. செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்லவர் கால தொடங்கி இன்று வரை ஏராளமான நடுகற்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், மான் அலங்காரத்தோடு காணப்படுவது பலகை கல்லில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மைசூர் என்பது மகிஷாசுரனை வதம் செய்த இடமாக கருதக்கூடியது.கர்நாடகத்தில் இருக்கக்கூடிய ஹாலு மத்த புராணம் என்ற புராணத்தில், இக்காளி எவ்வாறு மகிஷாசுரனை வதம் செய்தாள் என்பதை பற்றி விவரம் காணப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இதுகுறித்து, ஆசிரியர் ரமேஷ் கூறும்போது, செய்யூர் சுற்றுவட்டார பகுதியில் தொடர்ச்சியாக கள ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். ஏனெனில், இப்பகுதியுடைய உள்ளூர் வரலாறும், சமய வரலாறும் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதால், ஏராளமான இடங்களில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு கள ஆய்வினை தொடர்ந்து நடத்தும் முடிவு செய்துள்ளோம் என்றார்.

செய்யூர் பகுதிகளில் வரலாற்று ஆய்வாளர்கள் மூலம் கண்டறியப்படும் இத்தகைய சிற்பங்களை, வருவாய்த் துறை மூலம் பாதுகாத்து பராமரிக்க வேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேபோல் செய்யூர் அருகே இந்தளூர் கிராமத்தில் விஜயநகர் பேரரசு காலத்தில் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த நவகண்டம் நடுகல் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகைய நடுகல்கள் தொடர்ந்து இப்பகுதியில் கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இபிஎஸ்ஸுக்கு எதிரான ரூ.4,800 கோடி மதிப்பிலான முறைகேடு: புதிதாக விசாரிக்க ஊழல் தடுப்பு ஆணையர் ஒப்புதல் என தமிழக அரசு தகவல்

முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு எதிரான ரூ. 4,800 கோடி மதிப்பிலான முறைகேடு தொடர்பாக புதிதாக விசாரணை நடத்த ஊழல் தடுப்பு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளதாக தமிழக அரசு தரப்பில் உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கடந்த2018ம் ஆண்டு தாக்கல் செய்திருந்த மனுவில், தமிழகத்தில் முதல்வராக பதவி வகித்த பழனிசாமியின் கட்டுப்பாட்டில் இருந்த நெடுஞ் சாலைத் துறையில் ரூ.4,800 கோடி மதிப்பிலான ஒப்பந்தப் பணிகளில் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளன குறிப்பாக பழனிசாமியின் மகன் மிதுன்குமாரின் நெருங்கிய உறவினரான சந்திரகாந்த் ராமலிங்கத்துக்கும், சம்பந்தி பி.சுப்பிரமணியத்துக்கும் இந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.200 கோடியில் முடிய வேண்டிய திட்டத்துக்கு ரூ.1,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோல பல்வேறு திட்டப் பணிகளில் முறைகேடு நடந்துள்ளது. இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால், சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டும், என கோரியிருந்தார்.இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பழனிசாமிக்கு எதிரான இந்த குற்றச்சாட்டு குறித்து சிபிஐவிசாரிக்க கடந்த 2018ம் ஆண்டுஉத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.அதன்படி இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஆர்.எஸ்.பாரதிதரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, இந்தவழக்கு தொடர்ந்தபோது இருந்த நிலை தற்போது இல்லை. தமிழகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இந்த வழக்கை வாபஸ் பெறுகிறோம், என்றார்.அப்போது மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு எதிரான இந்த வழக்கில் விதிக்கப்பட்டிருந்த தடையை உச்ச நீதிமன்றம் நீக்கிவிட்டது. எனவே அவருக்கு எதிராகபுதிதாக விசாரணை நடத்த ஊழல் தடுப்பு ஆணையர் ஒப்புதல் அளித்துள்ளார் என்றார்.

அதற்கு பழனிசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம். முகமது ரியாஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இதுதொடர்பாக ஏற்கெனவே லஞ்ச ஒழிப்பு போலீஸார் ஆரம்ப கட்ட விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கை மீண்டும் விசாரிக்கும்போது அந்த விசாரணை அறிக்கையை பரிசீலிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. எனவே இந்த சூழலில் இந்த வழக்கை வாபஸ் பெற அனுமதிக்கக்கூடாது, என்றார். அதையடுத்து நீதிபதி, இந்தவழக்கு விசாரணையை வரும்ஜூலை 13ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# சுகாதார கட்டமைப்பை மேம்படுத்த தமிழகத்துக்கு ரூ.10 ஆயிரம் கோடி நிதி மத்திய இணை அமைச்சர் பாரதி பிரவீன் பவார் தகவல்

தமிழகத்தில் சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்த கடந்த 2 ஆண்டுகளில் ரூ.10 ஆயிரம் கோடி நிதியை மத்திய அரசு வழங்கி உள்ளது என மத்திய இணை அமைச்சர் பாரதி பிரவீன் பவார் தெரிவித்துள்ளார்.சென்னை தியாகராய நகரில் உள்ள பாஜக மாநில தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மத்திய அரசின் திட்டங்களில் மிக முக்கியமான திட்டமாக இருப்பது பிரதமரின் மருத்துவ காப்பீடு திட்டம் (பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா). இந்த திட்டத்தில் ரூ.5 லட்சம் வரை நோயாளிகள் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். தமிழகத்தைப் பொறுத்தவரை இத்திட்டத்தில் 1.43 கோடி குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

கடந்த 2022ம் ஆண்டு 4 லட்சம் நோயாளிகள் பிரதமர் காப்பீடு திட்டத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களுக்கு ரூ.627 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் தற்போது வரை 1 லட்சத்து 72 ஆயிரம் நோயாளிகள் பிரதமர் காப்பீடு திட்டத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களுக்கு ரூ.238 கோடியை மத்திய அரசு வழங்கி உள்ளது. மருத்துவக் காப்பீடு திட்டத்தில் மத்திய அரசின் பங்கு 60 சதவீதமும், மாநில அரசின்பங்கு 40 சதவீதமும் உள்ளது.தமிழகத்தில் முதல்வர் மருத்துவ காப்பீடு திட்டமும், பிரதமரின் மருத்துவ காப்பீடு திட்டமும் இணைந்து செயல்படுகிறது. இந்த மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் செயல்படும் மருத்துமனைகளில், நோயாளிகளுக்கு இத்திட்டத்தில் சிகிச்சை அளிக்கவில்லையென்றால், அம்மருத்துவமனைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்துக்கு 11 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான நிதியாக மத்திய அரசு ரூ.2,145 கோடி ஒதுக்கி உள்ளது.மத்திய அரசு தமிழக சுகாதார கட்டமைப்பை மேம்படுத்த கடந்த 2 ஆண்டுகளில் குறைந்தபட்சமாக சுமார் ரூ.10 ஆயிரம் கோடி நிதி அளித்துள்ளது. தமிழகத்தில் மதுரையில் எய்ம்ஸ் கல்லூரி அமைப்பதற்கான பணிகள் கரோனா பேரிடர் காரணமாக தொய்வடைந்தன. ஆனாலும், கட்டுமானத்துக்கான முந்தைய பணிகள் 90 சதவீதம் முடிவடைந்துள்ளன.

மதுரை எய்ம்ஸ் கட்டுமானத்துக்காக ரூ.1,264 கோடி முதலில் நிதிஒதுக்கப்பட்டு, அதன் பிறகு திட்ட மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்டு தற்போது ரூ.1,977 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

# இவ்வார ராசிபலன்

## 07-07-2023 வெள்ளி தொடக்கம் 13-07-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** கவலைகள் ஒழியும் வாரம். விளையாட்டுத்துறையில் வெற்றி கிடைக்கும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். நண்பர்களால் உதவி உண்டு. கடன் பிரச்சனைகள் அகலும். தகுதிகள் உயரும். புதிய எண்ணம் உருவாகும். பெருமிதம் நிறைந்த காலம். பூமியால் லாபம் உண்டு. கல்வியில் ஆர்வம் உண்டு. மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளை வழி செலவுகள் கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் போகும். புத்தி சாதுர்யம் கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைகள் தீரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வெறுப்புக்கள் அகலும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். திருப்திகள் பெருகும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்பட்டு விலகும். காதல் கைகூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,4,1*
*அதிர்ஷ்ட நிறம்: சில்வர்கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* S,V




**ரிஷபம்:** ஆரோக்கியம் சீராகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் திருப்தி தரும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உறவுகளால் செலவுகள் கூடும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். கர்மவினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வார்த்தைகளில் நிதானம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சகோதர வழியில் சகாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* S,Q




**மிதுனம்:** வீண் விரயங்கள் குறையும் வாரம். முன்கோபத்தை குறைக்கவும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அரசு வழியில் கவனம் தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் மேம்படும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். துன்பங்கள் அகலும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,1,3*
*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* G,E




**கடகம்:** புகழும், புண்ணியமும் சேரும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டிய வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புண்ணியம் சேரும் காலம். ஆன்மீக ஈடுபாடு கூடும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். உடல்நலம் சீராகும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணவரவு கூடும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். செய்த்தொழில் சிறக்கும். பணநடமாட்டம் கூடும். களவுப்போன பொருள் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் கூடும். உயர்வு பெறும் காலம். திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,1,5*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* T,R



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** தொட்டது துலங்கும் வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். க்'ட காலம் மறையும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்தப் பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். மேன்மையான எண்ணம் உருவாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெருகும். விவேகம் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,7,6,1*
*அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* L,J




**கன்னி:** செல்வாக்கு பெருகும் வாரம். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. எண்ணங்கள் மாறுப்படும். தனவரவு தடைப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்திகள் வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். வெளியூர் பயணம் நன்மை தரும். நண்பர்களால் நன்மை கூடும். உடல் வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீகச் சொத்து கிட்டும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். குடும்ப பாசம் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் தொல்லை நீங்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைக்கூடும். மன சந்தோஷம் கூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 3,5,7,9*
*அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,D




**துலாம்:** இனிப்பானச் செய்திகள் வரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றிபெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பதவி உயர்வு தாமதமாகும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனச்செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி உறவில் தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். வேண்டும் வரம் கிட்டும். பெருமைகள் சேரும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,9*
*அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* P,U




**விருச்சிகம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். காரிய வெற்றி தரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. சுபகாரியம் கைகூடும். சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். வியாபாரம் வெற்றி தரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வெளிபூர் பயணம் உண்டு. புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். அவமானங்கள் அகலும். போட்டிகள் உருவாகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். தொட்ட காரியம் ஜெயமாகும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலமாக அமையும். பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மன அமைதி கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பணியாட்கள் ஆதரவு பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,9,7,1*
*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Y,N

***(தொடர்ச்சி _31_ பக்கம்)***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

## சங்கானை அரசடி வைரவர் ஆலயம் சங்கானை, யாழ்ப்பாணம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதைப் போற்றி வாழ்வது மானிட தர்மமாகும். எனினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வு முறை, சமுதாய அமைப்பு, பூகோள அமைப்பு இவற்றிற்கிணங்க தமக்கேற்ற வழிபாட்டு முறையைத் தெரிவு செய்து இறைவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். தாம் போற்றும் தெய்வீக வடிவங்களுக்கு அவரவர் பின்பற்றும் வழியில் கோவில்கள் அமைத்து வழிபாடியற்றி வருவது அன்றுதொட்டு இன்றுவரை காணப்படுகின்றது.

இறைவன் எங்கு நிறைந்திருப்பினும் கோயிலிலுள்ள திருவுருவங்கள் மூலமாகத் திருவருளை இலகுவில் பெறமுடியும் என்ற நம்பிக்கை, மக்களிடையே காலங்காலமாக வேரூன்றியுள்ளது. உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற தத்துவத்தின் வெளிப்பாடாக ஆலயங்கள் அமைந்துள்ளன. கோயில் வழிபாடும், பிரார்த்தளைகளும் தேச அமைதியையும், மன அதையையும் ஏற்படுத்தவல்லவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான தத்துவங்களைக் கொண்ட ஆலயங்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. இவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசடி வைரவர் ஆலயம் யாழ்ப்பாணத்தில் சங்கானைப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. காவல் தெய்வமான வைரவர் சிவனின் அம்சமாகக் கருதப்படுகின்றார். பிரமாவிற்கு அவதாரம் கிடையாது விஷ்ணுபகவான் பல அவதாரங்களைக் கொண்டவர். சிவனுக்கும் அவதாரம் கிடையாது. ஆனால் அவரது சிவாம்சமாக வீரபத்திரர், வைரவர் போன்ற தெய்வங்கள் காணப்படுகின்றன.

வைரவரைப் போற்றிவழிபடுவது சிவனை வழிபடுவதற்கு இணையானது. இத்தகைய வைரவரின் அம்சங்கள் நூற்றியெட்டாகக் காணப்பட்டபோதிலும், இவ் அம்சங்களுள் ஞானவைரவரை மக்கள் பெரிதும் போற்றி வழிபாடியற்றி வருகின்றனர். சங்கானை சந்தையில் விற்பனை, கொள்வனவு செய்துவரும் அயல் ஊரவர்களான, கிழக்கே பண்டைத்தரிப்பு, வடக்கே காரை நகர், மேற்கே வட்டுக்கோட்டை, வடக்கே சண்டிலிப்பாய் ஆகிய ஊர்களிலிருந்து செல்லும் மக்கள், அரசடி வைரவரை பயபக்தியோடு வழிபட்டுச் செல்வது வழக்கம்.

காவல் தெய்வமாக விளங்கும் அரசடி வைரவர் புரியும் அற்புதங்களை இவ்வூரவர்கள் மனதிருத்தி போற்றி வணங்குவர். உதாரணத்திற்கு ஒரு விடயத்தை நினைவுகூரலாம். கி.பி 1505 ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டு வரை முறையே போத்துக்கீசர், ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஆங்கிலேயர் என அந்நியர்களால் இலங்கை ஆளப்பபட்டது. வியாபாரநோக்கமாக வந்த இவ்வன்னியர் தமது மதத்தைப் பரப்புவதிலும், பிறமதங்களை அழிப்பதிலும், மதமாற்றம் செய்வதிலும் பேரார்வம் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர்.

சங்கானை அரசடி வைரவருக்கும், புன்னாலைக்கட்டுவன் கிருஷ்ணர் கோவிலுக்கும் நெருக்கமான வரலாற்று உறவு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் டச்சுக்காரர் புன்னாலை கிருஷ்ணர் ஆலயத்தின் ஒரு பகுதியை இடித்து, அதன் கற்களைக் கொண்டு ஒரு தேவாலயத்தை சங்கானையில் கட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்தனர். கோட்டையின் ஒரு பகுதி சங்கானை அரசடி வைரவர் ஆலயத்திலே இன்றும் காணப்படுவதாகக் கூறுவர்.

தேவாலயத்தைக் கட்டும் நோக்குடன் டச்சு ஊழியர்கள், பகலிலே பணிபுரிந்து தேவாலயத்தைக் கட்டிவிட்டு இரவிலே சென்றுவிடுவர். மறுநாள் வந்து பார்க்கும்போது கட்டியகோட்டை இரவிலே இடிந்து காணப்படும். இதனால் ஆத்திரமுற்ற டச்சு ஊழியர்கள் தமது ஆட்சியை விரும்பாத எதிராளிகள் செய்யும் வேலையென எண்ணி, பலரையும் விசாரணை செய்தனர். விசாரணையின் முடிவில் கோட்டையை ஓரிருவர்இணைந்து அழிக்கமுடியாதென முடிவு செய்து, தாம் கட்டிய கோட்டையை இரவிலே பாதுகாக்க, விசேட காவலாளிகளை நியமித்தளர். ஆனாலும் அவர்களால் கோட்டை இரவிலே உடைந்து விழுவதற்கான காரணத்தை அறிந்துகொள்ள முடியாது திகைத்தனர். இவ்வேளையில் இப்பகுதியில் வைரவர் சூலமொன்றினையும் மக்கள் கண்டெடுத்தனர். அதனை அருகிலிருக்கும் அரசமரத்தடியில் நிலைநிறுத்தி வழிபட ஆரம்பித்தனர். இவ்வெளிப்பாடு இறைவன் செயலென எண்ணிஈ மனதிருத்தி வைரவரை வணங்கி வாழ்த்தினர்.

**- வளரும்...**




## இவ்வார ராசிபலன்

*(30 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். நல்ல செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். எதிரிகளின் தொல்லை குறையும். பணத்தேவை அதிகரிக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களுக்கு பெருமை சேரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். நலம் காணும் காலம். நிர்வாகச் செலவு ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்யம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். முத்தான வாய்ப்பு பெருகும். படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி உண்டாகும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வேலை பளு குறையும். மாற்றங்களை சந்திப்பீர்கள். புதிய முயற்சி பலன் தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் தரும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும். இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. சொல்லில் கவனம் தேவை. அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புக்கள் கூடும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. தந்தையால் நலன் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் R,Q




**மகரம்:** மனதில் மகிழ்ச்சி ஏற்படும் வாரம். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மையுண்டு. குடும்ப தேவை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். எதிர்பாராத செலவு ஏற்படும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் ஏற்படும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். விவசாயிகள் பயன் பெறுவர். உடல் உ‘ணம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும் பொறாமைகள் விலகும். வெகுமானம் உண்டு. பொருள் சேர்க்கையுண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் அகலும். நன்மைகள் பெருகும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். சகோதரியால் லாபம் உண்டு. சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூத வழிபாடு, அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கும்பம்:** சாதனை படைக்கும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். வேண்டாத வி‘யங்கள் விலகும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோ பயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியும், மனஅமைதியும் கூடும். கடன் கச்சைகள் தீரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். முயற்சிகள் அதிகம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். நன்மைகள் நாடி வரும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். சட்டம் சாதகமாகும். பட்டம் பதவி தேடி வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,H




**மீனம்:** உதவி கிட்டும் வாரம். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை உயரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் லாபம் தரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் கூடும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புதமான காலம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. முன்கோபத்தை குறைக்க வேண்டும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பக்குவமான பேச்சு பயன் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். புதிய முதலீடு லாபம் தரும். தேக ஆரோக்கியம் சீராகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த வி‘யம் தாமதமாகும். தொல்லைகள் ஒழியும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் உண்டு. சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். ஆதாயம் பெருகும் காலம். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக் கூடி வரும். பொறியியல் துறை லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1422 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 7, 2023

# விரைவில் திரைக்கு வரவுள்ள கனடா ஆரபி புரடக்ஷன் தயாரிப்பான Finder திரைப்படத்தின் முதல்பார்வை பதாகை வெளியானது






நடிகர் விஜய் சேதுபதி மற்றும் நடிகர், இயக்குநர் எஸ் ஜே சூர்யா ஆகியோரின் வாழ்த்துக்களோடு வெளியிட்டப்பட்டுள்ள குனைெநச திரைப் படத்தின் ∴பர்ஸ்ட் லுக் !! ஐ தொடர்ச்சியாக பல திரையுலகப் பிரமுகர்கள் பாராட்டிய வண்ணம் உள்ளார்கள்.
பிரபல நடிகர் சார்லி நடிப்பில், "∴பைண்டர்" படத்தின் பரபரப்பான முதல் பார்வை பதாகை (∴பர்ஸ்ட் லுக்) வெளியானது !!
உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாகும் பரபரப்பான திரில்லர் திரைப்படம் "∴பைண்டர்" **Finder** திரைப்படத்தின் ∴பர்ஸ்ட் லுக் வெளியானது !!
**Arabi Production** அதிபர் கனடா வாழ் தொழிலதிபர் ரஜீவ் சுப்பிரமணியம், இயக்குனர் வினோத் ராஜேந்திரன் ஆகியோர் இணைந்து தயாரிக்க, நடிகர் சார்லி முதன்மை பாத்திரத்தில் நடிக்க, உண்மை சம்பவத்தின் அடிப்படையில் உருவாகும் பரபரப்பான திரில்லர் திரைப்படமான "∴பைண்டர்" படத்தின் (முதல்பார்வை பதாகை (∴பர்ஸ்ட்லுக்) வெளியானது. (உள்ளே விபரமான செய்தி 26ம் பக்கத்தில்)

# அவுஸ்த்திரேலியா வாழ் எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா கனடாவில் நடைபெறுகின்றது




அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளரும் தனது படைப்புக்களுக்காக பல விருதுகளைப் பெற்றவருமான எழுத்தாளர் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 8ம் பக்கம் உள்ள அழைப்பைப் பார்வையிடவும்.

# கனடா — பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் மஞ்சத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது



சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்களை பிரதம குருவாகக் கொண்டு இயங்கிவரும் கனடா- பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை 8ம் திகதி இரதோற்சவம் நடைபெறவுள்ளது என ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்கள் அறியத் தந்துள்ளார்கள்.


ஆலயத்திதன் மஞ்சத் திருவிழா கடந்த 30ம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

Sai Autism Learning Centre
647 444 4033
If they can't learn the way WE teach, we teach the way THEY learn.
Sathya Suresh
Social Service Worker
I am here to help my Tamil community with special needs.
Summer Workshop Starts July 5th

# ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கள பௌத்த மயமாக்கல்?

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



22 ஆண்டுகளுக்கு முன்னர் தாய்லாந்து அரசாங்கத்தால் இலங்கைக்குப் பரிசாக வழங்கப்பட்ட முத்துராஜா என்ற பெயருடைய யானை மீண்டும் தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. 4,000 கிலோகிராம் எடையிலான அந்த யானையை விமானத்தில் அனுப்புவதற்கு 700,000 டொலர் செலவிடப்பட்டதாகத் தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். தாய்லாந்தினால் பரிசாக வழங்கப்பட்ட அந்த யானையை இலங்கை சரியாகப் பராமரிக்காத காரணத்தால் அது நோய்வாய்ப்பட்டுள்ளது என்றும் அதனாலேயே அதை தாய்லாந்து திரும்ப எடுத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. (உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# நடனக் கலைஞர். "கலைமாமணி" சாகிர் உசைனை தனது அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட்



தமிழ்நாடு அரசின் கலைக் கல்லூரிகளின் கௌரவ மேற்பார்வையாளராக அண்மையில் பதவியேற்ற பின்னர் கனடாவிற்கு வருகை தந்துள்ள நடனக் கலைஞர். "கலைமாமணி" சாகிர் உசைன் அவர்களை தனது அலுவலகத்திற்கு அழைத்து பாராட்டிய கனடிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்கள் தான் மாகாண அரசியலில் காலடி எடுத்து வைத்த காலத்திலேயே கனடாவிற்கு வந்து அற்புதமான தமிழர் கலையாம் பரத நாட்டியத்தை கற்பித்தும் மேடைகளில் நிகழ்ச்சிகளை வழங்கியும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கின்ற தங்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று புகழாரம் சூட்டினார்.
(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker